வெளியீடு 4-6-2007 Issued 4-6-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, மார்ச் 26, 2007—தொகுதி 21—எண் 3**

**Monday, the 26th March, 2007—Volume 21—No. 3**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Chennai-600 009**

**[Price Rs. 3.00**

**26–3–2007**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. அரசினர் தீர்மானம்—** | |
| *விதி 32–ஐத் தளர்த்துதல்* | 81-82 |
| **2. அறிவிப்பு—** | |
| *மாற்றுத் தலைவர்கள் பட்டியல்* | 82 |
| **3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதம்—** | 82-210 |
| *திரு. சு.ப. வேலுமணி | 82-93 |
| *திரு. குத்தாலம் க. அன்பழகன் | 93,94,97-108 |
| திரு. சி. ஞானசேகரன் | 108-122 |
| திரு. தி. வேல்முருகன் | 122-138,139-140 |
| *திரு. பி. தங்கமணி | 140,142-146, 156-157, 159-165 |
| திரு. என். நன்மாறன் | 165-174 |
| *திரு. சு. குணசேகரன் | 174-180 |
| *திரு. நா. இராமகிருஷ்ணன் | 181-190 |
| திரு. கு. பிச்சாண்டி | 191-196 |
| திரு. என்.ஆர். ரங்கராஜன் | 196-205 |
| திரு. ம. குணசேகரன் | 205-210 |
| **4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 210-217 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 12, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 மார்ச் 26, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி".

உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவதுபோல ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று (26–3–2007) முதல் 30–3–2007 வரையிலான நாட்களுக்கு வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, 26–3–2007 முதல் 30–3–2007 வரையிலான நாட்களுக்குத் தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

[2007 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இன்று (26-3-2007) முதல் 30-3-2007 வரையிலான நாட்களுக்கு வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

## 2. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

1. திரு. ப. ரங்கநாதன்
2. திரு. துரை சந்திரசேகரன்
3. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
4. திரு. தி. வேல்முருகன்
5. செல்வி கே. பாலபாரதி
6. திரு. வை. சிவபுண்ணியம்

## 3. வரவு-செலவுத் திட்டம், 2007-2008, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

***திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை குனியமுத்தூர் நகரத் தலைவராகவும், கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணிச் செயலாளராகவும், [illegible] ஒன்றியக் கழகச் செயலாளராகவும், 2001-ல் தனிய[illegible]வராகவும் ஆக்கி, நடந்து முடிந்த

227485
சென்னை-600 008



2007 மார்ச் 26] *[திரு. சு.ப. வேலுமணி]

சட்டமன்றத் தேர்தலிலே பேரூர் தொகுதியில் போட்டியிட வாய்ப்புக் கொடுத்து, நான் வெற்றிபெறப் பிரச்சாரம் செய்து, 15,000 வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றிபெறச் செய்த, ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னால் வாராது வந்த மாமணிபோல், காய்ந்து சிவந்த கதிரவனின் சிகப்பினை, ஈந்து சிவந்த கரத்தாலே வென்ற எங்கள் வாய்மை மிக்க தூய்மைத் தலைவி, ஆறு கோடித் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் தாரகை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

1972 முதல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் பல்வேறு பொறுப்புக்களை வகித்து, கழகத்திற்காக உழைத்து மறைந்த என்னுடைய தந்தையை இன்று நினைவுகூர்ந்து, என்னை வெற்றிபெறச் செய்த பேரூர் தொகுதி வாக்காளர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா, சத்துணவுத் திட்டம் தந்த சரித்திர நாயகன், மனிதப் புனிதர், மாணிக்கத் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அலங்கரித்த அவையில் என்னுடைய பேச்சைப் பதிவு செய்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை என்னைப் பொறுத்தவரை, அரைகுறையாக, அவகாசம் இருந்தும் முதல் 8 பக்கங்கள் இல்லாத புத்தகம். அதனுள்கூட உப்பும் இல்லை, சப்பும் இல்லை. கடற்கரையோரம் அந்தி நேரத்தில் சிறுவர்கள் விளையாட்டிற்காகக் கட்டி விளையாடும் மணல் வீடுபோல உள்ளது. கூரை இல்லாத வீடு; ஓடாத கடிகாரம்; ஆடாத மயில்; பாடாத குயில்போல் உள்ளது என்று கூறினால் மிகையாகாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** கன்னிப் பேச்சு.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இல்லை. ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அற்புதமான நிதிநிலை அறிக்கையில் உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்கிறார். ஏட்டில் எப்படி உப்பும், சப்பும் இருக்க முடியும்?

[2007 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், பேசுங்கள்.

**திரு. சு.ப. வேலுமணி:** எனக்குக் கொடுத்த இந்தப் புத்தகத்தில் 8 பக்கங்கள் இல்லாமல் இருக்கின்றன, 9 ஆம் பக்கத்திலிருந்துதான் ஆரம்பிக்கிறது.

முற்பகல் 9–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலுமணி, 15 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குள் உங்கள் கருத்துகளைச் சொல்லுங்கள்.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் சமர்ப்பிக்கப்பட்ட 2006–2007 ஆம் ஆண்டுக்கான, அதாவது 22-7-2006 அன்று தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில், 3-வது பக்கத்தில், கூட்டுறவுக் கடன் ரூபாய் 6,866 கோடியைத் தள்ளுபடி செய்ததாகவும், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்யும் திட்டத்திற்கு ரூபாய் 1,435 கோடி இந்த ஆண்டுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எஞ்சியுள்ள 5,431 கோடி ரூபாய்க்கும், அதன்மீதான வட்டிக்கும் தேவையான ஒதுக்கீடுகள் படிப்படியாகச் செய்யப்படுவதன்மூலம், விவசாயிகள் தொடர்ந்து பயிர்க் கடன் பெறவும், இவ்வங்கிகளின் வைப்பீட்டாளர்கள் மற்றும் பணிபுரிபவர்கள் நலன் பாதுகாக்கப்படுவது உறுதி செய்யப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 2007–2008 ஆம் ஆண்டுக்குக் கூட்டுறவுக் கடனுக்காக 1,628 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டு, அதாவது சென்ற நிதியாண்டில் கடன் தள்ளுபடியில் இருந்த ரூபாய் 5,431 கோடி மற்றும் அதன்மீதான வட்டிக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கிராமப்புறங்களிலுள்ள ஏழை விவசாயிகள் குருவி சேமிப்பதுபோலப் பணத்தைச் சேமித்து, அதைக் கூட்டுறவு வங்கிகளிலே போட்டு வைத்திருக்கின்றார்கள். அவர்களுக்குத் தேவைப்படும்போது எடுத்துக்கொள்வது என்ற அடிப்படையில்தான் சேமிப்பைச் செய்கிறார்கள். ஆனால், அந்த விவசாயிகள் அசலையும் எடுக்க முடியாமல், வட்டியும் கிடைக்காமல் பல்லாயிரம் பேர் சிரமப்படுகின்றார்கள். 'எருது புண் காக்கைக்குத் தெரியாது' என்று கிராமங்களில் ஒரு பழமொழி வழக்கத்தில் இருக்கிறது. ஏழை எளிய விவசாயிகள் சிரமப்படாமல், அவர்களுக்குத் தேவைப்படும்போது



2007 மார்ச் 26] [திரு. சு.ப. வேலுமணி]

அசலை எடுக்கவும், வட்டி கிடைக்கவும் அரசு உரிய நடவடிக்கை எடுப்பது பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்தில், நிலம் இல்லாத ஏழை எளியவர்களுக்குத் தலா 2 ஏக்கர் வீதம் 55 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். இந்த நிதிநிலை அறிக்கையில், பக்கம் 5, பத்தி 13–ல், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு மூன்று கட்டங்களில் இதுவரை 71,755 ஏழை விவசாயிகளுக்கு 77,117 ஏக்கர் நிலம் பண்படுத்தி அளிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 2 ஏக்கர் என்ற வாக்குறுதியின்படி பார்த்தால், 71,755 பேருக்கு 1,43,510 ஏக்கர் நிலம் கொடுத்திருக்க வேண்டும். அதேபோன்று, 77,117 ஏக்கர் நிலத்தில் தரிசு நிலம் எவ்வளவு, பண்படுத்தப்பட்ட பிற நிலம் எவ்வளவு என்பதை என்னைப்போலவே இந்த நாட்டு மக்களும் அறிந்துகொள்ள ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு அதற்கு விளக்கம் அளிக்குமா எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.8–30 என்ற விலையில் மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுக்கும் நிலை இருக்கிறது. இதற்கு முன்பிருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ரூ.4-80 மானியம் கொடுத்து, கிலோ அரிசி ரூ.3-50-க்கு, குடும்பத்தினருக்கு மாதந்தோறும் 20 கிலோ அரிசியை வழங்கி வந்தது. அதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 950 கோடி மானியமாக வழங்கப்பட்டது. இந்த அரசு ஆட்சிக்கு வந்ததும், கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. இதை முந்தைய தி.மு.க. அரசுதான் ரூ.3-50-க்கு உயர்த்தியது. திரும்ப தி.மு.க. அரசுதான் இப்பொழுது இரண்டு ரூபாயாகக் குறைத்துள்ளது. இதை மலிவு விலை என்று மட்டும் எடுத்துக்கொள்ள முடியாது. அரிசியின் தரத்தை உறுதிப்படுத்த வேண்டும். தரமாக இருக்கும் அரிசி கேரளா, கர்நாடகம் போன்ற அண்டை மாநிலங்களுக்குக் கடத்தப்பட்டது போக, எஞ்சியுள்ள அரிசிதான் இங்கே விநியோகிக்கப்படுவதாக ஒரு கருத்து நிலவுகிறது.

'நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்'

என்பது மூதுரை. மலிவு விலை அரிசி என்ற திட்டத்தில் பயனாளிகள் புல்லாகவும், கடத்தல் பேர்வழிகள் நெல்லாகவும் இருக்கிறார்கள்.

அரிசிபோன்ற உணவுப் பொருட்களைக் கடத்தி, அப்பாவி ஏழை மக்கள் வயிற்றில் அடிக்கும் கொள்ளையர்கள்மீது, மணல் திருடர்கள்மீது பாயும் குண்டர் சட்டங்கள்போன்று கடுமையான சட்டங்கள்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று 2006–2007 நிதிநிலை அறிக்கையில் 13–வது பக்கத்தில் 30–வது பத்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. இங்கே கடத்துபவர்கள் குண்டர்களாக இருப்பதால் அந்தச் சட்டம் பாயவில்லைபோலும் என ஐயப்பாடு கொள்ள வேண்டியுள்ளது.

ரேஷன் கடைகளில் அத்தியாவசிய உணவுப் பொருட்களான பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் ஆகியவை வழங்கப்படும் என்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இது ஒன்றும் புதிது அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அரிசி, பருப்பு வகைகள், ரவை, பாமாயில், மிளகு, சீரகம், வெந்தயம், சோப்பு போன்ற பொருட்களைப் பொது விநியோக முறையில் விற்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால், பல கடைக்காரர்கள் இந்தப் பொருட்களை வாங்கினால்தான் அரிசியைக் கொடுக்க முடியும் என்று நிர்பந்தப்படுத்துவதாகப் புகார்கள் வந்தன. அரிசி தவிர, ரேஷன் கடையில் விற்பனை செய்யப்படும் இதர பொருட்களைத் தேவைப்பட்டால் மட்டுமே வாங்கலாம். தேவையில்லாத நிலையில் எந்த நுகர்வோரும் வாங்க வேண்டியதில்லை என்பது நியதி. அதனால், அரிசி, சர்க்கரை, கோதுமைபோன்ற உணவுப் பொருட்கள் தவிர மற்ற பொருட்கள் காலப்போக்கில் தவிர்க்கப்பட்டன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தற்போது விற்கும் விலைவாசி குறித்து மக்களைக் கேட்டால் கண்ணீர்விடுவார்கள்.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையின மக்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு, பயிற்சி போன்றவற்றில் வாய்ப்புப் பெற இட ஒதுக்கீடு செய்ய வேண்டியது அவசியம் ஆகிறது. இவ்வகையில் ஆந்திர மாநிலத்தில் இஸ்லாமியர்களுக்கு 5 சதவீத இட ஒதுக்கீடு செய்து அம்மாநில அரசு சட்டம் இயற்றியது. அதை எதிர்த்து நீதிமன்றம் சென்றனர். இட ஒதுக்கீடு சட்டம் இயற்றியது செல்லாது என்று நீதிமன்றத்தால் தீர்ப்புக் கூறப்பட்டது. நேரடியாக இட ஒதுக்கீடு செய்து சட்டம் இயற்றியது செல்லாது என அம்மாநில உயர் நீதிமன்றம் கூறிவிட்டது. தமிழ்நாட்டில் சிறுபான்மையின மக்களுக்கு உரிய இட ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்





ஒரு ஆய்வுக் குழுவை அமைத்து, ஓராண்டு காலத்திற்குள் அறிக்கை தருமாறு கேட்டுக்கொண்டார்கள். இதற்கிடையே சட்டப் பேரவைக்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டது. தேர்தல் பிரச்சாரத்தின்போது திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியினர், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சிறுபான்மையின மக்களுக்கு 5 சதவீத இட ஒதுக்கீடு செய்து சட்டம் போடுவோம் என்று வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். ஆட்சிக்கு வந்தவர்கள் இந்தச் சிறுபான்மையின மக்களுக்கு அமைக்கப்பட்ட குழுவின் காலத்தை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டித்ததோடு, அதன் உறுப்பினராக இருந்த இஸ்லாமியர் ஒருவரை மாற்றியும்விட்டார்கள். இது பற்றி சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும், சட்டம் ஏதும் போடாமல் இயக்குனரகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. யானையைப் பிடித்துப் பானைக்குள் நுழைக்கும் எத்தனையோ திட்டங்களை நினைத்த மாத்திரத்தில் தடாலடியாக இயற்றும்போது, சிறுபான்மையின மக்களுக்கு உரிய இட ஒதுக்கீடு செய்யாமல், மத்திய அரசு நியமித்த நீதியரசர் இராஜேந்தர் சச்சார் குழுவின் நியமனத்தைக் காட்டித் தமிழக அரசு சாக்குப் போக்குக் காட்டாமல், இனியாவது திறந்த மனதோடு சிறுபான்மையின மக்களுக்கு உரிய இட ஒதுக்கீடு செய்ய இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை 30 ஆயிரத்திலிருந்து 60 ஆயிரமாக உயர்த்தப்படும் என்றும், 500 கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு 25 கோடி ரூபாயில் கட்டடங்கள் கட்டப்படும் என்றும் நிதிநிலை அறிக்கையின் 19 ஆம் பக்கத்தில், 48–வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாற்று முறையில், அதாவது shift முறையில் வகுப்பு நடத்துவதற்கு 30 ஆயிரம் மாணவர்களுக்குப் பதிலாக 60 ஆயிரம் மாணவர்களைச் சேர்த்தால் வகுப்பறைகள் அதிகம் தேவைப்படும் என்பதைவிட, இரண்டாவது shift–க்குத் தேவையான கல்லூரி ஆசிரியர்களைப் பற்றியோ, அவர்களை நியமிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு பற்றியோ இதிலே ஒன்றும் குறிப்பிடவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள பெண்களின் முக்கியத் தேவையான பொருளாதாரப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்களைத்

துவங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். 1.93 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டன. இவற்றில் 32,44,000 பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். இந்த உறுப்பினர்கள் 621.72 கோடி ரூபாய் அளவிற்குச் சேர்த்து, 1,055.19 கோடி ரூபாய் அளவிற்குக் கடனாகப் பெற்று சுய தொழில்களைச் செய்யத் தொடங்கினர். புதிய குழுக்கள் அமைப்பதற்கும், பயிற்சிகள் அளிக்கவும், தொழில் முனைவோர் மேம்பாடு ஆகியவற்றிற்காகவும் 2005–2006 ஆம் ஆண்டு 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 4.7 இலட்சம் பெண்களுக்குத் தொழில் தொடங்க உதவும் வகையில் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி மாண்புமிகு அம்மா அவர்கள் அரசால் கொண்டு வரப்பட்டது. இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் 48,74,722 உறுப்பினர்களைக்கொண்ட 2,99,787 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. இக்குழுவினர் சேமித்த தொகை ரூ.889.16 கோடி. இவர்களுக்கு 1,563.86 கோடி ரூபாய் அளவில் கடனுதவிகள் வழங்கப்பட்டன. இவ்விதம் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் இந்த ஆட்சியில் கண்ணைக் கட்டிக் காட்டில் விடப்பட்டதுபோல் இன்றைக்கு ஆளாகியிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்துவிட்டு வேலையின்றி இருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போருக்கு மாதம் ஒன்றிற்கு ரூபாய் 300 வரை உதவித் தொகை வழங்க 11–11–2006–ல் திட்டம் தொடங்கப்பட்டு, முதல் கட்டமாக 2,06,766 பேருக்கும், 24–2–2007–ல் இரண்டாவது கட்டமாக 1,03,629 பேருக்கும் என மொத்தம் 3,10,395 இளைஞர்கள் பயன்பெற்று வருகின்றனர் என்று நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருப்போரின் எண்ணிக்கை சுமார் 55 இலட்சத்து 27 ஆயிரத்து 774 என இருந்தது. இந்த நிதிநிலை அறிக்கையில் இந்தத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது, 3 இலட்சம் இளைஞர்கள் மட்டுமே வேலையில்லாமல் இருப்பதுபோன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி இருப்பதாக நான் கருதுகிறேன். வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, புதுப்பித்து, மீண்டும் புதுப்பித்து வேலைவாய்ப்பே கிடைக்கவில்லை என்று விரக்தியின் விளிம்பிற்குப் போய், பிறகு புதுப்பிப்பதையே கைவிட்டுவிட்டார்கள். இவர்களுக்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்பதை இளைஞர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.





முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 முதல் 2006 வரை நடைபெற்ற மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆளுமையில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு 100 சதவிகிதம் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வந்ததை இந்த நாடு கண்கூடாகவே கண்டிருக்கிறது. ரவுடிக் கும்பல் அறவே ஒடுக்கப்பட்டு, கந்துவட்டிக்காரர்கள் ஒழிக்கப்பட்டனர். கூலிப்படைத் தலைவர்களும், அவர்தம் கும்பல்களும் செயலிழக்கச் செய்யப்பட்டனர். கொலை, கொள்ளை, ஆதாயக் கொள்ளை ஆகியவற்றின்மீது உடனடியாகப் பாரபட்சம் இல்லாமல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சீரான முறையில் விசாரணை நடத்தப்பட்டு, நீதிமன்றங்களின்மூலம் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், இப்போது காவல் துறை அதிகாரிகளின் கைகள் கட்டப்பட்டுள்ளன. அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் மனச்சோர்வு அடைந்துள்ளனர். ஒரு சில அதிகாரிகள் நேர்மையோடு செயல்பட்டால், அதிகார மையங்களின் தொல்லை; வாய்மொழியைக் கேட்கவில்லை என்பதற்காக வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுப் பந்தாடப்படுகின்றனர். வேலை செய்தே பழக்கப்பட்டுப் போன பல அதிகாரிகள் மன உளைச்சலுக்கு ஆளாகியிருப்பதாகவும், மூத்த ஐ.பி.எஸ். அதிகாரிகள் சிலர் விருப்ப ஓய்வு பெற்றுக்கொண்டு, பிறகு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் இப்போது பெறுவதைவிட 2 மடங்கு, 3 மடங்கு சம்பளத்தில் வேலைக்குச் சேரத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற தகவலும் எனக்குக் கிடைத்திருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இன்றைய சூழ்நிலையில், பொய் வழக்குகள் புனைவதும், பல வழக்குகளில் F.I.R. போடக் கூடாது என்று நிர்பந்திக்கப்படுவதும் போன்ற நிகழ்வுகள் சர்வசாதாரணமாகிவிட்டன. உதாரணமாக, 10–6–2006 அன்று பத்மா என்ற 20 வயதுப் பெண் என்னுடைய தொகுதியில் காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்கள் அளித்த தவறான சிகிச்சையால் அந்தப் பெண்மணி உடனே இறந்துவிட்டார். கோவை அரசு மருத்துவமனையில் அவரது உடல் முழுவதும் நீல நிறமாகக் காணப்பட்டதால், அப்பெண்மணியின் உடலைப் பெற்றுக்கொள்ள மறுத்து; மருத்துவமனையில் மறியலில் ஈடுபட்டனர். அப்போது அங்கு சென்ற நான் R.D.O. விசாரணைக்கு ஏற்பாடு செய்கிறேன் என்று கூறி, உறவினர்களை அழைத்துச் சமாதானம் செய்தேன். பிறகு கோட்டாட்சியர் வந்து பேச்சுவார்த்தை நடத்தினார். உடனே இந்த

[திரு. சு.ப. வேலுமணி] [2007 மார்ச் 26

அரசு, சமாதானம் செய்யச் சென்ற என்மீது இந்திய தண்டனைச் சட்டம் 143, 188 read with 7(1)(a) பிரிவுகளில் பொய் வழக்குப் போட்டது. கோவை Race Course காவல் நிலையத்தில் 11-6-2006 ஆம் தேதியன்று இந்த வழக்கைப் பதிவு செய்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி வரும்போதெல்லாம் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை, பொய் வழக்குப் போடும் கலை தலைவிரித்தாடுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலுமணி, உரையை முடியுங்கள்.

**திரு. சு.ப. வேலுமணி:** அ.இ.அ.தி.மு.க.வினர்மீது அதிகமான பொய் வழக்குகள் போடப்படுகின்றன என்று தினசரிப் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 நிமிடங்களைத் தாண்டிவிட்டது. (குறுக்கீடு) எல்லோருக்கும் இதேமாதிரிதான்.

**திரு. சு.ப. வேலுமணி:** சென்ற முறை ஆட்சியின்போதும் இதேநிலைதான். இப்போது ஆட்சியின்போதும் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது என்று ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** B.A.C.யில் அன்றைக்கு நீங்களும் இருந்துதானே முடிவு எடுக்கப்பட்டது?

**திரு. சு.ப. வேலுமணி:** ஏராளமான பொய் வழக்குகள் போடுவதாகப் புகார்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. உதாரணமாக, சமீபத்தில் நடைபெற்ற உள்ளாட்சி election-ல் காவல் துறையினரின் அத்துமீறல்கள் பற்றி ஆளுங்கட்சியின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களே பத்திரிகைகளிலும், தொலைக்காட்சியிலும் குறை கூறியதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் நடைபெற்ற 58-வது சுதந்திர தின விழாவின்போது St. George கோட்டையில் கொடியேற்றி வைத்து அன்றைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நாட்டின் முதுகெலும்பான உழவர்கள் பாதுகாப்பிற்கென உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டதைக் கொண்டு வந்தார்கள். 2001 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அன்றைய தி.மு.க. ஆட்சியில் விவசாயத் தொழிலாளர்களுக்கென ஒரு திட்டத்தை அறிவித்து இருந்தார்கள்.



2007 மார்ச் 26] [திரு. சு.ப. வேலுமணி]

அதில் உறுப்பினராவதற்கு ஒரு முறை செலுத்தும் தொகை ரூ.100/- என்று கூறப்பட்டிருந்தது. அதன்மூலம் விவசாயத் தொழிலாளர்களுக்குத் தேவையான நிதியாதாரம் செய்யப்படவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2005 ஆம் ஆண்டில் கொண்டு வந்த திட்டத்தில் விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் ... (மணியடிக்கப்பெற்றது)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** கன்னிப் பேச்சு.

**திரு. சு.ப. வேலுமணி:** சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்றைக்கு B.A.C.யில் எடுத்த முடிவுதானே இது?

**திரு. சு.ப. வேலுமணி:** ஒரு கோடியே 37 இலட்சம் பேர் சேர்ந்தார்கள். 18 வயது முதல் 65 வயதுடைய விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு, குறு விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர ரூ.10/- கட்டணம்; அதையும் அரசே செலுத்தும் என்று அறிவித்தார்கள். இத்திட்டத்தின் பயனாக, விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த வாரிசுகளுக்குக் கல்வி, மேல்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழிற்கல்வி, திருமண உதவி எனப் பல்முனை உதவித் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. (குறுக்கீடு)

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. சு.ப. வேலுமணி:** இதன் பிறகு, ரூ.750 கோடியை ஒதுக்கி, அந்த நிதியைக்கொண்டு 25 இலட்சம் பேருக்கு கலர் டி.வி. கொடுத்து முடித்தால், அதன்மூலம் குடும்பத்தினர் நடத்தும் ஊடக நிறுவனத்திற்கு வருடந்தோறும் 600 கோடி ரூபாய் வருமானம் வரும் என நீங்கள் அதில்தான் கவனம் செலுத்தினீர்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு நிதி ஒதுக்கினால் என்ன ஆதாயம் கிடைக்கப் போகிறது என்று விவசாயத் தொழிலாளர்களை இந்த அரசு ஏமாற்றுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிட்டீர்களா?

**திரு. சு.ப. வேலுமணி:** எனது சட்டமன்றத் தொகுதியில் குனியமுத்தூர் நகராட்சி, குறிச்சி நகராட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர், ரோடு, சாக்கடை, தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகளை மத்திய அரசிடமிருந்து

[திரு. சு.ப. வேலுமணி] [2007 மார்ச் 26

Urban Infrastructure Development Scheme for Small and Medium Towns என்ற திட்டத்திலிருந்து செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் தொகுதி matter–ஐத்தான் பேசுகிறார்.

**திரு. சு.ப. வேலுமணி:** அதைப்போலவே, பூசாரிபாளையம், சீரநாயக்கன்பாளையம்போன்ற பகுதிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் பாதாளச் சாக்கடை வசதி உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, வெள்ளனூர் பேரூராட்சியில் மாநகராட்சிக் குப்பைகள், கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதால், 50 ஆயிரம் மக்களுக்கு வாழ்க்கைப் பிரச்சினை; சுற்றுப்புறச் சுகாதாரக் கேட்டால் பல்வேறு கொடிய நோய்கள் தொற்றுகின்றன. இதனை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை, அரசு மருத்துவமனைக் கட்டடங்கள் விஸ்தரிக்கப்படாமல் இருக்கின்றன. அங்கே இருதய சிகிச்சைப் பிரிவு கொண்டு வரப்பட வேண்டும். விபத்து சிகிச்சைப் பிரிவைக் கொண்டு வர இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன். எனது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற கோரிக்கைகள் ஏதாவது இருந்தால், எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை, இருங்கள். அதேபோன்று, பில்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 2-ஐ மதுக்கரை ஒன்றியத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த ஆழியாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம், குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகளுக்கு விரைவில் செயல்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன். (குறுக்கீடு) அவரிடம் எத்தனையோ முறை சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 முதல் 2001 வரை நடைபெற்ற ஆட்சியின்போது மதுபான விற்பனை ஏல முறை சிண்டிகேட்மூலம் ஐந்து ஆண்டுகள் அரசுக்குக் கிடைத்த வருமானம் 12,712.98 கோடி ரூபாய்.



2007 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலுமணி, நேரம் ஆகிவிட்டது. உட்காருங்கள்.

**திரு. சு.ப. வேலுமணி:** 2001 முதல் 2006 வரை அம்மா அவர்களின் அதிரடியான நடவடிக்கையால் டாஸ்மாக்மூலம் விற்பனை செய்ததில் அரசுக்குக் கிடைத்த வருமானம் 21,942.39 கோடி ரூபாய். முந்தைய ஐந்து ஆண்டு கால ஆட்சியில் கிடைத்ததைவிட 9,229.41 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் அம்மா ஆட்சியில் கிடைத்தது. அதேபோல மணல் குவாரி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன். (குறுக்கீடு) சொல்லிவிட்டேன். எவ்வளவோ time கொடுத்தாகிவிட்டது. No, no. உங்களுக்குக் கொடுத்தது 15 நிமிடங்கள்தான். ஆனால், 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) திரு. அன்பழகன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், எல்லோரும் சேர்ந்து எடுத்த முடிவுதான் அது.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மன்றத்தில், 13–வது சட்டப் பேரவையில், சொன்னதைச் செய்து, செய்வதைச் சொல்லி . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், உட்காருங்கள். திரு. வேலுமணி, உரையை முடியுங்கள் சீக்கிரம். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 85 பக்கங்களையும், 108 பத்திகளையும்கொண்ட இந்த நிதிநிலை அறிக்கை தமிழக மக்களுக்குக் கானல் நீர். இன்றைய முதல்வர் கதாநாயகனாக நடித்த காகிதப் பூ நாடகத்தில் பூ என்ற சொல் இருந்தது. ஆக மொத்தம், இந்த நிதிநிலை அறிக்கை வெறும் ஏட்டுச் சுரைக்காய்; கறிக்கு உதவாது. இதன்மூலம் தமிழ்நாட்டு மக்களின் காதுகளில் பூச் சூட்டியிருக்கிறீர்கள். தமிழக மக்களுக்கு எப்போது விடிவு காலம் என்றால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தால்தான் என்று கூறி, முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

[2007 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் . . .

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடு கிடையாது, உட்காருங்கள்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** 13-வது சட்டப் பேரவையில், சொன்னதைச் செய்து, செய்வதைச் சொல்லி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வைப்புத் தொகையைத் திரும்பப் பெற முடியாத நிலையிலே பல பேர் திரும்பிச் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். வைப்புத் தொகையைப் பொறுத்தளவிற்கு, 4,474 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவற்றிலே 713 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் 150.28 கோடி ரூபாய், அதற்கு வட்டி 20.34 கோடி ரூபாய், ஆக மொத்தம் சேர்ந்து 170.62 கோடி ரூபாய் இன்றைக்கு திரும்பத் தரப்பட வேண்டும். இவை எல்லாம் இந்த 8 மாத கால ஆட்சியிலே நடைபெற்றதல்ல. 30-6-2006-க்கு முன்னால் வைப்புத் தொகை கொடுக்க வேண்டிய நிலை ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திலும் இருந்தது. அதைத் திரும்பக் கொடுக்க வேண்டுமென்று முயற்சி எடுத்து, ஏற்கெனவே கடன்களைத் தள்ளுபடி செய்ததன்மூலமாக 8 சதவிகித வட்டியைக் கணக்கிட்டு அரசாங்கம் ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் பணம் அனுப்பியிருக்கிறது. 250 கோடி ரூபாய் என்று கணக்கிட்டு, 100 கோடி ரூபாயை முதலிலே அனுப்பிவிட்டோம். இரண்டாவதாக 150 கோடி ரூபாய் அனுப்புவதற்கு அரசு இன்றைக்கு முன்மொழிவுபெற்று, அதை அனுமதித்திருக்கிறது. எனவே, ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்கும், 8 சதவீதப் பணம் போகிறது. இது தவிர, சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்குக் கடன் தர வேண்டும் என்ற அடிப்படையிலே, விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் கொடுக்க வேண்டும் என்று 1,235 கோடி ரூபாய் பணத்தைக்



2007 மார்ச் 26] [திரு. எ.வ. வேலு]

கொடுத்தார்கள். அவையெல்லாம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு, இப்போது திரும்பவும் அதுவும் வசூலாகிக்கொண்டு இருக்கிறது. எனவே, அந்த வட்டி 8 சதவிகிதமும், விவசாயிகளுக்காகக் கொடுக்கப்பட்ட கடனான 1,235 கோடி ரூபாயும் திரும்பவும் வருகிற இந்தப் பணத்தை வைத்து ஆங்காங்குள்ள 713 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் கொடுப்பதற்காக அரசாங்கம் கொடுத்து இருக்கிறது. இதுவும் தவிர, ஆங்காங்கே ஏதாவது பிரச்சினைகள் இருக்கும் என்று சொன்னால், உயர்மட்டக் குழு அதிகாரிகளை வைத்து ஒரு குழு அமைத்து, எங்கெங்கு என்று பரிசீலனை செய்து, அவற்றையெல்லாம் திரும்பக் கொடுப்பதற்காக இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

(முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது 4,000-க்கும் மேற்பட்ட சங்கங்கள் இருக்கின்றன, அவற்றிலே 713 சங்கங்களிலே இது நிவர்த்தி செய்யப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். வைப்பு நிதியை ஏழையெளிய மக்கள் அங்கே போடுகிறபோது, அந்தக் கால அவகாசம் முடிந்ததற்குப் பிறகு அவர்கள் திருப்பிக் கேட்கிறபோது, தேவை என்று கருதுகிறபோது, அதை வழங்க முடியாமல் பல சங்கங்கள் இருக்கின்றன. உயர்மட்டக் குழு மட்டும் அமைத்தால் போதாது. கூட்டுறவுச் சங்கங்கள் திவாலாக இருக்கிற நிலையில், நீங்கள் எப்படி அதை வழங்கப் போகிறீர்கள் என்பதை மட்டும் உங்கள்மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலுமணி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் நான் விளக்கம் கொடுத்தேன். 713 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள்தான் இந்த நிலையிலே இருந்தன. அது இப்போது அல்ல. அதுதான் தேதியைக் குறிப்பிட்டேன்; 30-6-2006க்கு முன்னால். அந்தப் பணம் கொடுப்பதற்கு,

[திரு. எ.வ. வேலு] [2007 மார்ச் 26

ஏற்கெனவே விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வதன்மூலமாக, 8 சதவீத வட்டியைக் கணக்கிட்டு, அரசாங்கம் 250 கோடி ரூபாய் என்று அதைக் கணக்கிட்டு, ஏற்கெனவே 100 கோடி ரூபாய் பணத்தைக் கொடுத்துவிட்டது. ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் அந்தப் பணம் சென்று இருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயக் கடன் கொடுக்க வேண்டும் என்று சொன்னதன் அடிப்படையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின்மூலமாக 1,235 கோடி ரூபாய் விவசாயக் கடன் கொடுத்து இருக்கிறோம். அந்தப் பணம் இப்போது திரும்பவும் வசூலாகிக்கொண்டு இருக்கிறது. ஏனென்றால், அந்தப் பணத்தை இதன்மூலமாக ஈடு செய்ய முடியும். அதோடு மட்டுமல்ல; இந்த ஆண்டும் இந்த பட்ஜெட்டிலே நாங்கள் விவசாயக் கடனுக்குப் பணம் ஒதுக்கி இருக்கிறோம். இந்தப் பணத்தையும் கொடுக்கிறோம். அதுவும் திரும்ப வர இருக்கிறது. ஆகவே, இந்தப் பணத்தையெல்லாம் வைத்துத்தான் சரி செய்ய முடியும். இதற்கு மேலும், இவர் சொன்னதைப்போல, அவசரக் காலத்தைக் கருதி, டாக்டருக்குப் படிக்கிற ஒரு விவசாயி இருக்கிறான் என்று சொன்னால், மருந்துச் செலவுக்கு என்று சொன்னால், அதுபோன்றதொரு அவசரத்தைக் கருதி, அதற்குத்தான் உயர்மட்டக் குழு. அதை அறிந்து, உடனுக்குடன் அதைத் தர வேண்டும் என்று இந்த அரசாங்கம் கருதுகிற காரணத்தால்தான், இந்தத் திட்டங்களையெல்லாம் செய்து இருக்கிறோம். ஆனால், இது இப்போது ஏற்பட்டதல்ல. 30–6–2006–க்கு முன் ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய திரு. செங்கோட்டையன் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகக் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், பேசுங்கள். (குறுக்கீடு) No, No. குறுக்கீடுகளுக்கு அனுமதி இல்லை. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன சொல்லப் போகிறீர்கள்?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், புதிய பயிர்க் கடனாக 2006–2007–க்கு 1,235 கோடி ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், இன்றைய நிதிநிலை அறிக்கையில்—2007–2008 நிதிநிலை அறிக்கையில், சென்ற 2006–2007 ஆம் ஆண்டு 1,153 கோடி ரூபாய் அளவிலான புதிய பயிர்க் கடன்கள் இதுவரை வழங்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. எது உண்மையான கணக்கு என்பதனை நான் அறிய விரும்புகிறேன்.



2007 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் குறிப்பிட்டேன். 1,235 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் 1,153.61 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) இருங்கள். அதற்கடுத்து, மத்திய காலக் கடனாக ரூ.70 கோடி. அதையும் கொடுத்திருக்கிறோம். அஃதன்னியில், இன்னும் தேதி இருக்கிறது. 30 ஆம் தேதிக்குள் அனைத்தும் கொடுப்பதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளும் எடுத்து, இந்த இலக்கை அடைந்துவிடுவோம். எங்களுடைய மானியக் கோரிக்கை வருவதற்கு முன்னால் இதை அடைந்து விடுவோம். ஆங்காங்கே மனுக்களை எல்லாம் பெற்று இருக்கிறோம். ஆக, ஒதுக்கப்பட்ட பணம், (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். ஒதுக்கப்பட்ட பணம் 1,235 கோடி ரூபாயில், (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. சொல்வதைக் கேளுங்கள். 1,235 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட பணம். இதுவரை 1,153.61 கோடி ரூபாய் விவசாயக் கடன் கொடுக்கப்பட்டுவிட்டது. மேலும், மத்திய காலக் கடன் ரூ.70 கோடி கொடுக்கப்பட்டுவிட்டது. மேற்கொண்டு மனுக்கள் எல்லாம் வந்து இருக்கின்றன. குறைந்திருக்கிற இந்த இலக்கை இன்னும் இரண்டொரு நாட்களில் முடித்துவிடுவோம். ஆக, அந்தப் பணத்தை இப்போது திரும்பவும் மொத்தமாகக் கொடுத்துவிடுகிறோம். அதைத்தான் குறிப்பிட்டேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஹசன் அலி, உட்காருங்கள் சார். குறுக்கீடுகளுக்கு அனுமதி இல்லை. உட்காருங்கள்.

முற்பகல் 10–00

***திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் 13–வது சட்டப் பேரவையில், சொன்னதைச் செய்து, செய்வதைத் சொல்லி ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் அமைதியாக உட்காருங்கள். உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கிடக் கூடாது.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** 2007–2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தைத் தொடங்கி வைக்கிற இந்த மாபெரும் பேறினை வழங்கிய, ஜனநாயகத் தத்துவத்தின் பரிணாம வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்துகொண்டிருக்கிற நம்முடைய

முதல்வர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்டேகு செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தத்தின்படி 30-11-1920-ல் நிகழ்ந்த முதல் பொதுத் தேர்தலில் நீதிக் கட்சி வெற்றிபெற்று, திரு. சுப்பராயலு ரெட்டியார் அவர்கள் தலைமையில் முதல் அமைச்சரவை பொறுப்பேற்றது. அதைப்போல, இந்திய அரசு சட்டத்தின்கீழ் ஜூலைத் திங்களில் சென்னை சட்டமன்றப் பேரவைத் தேர்தல் நடைபெற்று, 14-7-1937 முதல் இந்தச் சட்டமன்றப் பேரவைக் கூட்டம் தொடங்கியது. 60 ஆண்டுகளுக்குப் பின்னர் 14-7-1997-ல் சட்டமன்றப் பவள விழாவையும், சட்டப் பேரவையினுடைய வைர விழாவினையும் சிறப்பாக நடத்திக் காட்டி, இந்த மாமன்றத்தினுடைய சிறப்பையும், பெருமையையும் உலகத்திற்கு உணர்த்தியவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1957 முதல் 2007 வரை ஏறத்தாழ 50 ஆண்டு கால வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தின் ஐம்பெருங்காப்பியமாக, ஐம்பெரும் அறிஞராக, ஐந்தாம் முறை முதல்வராகப் பதவி ஏற்றிருக்கிற நமது ஒப்புயர்வற்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் பணியினைப் பாராட்டி (மேசையைத் தட்டும் ஒலி)--10-5-2007 அன்று இந்த அவையில், தமிழகத்திலே பிறந்த இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவர் அவர்கள் நமது முதல்வர் அவர்களின் 50 ஆண்டு கால அரும்பணியினைப் பாராட்டி உரையாற்ற இருக்கிற இந்த நல்ல தருணத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி மகிழ்கிறேன்.

சிங்க நடையும், சிங்காரத் தமிழ்த் தென்றல் நடையும் தன் நடையாகக் கொண்ட கோமான், பேசும் தமிழாய் விளங்கும் பேராசிரியர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 2½ மணி நேரம் இந்தப் பேரவையில் அளித்த நிதிநிலை அறிக்கை—வரவு-செலவுப் பட்டியல் மட்டும் அளிக்கவில்லை; அனைத்துத் தரப்புத் தமிழக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நிதிநிலை அறிக்கையாக அளித்து உள்ளார்கள் என்பதையும் இந்த மன்றத்திலே பதிவு செய்துகொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதிநிலை அறிக்கை என்பது, புத்தகத்தை முழுமையாக வாசித்தவர்களுக்குத் தெரியும். இந்த நிதிநிலை அறிக்கை, ஒவ்வொரு துறைக்கும் போடப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையாக விளங்குகிறது. அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்ட மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையை அளித்த அந்தத் துறையினுடைய அமைச்சரான, தமிழகத்தைச் சார்ந்த நம்முடைய திரு. ப. சிதம்பரம் அவர்கள்





குறிப்பிடுகிறபொழுதுகூட, மத்திய அரசால் அளிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை, Agriculture-oriented Budget என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய நிதிநிலை அறிக்கையை--தலைவர் கலைஞர் அவர்கள் எண்ணப்படி நிதி அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை அவர் பாராட்டுகிறபொழுது, வேளாண்மைத் துறைக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், தமிழ் மக்களின் நல்வாழ்விற்கும் நல்ல பல திட்டங்களை அளித்திருப்பது பாராட்டுக்குரியது என்று கூறி, முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி தெரிவித்திருக்கிறார் என்பதை, பேசியவர்களின் சிந்தனைக்கு உணர்த்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆம். இவ்வளவு அறிவிப்புக்கும் பின்னால் துண்டு விழுவது ரூபாய் 101.38 கோடி என்பது மிகப் பெரிய வியப்பை அரசியல் வல்லுநர்கள் மத்தியில் ஏற்படுத்தி இருக்கிற நிதிநிலை அறிக்கையைத்தான் இன்றைக்கு நாம் பாராட்டிக்கொண்டிருக்கிறோம். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை நலன் காக்கும் பட்ஜெட்டாக இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கையில் பன்முகப் பரிணாம வளர்ச்சி நிதிநிலை அறிக்கையாக அமைந்துள்ளது.

வேளாண்மைத் துறை, கூட்டுறவுத் துறைக்கு 31-3-2006 வரை உள்ள கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, 22 இலட்சத்து 39 ஆயிரத்து 487 விவசாயிகளுக்கு சுமார் 7,000 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் தொடர்ந்து செயல்பட 1,628 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறது. புதிய பயிர்க் கடன் வழங்கிட இந்த நிதியாண்டிற்கு 1,360 கோடி ரூபாய் கடன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு வட்டி விகிதம் 7-லிருந்து 5 ஆகக் குறைக்கப்பட்டு, அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2007 மே-ஜூன் திங்களில் நடத்தப்படவுள்ள கூட்டுறவுத் தேர்தல் பொது மக்கள் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது. வறட்சி, வெள்ளம் போன்றவற்றால் ஏற்படும் பயிர் இழப்புகளுக்கு, 10 இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பயிர்க் காப்பீட்டிற்காக ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கொள்முதல் பணி சிறந்திட 1,100 நேரடி கொள்முதல் நிலையங்களுக்கு நவீன எடை இயந்திரங்கள் அளிக்கப்பட உள்ளன என்கிற அறிவிப்பு; ஏழை விவசாயிகள் மற்றும்

[திரு. குத்தாலம் க. அன்பழகன்] [2007 மார்ச் 26

விவசாயத் தொழிலாளர்களுடைய குடும்பங்களின் துயர் துடைப்பதற்கு, தஞ்சை மாவட்டத்து விவசாயிகள் எலிக் கறியை உண்டுகொண்டிருந்த அந்தக் காலக்கட்டம் போய், இன்றைக்கு அவர்களுக்கென்று தனி நல வாரியம் அமைத்துத் தந்து, 1.15 கோடி பயனாளிக் குடும்பங்கள் பயன்பெறுவதற்கு 152 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை டெல்டா மாவட்டத்தின் சார்பிலும், (மேசையைத் தட்டும் ஒலி) நானும் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற முறையிலும் வரவேற்று மகிழ்கிறேன்.

*முற்பகல் 10–05*

காவிரி நதி நீர்ப் பிரச்சினை. தமிழ்நாட்டினுடைய ஜீவாதாரப் பிரச்சினையாக இருக்கிற அந்தப் பிரச்சினையில்--'முடியாது என்ற சொல்லே எனது அகராதியில் கிடையாது' என்று முழங்கியவன் கார்சிகா நாட்டு இளைஞன் நெப்போலியன். அவனது சாம்பல் நிறக் கண்களிலேதான் பிரான்ஸ் தேசத்தினுடைய எதிர்காலமே அமைந்திருக்கிறது என்று சொன்ன காலங்களில்--பிறர் கைவிட்டுவிடுகிற காரியங்களை விரைந்தினிது முடிக்கின்ற வினை வல்லாளராக நமது முதல்வர் அவர்கள் அரசாட்சி செய்கிறார் என்பதற்கு, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குக் காவிரி நடுவர் நீதிமன்றம் அளித்திருக்கிற தீர்ப்பே எடுத்துக்காட்டு. 1892–லே துவங்கி, 1924–ல் சென்னை. ராஜதானிக்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் ஏற்பட்ட பேச்சுவார்த்தை, அதற்குப் பின்னால் 50 ஆண்டுகள் கழித்து உபரி நீருக்கு நீங்கள் அமர்ந்து பேசிக்கொள்ள வேண்டும் என்று போடப்பட்ட அந்த ஒப்பந்தம் 1974–லே காலாவதி ஆகிவிட்டது என்ற நேரத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குத் தொடர்ந்தபோது, அம்மையார் இந்திரா காந்தி அவர்கள் அழைத்து, "மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளைப் பேசித்தான் தீர்த்துக்கொள்ள வேண்டும்" என்று கூறியதன் அடிப்படையில், அந்த வழக்கை வாபஸ் பெறுவது மட்டுமல்ல, அந்தப் பேச்சில் எங்களுக்கு உடன்பாடு இல்லை என்று சொன்னால், மீண்டும் வழக்குத் தொடர்வேன் என்று அம்மையாரிடத்திலே சொல்லிவிட்டு வந்த முதல்வர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்றுத்தான் 1989–லே நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. மண்டல் கமிஷன் தந்த சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் அவர்களால், தலைவர் கலைஞர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அமைக்கப்பட்டதுதான் காவிரி நடுவர் நீதிமன்றம். காவிரி நடுவர் நீதிமன்றத்தில் கர்நாடகத்திற்கும், தமிழகத்திற்கும் 27 முறைகள் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு காவிரி நடுவர் மன்றம் அமைத்ததன் அடிப்படையில் இடைக்காலத் தீர்ப்பாக



2007 மார்ச் 26] [திரு. குத்தாலம் க. அன்பழகன்]

காவிரி நடுவர் நீதிமன்றம் 205 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்களுடைய பெரும் முயற்சியால் உத்தரவிடப்பட்டது மட்டுமல்ல; அதைக் கர்நாடக அரசு தமிழகத்திற்கு வழங்குகிறதா என்று பார்ப்பதற்கு ஒரு கண்காணிப்புக் குழுவை அமைத்த பெருமையும் நம்முடைய முதல்வர் அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்ற நிலை மாறி, இப்போது கிடைத்திருக்கிற 192 டி.எம்.சி. தண்ணீருக்கான இறுதித் தீர்ப்பு என்பது, காவிரி நீர்ப் பிரச்சினையிலே தமிழகத்திற்கு உரிமை இல்லை என்று சொல்லிக்கொண்டிருந்த கர்நாடகத்திலே இருக்கக்கூடியவர்களுக்குப் புள்ளி வைத்ததைப்போல, நமக்கும் அந்த நீரிலே உரிமை இருக்கிறது என்பதை உணர்த்துகின்ற வகையில் இன்றைக்கு நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பு அமைந்திருக்கிறது. இறுதித் தீர்ப்பில் தண்ணீருடைய அளவு வேண்டுமானால் மாறுபடலாம்; ஆனால், தீர்ப்பு மாறுபாடு இல்லாமல் வழங்கப்பட்டிருக்கிறது. நடுவர் மன்ற நீதிபதிகள் மூவரின் தீர்ப்பு நீதிபதிகளின் ஒருமித்த தீர்ப்பாகக் கிடைத்துள்ளது, தலைவர் கலைஞர் அவர்களுடைய முயற்சிக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்பதை நாம் உணர்ந்திட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

கெசட்டில் வெளியிடப்பட்டால் தீர்ப்பை ஏற்றுக்கொண்டதாகப் பொருளாகிவிடும், எனவே, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அதில் உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பு வெளியானதிலிருந்து 90 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதை நாம் நன்றி உணர்ச்சியோடு வரவேற்றிட வேண்டும். இதே நிலையைத்தான் நர்மதை நதி, கோதாவரி நதித் தீர்ப்பிலும் கையாண்டுள்ளார்கள். இப்பிரச்சினையில் உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டால் இரு மாநில மக்களின் வாழ்க்கை கேள்விக்குறி ஆகிவிடும் என்று, தன்னுடைய அரசியல் ஸ்திரத்தன்மையால், அனுபவத்தால் இந்தப் பிரச்சினையைக் கையாளுவதற்கு உண்ணாவிரதமோ, பழரசமோ தேவையில்லை, பக்குவம்தான் தேவை என்று ராஜதந்திரத்துடன் செயல்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இதனைப் பிரச்சினை இல்லாமல் கையாளுகிற நீங்கள் இந்த மண்ணிலே வாழுகிற காரணத்தினால்தான் இந்தக் காவிரியும், பூமிப் பந்தும் இன்னும் ஈரமாகவே இருக்கிறது.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்திட, அத்தியாவசிய உணவுப் பொருட்கள், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் [illegible]வற்றை

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227485
சென்னை-600 008
நூலகம்

அரசே கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகள்மூலம் பொது மக்களுக்கு வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது என்கிறது இந்த அறிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி) அரசே கொள்முதல் செய்து வழங்குகின்ற காரணத்தினால் விவசாயிகளுக்கும் நல்ல விலை கிடைத்திடும், நுகர்வோர்களுக்கும் நல்ல முறையில் அந்தப் பொருட்கள் சென்று சேர்ந்திடும் என்ற வகையில், பொது மக்களிடத்திலும், விவசாயிகளிடத்திலும், நுகர்வோரிடத்திலும் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் On-line trading மூலம்—forward trade--வாங்கி, விற்பதற்கு மத்திய அரசாங்கம் சில பொருட்களுக்கு மட்டும் தடை விதித்துள்ளது. ஆனால், நம்முடைய நிதிநிலை அறிக்கையில் On-line trading என்று சொல்லக்கூடிய வர்த்தகச் சூதாடிகளால்—விளைகின்ற பொருளை மறைத்து வைத்து, அதற்கு செயற்கைப் பஞ்சத்தை உருவாக்கி விலையை உயர்த்த நினைக்கிற வர்த்தகச் சூதாடிகள் இந்த நாட்டிலே இருக்கக் கூடாது என்று, அனைத்துப் பொருட்களுக்கும் On-line trading--க்குத் தடை விதிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசை வலியுறுத்தியிருப்பது அனைத்துத் தரப்பு மக்களினுடைய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-10

சமுதாய அடித்தளத்திலுள்ள ஏழை மாணவர்களுக்கு 12 ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. அதனை இளங்கலை பயிலும் கல்லூரி மாணவர்களுக்கும் விரிவுபடுத்தவுள்ளது வரவேற்கத்தக்கது மட்டுமல்ல, (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டின் கல்வித் தரத்தை உயர்த்த வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

வீட்டுமனைப் பட்டாக்கள்; 10 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு இடத்திலே குடியிருப்பவர்களுக்கு, அரசாங்க இடமாக இருந்தாலும், அரசாங்கத்திற்கு எதிர்காலத்திலே அது தேவைப்படவில்லை என்று சொன்னால், அவர்களுக்கு மனைப் பட்டா வழங்கலாம் என்று 884-வது அரசாணையின்படி கொடுத்திருப்பது ஏழ்மையான மக்கள் மத்தியிலே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

ஆதி திராவிடர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் காக்க இந்தியாவிலேயே முதன்முதலாகத் துறை அமைத்துக் கொடுத்தவர் நம்முடைய மாண்புமிகு





முதல்வர் அவர்கள் என்பதை யாராலும் மறுத்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், இன்றைக்கு சிறுபான்மை இனத்தவருக்கு இயக்குனரகம் அமைத்துக் கொடுத்திருக்கிறார். சிறுபான்மையினத்தவருக்கு இயக்குனரகம் மட்டுமல்ல, அரசியல் வாழ்வில் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட காலம் முதல் அந்தச் சிறுபான்மையினத்தவர்களுக்குப் பாதுகாப்பு அரணாகவும், மதவாத சக்திகளுக்கு லகான் சக்தியாகவும் தலைவர் அவர்கள் இந்த மண்ணிலே திகழ்ந்திருக்கிறார்கள். அதைவிட, இன்றைக்குச் சிறுபான்மைச் சமுதாயத்திற்கு இயக்குனரகம் அமைத்துத் தந்திருக்கிறார்கள். தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டிற்கும், கல்வி வளர்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் 30 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுமணி அவர்கள் இராஜேந்தர் சச்சார் கமிஷனைப் பற்றிப் பேசினார்கள். அது நீண்ட நெடிய விளக்கம்; இங்கே விளக்க முடியாது. வெளியிலே வேண்டுமானால் அதற்கு இருவரும் மேடையிலே பேசிக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், இஸ்லாமியர்களுக்கு இயக்குனரகம் வழங்கியிருப்பது என்பது, இஸ்லாத்திலே ஒரு பொன்மொழி சொல்வார்கள்; "பிறருக்குக் கொடுப்பவன் கடவுளுக்குக் கடன் கொடுப்பவன்" என்று சொல்வார்கள். இஸ்லாமியர்கள் பிறருக்குக் கொடுப்பதையே கடவுளைவிட மேலாக எண்ணுகிறவர்கள். தலைவரே! நீங்கள் இஸ்லாமியர்களுக்கே இயக்குனரகம் கொடுத்திருக்கிறீர்கள். உங்களை எந்த அளவிற்கு அவர்கள் மதிப்பார்கள் என்பதை இந்த நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவிலே வாரம் 3 முட்டைகள் வழங்குவதற்கு ரூபாய் 781 கோடி இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்திருக்கிறார்கள். சத்துணவிலே 3 முட்டைகள் வழங்குகிற இந்தத் திட்டம் என்பதை ஒரு சாதாரணச் செயலாக எடுத்துக்கொள்ள முடியாது. இந்தத் திட்டத்தில் மிகப் பெரிய தாத்பரியமும், நிர்வாகமும் அடங்கியிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். சத்துணவிலே ஒரு முட்டை வழங்குகிற அந்தத் திட்டத்தையும் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசுதான் துவக்கியது. அதிலே மீண்டும் இரண்டு முட்டைகள் மாணவர்களுக்கு வழங்குவதற்கும் இந்த அரசுதான் திட்டத்தைத் துவக்கியது. இன்றைக்கு 3 முட்டைகள் வழங்குவதற்கும் இந்த அரசுதான் திட்டத்தைத் துவக்கியிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், ஓர் அரசாங்கம்

[திரு. குத்தாலம் க. அன்பழகன்] [2007 மார்ச் 26

திட்டத்தை அறிவித்துவிட்டு, அதை அந்த 5 ஆண்டுகளில் நடைமுறைப்படுத்துவதற்கு நிதி ஆதாரத்தைத் தேடிக்கொண்டிருக்கிற அந்தச் சூழ்நிலையில், நல்ல நிதி ஆதாரம்—resource mobilisation–ஐ அரசாங்கத்திற்குப் பெற்று ஒரு திட்டத்தை அபிவிருத்தி செய்வது என்பது, சத்துணவிலே வாரம் 3 முட்டைகள் வழங்குவது என்கிற இந்தத் திட்டத்தில் அமைந்திருக்கிறது. ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்பதைவிட, அதை அபிவிருத்தி செய்வதுதான், நடைபெறுகிற அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டாகப் பல்வேறு உதாரணங்கள் இருந்தாலும், இதுவும் ஒன்றாக அமைந்தது மட்டுமல்ல, வாரத்திற்கு 3 முட்டைகள் என்று சொன்னால், மாதத்திற்கு 12 முட்டைகள் வழங்கப்படுகின்றன என்பதையும் இந்த மன்றத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காதலும், வீரமும் கலந்ததுதான் தமிழனின் வரலாறு என்று சொல்வார்கள். அப்படி நம்மால் சிறப்பாகக் கொண்டாடப்படுகிற அந்தப் பொங்கல் திருவிழா அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்ற அறிவிப்பு, இந்த உலகப் பூப்பந்தில் வாழுகிற தமிழ் மக்களின் இதயக் கமலத்தில் நீங்கள்தான் இன்றைக்கு நாயகனாக வீற்றிருக்கிறீர்கள்; அவர்களுடைய வாழ்த்துச் செய்தியும், பாராட்டும் உங்களுக்கு வந்துகொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பசும்பொன் தேவர் திருமகனார் மற்றும் பொதுவுடைமைத் தலைவர் திரு. ப. ஜீவானந்தம் அவர்களின் நூற்றாண்டு விழாக்களைக் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது.

முற்பகல் 10–15

அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன் காக்க 6 சதவீத அகவிலைப் படியை உயர்த்தியிருப்பது—29 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாக உயர்த்தியது—கடந்த காலங்களில் அரசு ஊழியர்கள் பட்ட இன்னல்கள், வேதனைகள், காயங்களுக்கெல்லாம் அருமருந்தாக அமைந்திருக்கிறது என்பதுதான் இந்த நிதிநிலை அறிக்கை. எந்தவொரு பிரச்சினையையும் கையாளுகிறபோது, அதற்கு முன் தேதியிட்டு அந்தச் சலுகையை நிறைவேற்றிய அரசாங்கம் தலைவர் கலைஞருடைய அரசாங்கம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தச் செயலுக்கும் prospective effect கொடுத்துத்தான் பழக்கமே தவிர, retrospective effect கொடுத்தது இந்திய நாட்டிலேயே முதன்முதலில் நம்முடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசுதான் என்பதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். தைப் பொங்கல் பண்டிகைக்கு ஆயிரம் ரூபாயாக



2007 மார்ச் 26] [திரு. குத்தாலம் க. அன்பழகன்]

இருந்த பண்டிகை முன்பணத்தை இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தியுள்ளார்கள்.

"சிறப்புப் பொருளாதார மண்டலம், நாட்டில் பின்தங்கிய பகுதி மக்களின் வளர்ச்சிக்கு அவசர, அவசியத் தேவையாகும்" என்று நமது பாரதத் திருநாட்டின் குடியரசுத் தலைவர் அவர்கள் கூறியுள்ளார்கள். "சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கான விளைநிலங்களுக்குப் பதிலாகத் தரிசு நிலங்களைப் பயன்படுத்த வேண்டும். நாடு முழுவதும் 15 கோடி ஏக்கர் நிலம் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படாமல் தரிசாகக் கிடக்கின்றன. அவற்றில் ஒரு பகுதியை இந்தத் திட்டத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம்" என்று மாண்புமிகு நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் கூறியுள்ளார்கள். அதைத்தான் தலைவர் கலைஞரும் ஏற்கிறேன் என்று சொல்லி, அதனடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படவுள்ளது என்பது வரவேற்கத்தக்கது.

இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடைபெறுகின்ற இந்த நேரத்தில் சமுதாயப் புரட்சியாக இந்த நாட்டிலே இரண்டு விஷயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி உள்ளிட்ட ஊராட்சிகளுக்குத் தேர்தல்களை நடத்தி, தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று மிகப் பெரியதொரு சமுதாயப் புரட்சியினை உருவாக்கியிருப்பது பாராட்டத்தக்கது. அது மட்டுமல்ல, சில தினங்களுக்கு முன்னால் சென்னையிலே இருக்கக்கூடிய மயானப் பணியாளர்கள், அன்று வரையில் அவர்கள் வெட்டியான்கள் என்றுதான் அழைக்கப்பட்டார்கள். அவர்கள் 195 பேரை அரசு ஊழியர்களாக ஆக்கி, அவர்களுக்குப் பாதுகாப்பும், உடையும் அணிவித்ததோடு, அவர்கள் மயானப் பணியாளர்கள் என்று அழைக்கப்படுவார்கள் என்கின்ற சமூக அந்தஸ்தையும் கொடுத்திருக்கிறார் ஆருயிர் அண்ணன் தளபதி அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இவை எல்லாம் திராவிட இயக்கத்தினுடைய மைல் கற்களாக அமையும் என்பதற்குக் காரணமாக இருந்தவர் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாகை மாவட்டத்தில் 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,000 மெகாவாட் மின் நிலையம் அமையவும், அதற்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டு வருவதற்கும் 750 கோடி ரூபாய் செலவில் அயர்லாந்து நாட்டு நிறுவனத்துடன் தமிழக அரசின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வரவேற்கக்

[திரு. குத்தாலம் க. அன்பழகன்] [2007 மார்ச் 26

கடமைப்பட்டிருக்கிறேன். அந்த மாவட்டத்தினுடைய பிரதிநிதி என்ற முறையில், இதனை நாகை மாவட்டத்து மண்ணின் மைந்தன் என்ற உணர்வோடு செயல்படுத்தி இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் வழிகாட்டும் வால்டராகத் திகழ்பவர் நம்முடைய முதல்வரவர்கள் என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். நீங்கள் சொல்லுகின்ற கருத்தை நூற்றுக்கு நூறு நான் ஏற்றுக்கொள்கிறேனோ, இல்லையோ, ஆனால் சொல்வதற்காக உங்களுக்கு இருக்கிற உரிமையை என்னுடைய உயிரைக் கொடுத்தும் காப்பாற்றுவேன் என்று சொன்ன வால்டராக உங்களுக்குக் கிடைத்து இருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர். அவர்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஐந்து நிமிடங்களிலே முடித்துக்கொள்கிறேன். உங்கள் அனுமதியோடு என்னுடைய தொகுதிப் பிரச்சினையைச் சொல்லி உரையை நிறைவு செய்கிறேன். திருவாரூர் மாவட்டத்திற்கு இரண்டு திட்டங்கள்; 100 கோடி ரூபாய் செலவில் மருத்துவக் கல்லூரி, ரூபாய் 3 கோடி செலவில் மாவட்டக் காவல் கண்காணிப்பு அலுவலகம் வழங்கி இருக்கிறீர்கள். தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினராகவும், பால் வளத் துறை அமைச்சராகவும் இருக்கிற அண்ணன் திரு. மதிவாணன் அவர்கள் சார்பாகவும், நானும் அந்த மாவட்டத்தின் பிரதிநிதி என்ற முறையிலும் என் மனமார்ந்த நன்றியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல் தலைமை மருத்துவமனைக்கு 95 இலட்சம் ரூபாயை, என்னுடைய கோரிக்கையை ஏற்று ஒதுக்கியதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, குடவாசலில் காவல் உப கோட்டம் அவசியம் என்று நீண்ட நாளைய கோரிக்கையாக அந்தப் பகுதி மக்களால் உங்களுக்கு வைக்கப்பட்டுள்ளது. குடவாசலுக்கு உப காவல் கோட்டம் ஏன் நான் கேட்கிறேன் என்பதற்கான விளக்கத்தை அதிகமாக நம்முடைய முதல்வர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. குடவாசலில் ஏன் காவல் உப கோட்டத்தை மக்கள் கேட்கிறார்கள் என்பது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த வலியுறுத்தலை உங்கள்மேல் பற்றும், பாசமும்கொண்ட



2007 மார்ச் 26] [திரு. குத்தாலம் க. அன்பழகன்]

பொதுவுடைமைச் சிந்தனை இருந்தாலும், உங்கள்மீது பாசம் இருக்கிற முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய ஐயா சித்தாடி ஜி. வீரையன் அவர்கள் உங்களது கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று என்னிடத்திலே கட்டளையிட்டதன் அடிப்படையிலே தெரிவிக்கிறேன். அதை நீங்கள் அவசியம் செய்து தர வேண்டும் என்று கேட்டு, நாகை மாவட்டம், குத்தாலம் ஒன்றியத்தை வருவாய் வட்டமாக அமைத்துத் தர வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாகும். நம்முடைய அமைச்சரவர்கள் என்னுடைய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கின்றபோது, நிச்சயம் அரசு பரிசீலிக்கும் என்று அன்றைக்கு உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு, கம்பர் பிறந்த தேரெழுந்தூரில் கம்பர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தந்திட வேண்டும்.

தமிழுக்காக நூல் எழுதியவர்களுக்கும், நூல் எழுதியவர்களுடைய சந்ததிகளுக்கும் நீங்கள் அளித்திருக்கிற சலுகையைப்போல, தமிழுக்குப் பணியாற்றிய கம்பனுக்குச் சிறப்பாக, கம்பர் பிறந்த தேரெழுந்தூரில் இருக்கிற அந்த உயர்நிலைப் பள்ளியை நீங்கள் மேல்நிலைப் பள்ளியாக அமைத்துத் தர வேண்டும். அதற்கான பொது மக்கள் பங்குத் தொகையும் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் கவனத்திற்குக் கொண்டு வந்து, கண்டிரமாணிக்கத்திலே இருக்கிற அரசு உயர்நிலைப் பள்ளி குடவாசல் ஒன்றியம், திருவாரூர் மாவட்டத்தைச் சார்ந்தது. அப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக அமைத்துத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

குடவாசலிலும், குத்தாலத்திலும் இருக்கிற தீயணைப்பு நிலையங்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, தயார் நிலையில் உள்ள அந்த இரண்டு தீயணைப்பு நிலையங்களுக்கும் நீங்கள் கட்டடம் அமைத்துத் தர வேண்டும். 1996-2001 ஆட்சிக் காலத்தில் தாங்கள் முதலமைச்சராக இருந்தபோது, என்னுடைய தந்தையார் சட்டப் பேரவையினுடைய உறுப்பினராக இருந்தபோது, ஒரு விதிவிலக்குக் கொடுத்து, குத்தாலம் தீயணைப்பு நிலையத்தை அங்கே துவக்கிய தலைவர் நீங்கள். அதற்குக் கட்டடமும் தந்திட வேண்டுமென்று கேட்டு, 'கேட்டதும் கொடுப்பவரே! கிருஷ்ணா, கீதையின் நாயகரே கிருஷ்ணா! என்று, இல்லாத ஒருவரை, கேட்டாலும் கொடுக்காத ஒருவரைக் கேட்டுக்கொண்டு இருந்த அந்தக் காலம் போய், மாண்புமிகு தலைவரே. கேட்டதையும், கேட்காததையும் சேர்த்துக் கொடுக்கும் தலைவா! நீங்கள்தான் தமிழகத்தின்

[திரு. குத்தாலம் க. அன்பழகன்] [2007 மார்ச் 26

நாயகன், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத்தின் நாயகன், இந்திய உப கண்டத்தின் ஈடு இணையற்ற முதல் மகன், அனைத்துத் தரப்பு மக்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றுகிற நாயகரே! இந்தச் சிறுவனின் கோரிக்கையையும் நிறைவேற்றித் தாருங்கள் என்று கேட்டு, அனைத்துத் தரப்பு மக்களின் அவல நிலையையும் போக்குகிற, நலிவுற்ற மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக அமைந்திருக்கிற நிதிநிலை அறிக்கையைத் தந்த நிதி அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, அதனை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுகிற வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலிலே காணிக்கையாக்குகிறேன். காங்கிரஸ் கட்சி சார்பிலே என்னை விவாதிக்க அனுமதித்திருக்கிற எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், வணக்கத்திற்குரிய திரு. சுதர்சனம் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் சுவையான, காரசாரமான சில விவாதங்கள் எல்லாம் இடம் பெற்றுக்கொண்டிருக்கிற இந்த வேளையில், இங்கே நிதிநிலை அறிக்கையிலே காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துகளை நான் இங்கே எடுத்து வைப்பதற்கு முன்னால், இந்த அவையிலே அடி எடுத்து வைத்து, இங்கே 50 ஆண்டு காலம் மிகச் சிறப்பாகப் பணியாற்றி, ஐந்தாவது முறையாகத் தமிழகத்தினுடைய முதலமைச்சராக அரியணை ஏறி, (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்புறப் பணியாற்றிக்கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய முதல்வர், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுதல்களை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தாத்தா திரு. கிருஷ்ணமூர்த்தி கவுண்டர் அவர்கள், என்னுடைய சிறிய தாத்தா திரு. கரிய கவுண்டர் அவர்கள், என்னுடைய மாமனார் திரு. முல்லை வடிவேல் அவர்கள் எல்லாம் இந்த அவையிலே பல ஆண்டு காலம் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, தாத்தா காலத்திலிருந்து, மாமனார் காலத்திலிருந்து, அடுத்து நான் வருகிற காலம் வரை, தொடர்ந்து இந்த அவையிலே சட்டமன்ற உறுப்பினராக மிகச் சிறப்பாகப் பணியாற்றிவரும் தமிழினத் தலைவர்



2007 மார்ச் 26] [திரு. சி. ஞானசேகரன்]

டாக்டர் கலைஞருடைய வரலாற்றை, வேறு யாரும் தமிழகத்தில் இந்த அளவிற்கு ஒரு நெடிய வரலாற்றைப் படைக்கவில்லை என்ற சாதனையை நீங்கள் புரிந்திருக்கிறீர்கள்.

*"காலைப் பொழுதினிலே கண்விழித்து*
*மேனிலைமேல்*
*மேலைச் சுடர்வானை நோக்கி நின்றோம்*
*விண்ணகத்தே.*
*கீழ்த்தி சையில் ஞாயிறுதான் கேடில்*
*சுடர்விடுத்தான்;*
*பார்த்த வெளியெல்லாம்*
*பகலொளியாய் மின்னிற்றே.*
*கற்றறிந்த ஞானி கடவுளையே*
*நேராவான்;*
*ஏழுநாள் முன்னே இறைமகுடந்*
*தான்புனைந்தான்.*
*வாழியவன் எங்கள் வருத்தமெலாம்*
*போக்கிவிட்டான்.*
*சோற்றுக்குப் பஞ்சமில்லை; போரில்லை;*
*துன்பமில்லை.*
*போற்றற் குரியான் புதுமன்னன்,*
*காணீரோ?"*

என்று பாடுவான் பாரதி. புது மன்னனாக விளங்கிக்கொண்டிருக்கிற நம்முடைய கலைஞர் அவர்களுக்கு, 50 ஆண்டு கால சாதனையைப் படைத்திருக்கிற அவருக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய பாராட்டுக்களைத்தெரிவித்து, நீங்கள் 100 ஆண்டு காலம் வாழ்ந்து, ஏன் அதற்கும் மேல் வாழ்ந்து நல்லாட்சியை நீங்கள் தர வேண்டும் என்று நான் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே மீண்டும் ஒரு முறை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களுடைய மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் அடிக்கடிச் சொல்வார்கள். பொதுக் கூட்டத்திலேகூட அவர்கள் சொல்வதுண்டு. என்னிடமும் சொல்லியிருக்கிறார். நம்முடைய கடற்கரையிலே உழைப்பாளர் சிலை ஒன்று இருக்கிறது. அந்த உழைப்பாளர் சிலை அப்பொழுதிருந்த கவர்னர் திரு. பிஷ்ணுராம் மேதி அவர்களால் 25-1-1959 ஆம் ஆண்டு கர்ம வீரர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் திறக்கப்பட்டது. உண்மையிலேயே அந்த உழைப்பாளர் சிலையை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் கலைஞர்

[திரு. சி. ஞானசேகரன்] [2007 மார்ச் 26

சிலையை வைப்பதுதான் பொருத்தம் என்று எங்களுடைய தலைவர் அடிக்கடிச் சொல்வதுண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி உழைப்பினுடைய சிகரமாக, இப்பொழுதுகூட காலையிலிருந்து பார்த்தால்—ஏதோ ஆறாம் கிளாஸ் மாணவன் ஒருவன் எப்படி ஒரு அட்டையை வைத்துக்கொண்டு தேர்வு எழுதுவானோ, அதைப்போல்—இவ்வளவு நேரம் படித்து, எதையோ குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த அளவிற்குத் தொடர்ந்து எழுதுவதிலும் சரி அல்லது கருத்துகளைச் சொல்வதிலும் சரி, மிகச் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு இருக்கிற உங்களை நாங்கள் நெஞ்சார வாழ்த்துகிறோம். உங்களை வழிகாட்டியாக நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். அந்த வரலாற்றை முடிந்த அளவு இந்தச் சபையிலே முடிக்க முடியுமா என்பதற்கு நாங்களும் முயற்சி செய்கிறோம் என்று கூறிக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

வாதத்திற்குப் போவதற்கு முன்னால், எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்கு என்று வைக்கக்கூடிய சில கோரிக்கைகளை மட்டும் முதலிலே வைத்துவிடுகிறேன். வேலூர் நகராட்சியை மாநகராட்சியாக அறிவிப்பதற்கு ஏற்கெனவே உறுதி அளித்திருக்கிறீர்கள். ஈரோடு, திருப்பூர், வேலூர் ஆகிய மூன்று நகராட்சிகளை நீங்கள் இந்த ஆண்டே மாநகராட்சிகளாக அறிவித்து, எங்களுடைய வேலூருக்கு மணிமகுடம் சூட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு 55 கோடி ரூபாய் வழங்கி கிட்டத்தட்ட 11 மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், இன்னும் பணிகள் நடைபெறவில்லை. அதை உடனடியாக நடத்துவதற்கும், அதேபோல, ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தைக் கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களுக்கு அறிவித்திருக்கிறீர்கள். 1,008 கோடி ரூபாயிலே அது உருவாக இருக்கிறது. ஜப்பான் நிதி உதவியைக் கேட்டிருக்கிறீர்கள். எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கழிவு நீரை விட்டிருக்கிற காரணத்தினாலும், நிலத்தடி நீர் 200 அடி ஆழத்திற்குப் பாதிப்பு அடைந்திருக்கிற காரணத்தினாலும், ஒகேனக்கல் குடிநீர் எங்களுடைய மாவட்டத்திற்கு வந்தால்தான் எதிர்காலத்தில் நாங்கள் தண்ணீரைக் குடிக்க முடியும். ஆகவே, இப்பொழுதே நீங்கள் அதற்குத் திட்டமிட்டு, கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களோடு இணைத்தால், 1,500 கோடி ரூபாய் என்று வரக்கூடிய திட்ட மதிப்பீட்டை, ஆயிரம் கோடி ரூபாயிலே நீங்கள்



2007 மார்ச் 26] [திரு. சி. ஞானசேகரன்]

நிறுத்திக்கொள்ள முடியும், 500 கோடி ரூபாய் மிச்சமாகும். அதற்காக இப்பொழுதே வேலூர் மாவட்டத்தை நீங்கள் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தோடு சேர்த்து எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

80 ஆண்டு கால வரலாறு படைத்த Government Pentland Hospital அப்படியே மீண்டும் முழுமையாகச் செயல்படுவதற்காக இந்த அவையிலே நீங்கள் ஆணையிட்டீர்கள். 60 டாக்டர்கள், 100 நர்சுகள் போடுவதற்கான G.O. நம்முடைய Finance Secretary–யிலிருந்து ஆரம்பித்து, இன்னும் சுற்றிக்கொண்டேயிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக அந்த மருத்துவமனையை முழு அளவில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

2000ஆம் ஆண்டில் அருமை அண்ணன் ஆலடி அருணா அவர்கள் இருக்கிறபோது வேலூருக்குச் சட்டக் கல்லூரியை நீங்கள் இந்த அவையிலே அறிவித்திருக்கிறீர்கள். எங்களுடைய மண்ணின் மைந்தரே சட்டத் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் முதல்வர் அவர்கள் உடனடியாக இந்த ஆண்டே அரசு சட்டக் கல்லூரியை வேலூருக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர், ஈரோடு, சாயப் பட்டறைத் தண்ணீர், Ocean discharge என்ற வகையில் நாகப்பட்டினம் கடலிலே கலப்பதற்கு 700 கோடி ரூபாய் செலவில் பைப் லைன் அமைத்துக் கொடுப்பதற்கு ஏற்கெனவே கொள்கை முடிவெடுத்து அறிவித்திருக்கிறீர்கள். எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய தோல் பதனிடும் தொழிற்சாலையினுடைய கழிவு நீர் சென்னைக் கடற்கரைக்கு Ocean discharge என்கிற வகையில் வந்தால்தான் எங்களுடைய மாவட்டம் எதிர்காலத்தில் பிழைக்கும். ஆகவே, 400 கோடி ரூபாயில் தோல் பதனிடும் தொழிற்சாலையினுடைய கழிவு நீரைப் பைப் லைன் வழியாக இங்கே சென்னைக் கடலில் சேர்ப்பிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, I.T. Park. எல்லா மாவட்டங்களுக்கும் I.T. Park கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். எங்களுடைய வேலூர் மாவட்டம், பெங்களூருக்கும், சென்னைக்கும் இடையில் மையத்தில் அமைந்திருக்கிறது. V.I.T. என்று சொல்லக்கூடிய உலகப் புகழ்பெற்ற நல்லதொரு Deemed University அங்கேயிருக்கிறது. இப்பொழுது சிறப்பாக

நிறைய Engineering Colleges—கிட்டத்தட்ட 11 பொறியியல் கல்லூரிகள்— எங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்றன. 15 ஆயிரம் பேர் அந்த V.I.T.யில் படிக்கிறார்கள். படித்துவிட்டு வரும் இளைஞர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று சொன்னால், வேலூரில் உடனடியாக நீங்கள் ஒரு I.T. Park-ஐ உருவாக்க வேண்டும்.

அதேபோல், விமான நிலையத்திற்கு எங்கெங்கோ இடம் தேடுகிறீர்கள். யாரோ ஆட்சேபனை சொல்கிறார்கள்; உடனே நிறுத்தி விடுகிறீர்கள். ஆனால், பெங்களூருக்கும் சென்னைக்கும் இடையில் இருக்கக்கூடிய வேலூரில் International Airport என்ற அளவில் நீங்கள் தரமான ஒரு விமான நிலையத்தை அமைத்தால், நிச்சயமாக எதிர்காலத்தில் வளமான ஒரு வாழ்வு எல்லாப் பகுதிகளுக்கும் கிடைக்கும் என்ற காரணத்தினாலே விமான நிலையத்தை நீங்கள் உடனடியாக வேலூருக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு நீங்கள் உடனடியாகக் கட்டடம் கட்டித் தர வேண்டும். வேலூர் Bus-stand-க்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், அதேபோல் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் 2½ கோடி ரூபாய் நிதியை இப்போது Town Planning Consolidated Fund-ல் இருந்து உடனடியாக வழங்குவதற்கான கோப்புகள் நகர்ந்துகொண்டிருக்கின்றன. 2½ கோடி ரூபாயை நீங்கள் உடனடியாக வழங்கி, அந்த Bus-stand கட்டடத்தைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலாற்றில் ஆந்திர அரசு அணை கட்டாமல் பார்த்துக்கொள்வதற்கான நடவடிக்கையை நீங்கள் முழு மூச்சோடு எடுக்க வேண்டும். இதில் தினந்தோறும் எங்களுக்கு ஒரு அச்சுறுத்தலாகவே ஆந்திர அரசு பயமுறுத்திக்கொண்டிருக்கிறது. பாலாற்றில் அணை வராமல் தடுக்க வேண்டும் என்றும், வேலூருக்கு ஓர் இசைக் கல்லூரி, இசைப் பள்ளி ஆகியவற்றை நீங்கள் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்டதே எங்களுடைய வேலூர் மண்; அங்கேதான் முதல் சுதந்திரப் போராட்டம் 1806-ல் வெடித்தது. நீங்கள் வேலூருக்கு வந்து, அந்த விழாவில் சிப்பாய் புரட்சிக்கான நினைவுச் சின்னத்தை அமைப்பதாக அறிவித்ததுபோல—அதற்கான அறிவிப்பை நீங்கள் ஏற்கெனவே பட்ஜெட்டிலேகூடச் சொன்னீர்கள்—அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





வேலூர் மாவட்டத்தில் மூடப்பட்டிருக்கக்கூடிய அரியூர் கூட்டுறவு நூற்பாலையையும், அதைப்போல தெற்குப்பட்டில் மூடப்பட்டிருக்கக்கூடிய சந்தன எண்ணெய் ஆலையையும் திறப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இப்போது விவாதத்திற்கு வருகிறேன்.

*முற்பகல் 10-30*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசுகிறபோது, கூட்டணியிலே இருக்கிற கட்சிகள், நீங்கள் அடித்துப் பேசாமல், கொஞ்சம் இடித்துப் பேசுங்கள், தட்டிக் கேளுங்கள் என்று சொன்னார்கள். ஆக்கபூர்வமான சில கருத்துகளை எடுத்து வைப்பது எங்களுடைய தலையாய கடமை என்கிற காரணத்தினாலே சிலவற்றை நான் இந்த அவையின்மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*நம்முடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களை இந்தத் தமிழ் மண்ணில் 1991-ல் இழந்திருக்கிற நாங்கள், விடுதலைப் புலிகளினுடைய நடமாட்டம் முழுமையாகத் தமிழகத்திற்குள்ளே வராமல் தடுக்கப்பட வேண்டும் என்பதை முதல் கோரிக்கையாக அவையிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட ஓர் அறிக்கையிலும் மிகத் தெளிவாகச் சொன்னீர்கள். ஆனால், இப்போது சில பேர்கள் இங்கே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து வெளிப்படையாகப் பொதுக் கூட்டங்களிலே பேசுவதும், ஊர்வலத்தை நடத்துவதும், சில தலைவர்கள் தங்களை, 'தமிழகத்துப் பிரபாகரனே வருக, வருக' என்று விளம்பரங்களில் போட்டுக்கொள்வதும் இன்று மிக எளிதான ஒரு செயலாகத் தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்கள் உள் துறையை உங்களுடைய கையகத்தே வைத்திருக்கிறீர்கள். விடுதலைப் புலிகளுடைய நடமாட்டத்தை முழுமையாக வேரறுக்க வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கக்கூடிய இயக்கங்களை நீங்கள் முதலிலே வேரறுக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, பிப்ரவரி 12, 13, 14, 16 ஆகிய தேதிகளிலே இங்கேயுள்ள கடலோரப் பகுதிகளிலே விடுதலைப் புலிகள் சில பேர் படகுகளில் வருகிறபோது, கடலோரப் படையால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்; 8 விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்; அவர்களோடு ராஜேந்திரன் என்கிற தமிழர் ஒருவரும்கூடக் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதேபோல, ம.தி.மு.க.*

[திரு. சி. ஞானசேகரன்] [2007 மார்ச் 26

கட்சியினுடைய ஒரு நபர்—அமைப்புச் செயலாளர் அவர்களும் அந்த இடத்திலே கைது செய்யப்பட்டிருக்கிறார். ஏன், திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரராக இருந்தாலும்கூட, நான் இங்கே அவர்களை விடமாட்டேன்; விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்தால் அவர்களையும் கைது செய்வேன் என்று சொல்லி, பரகத் அவர்கள்மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், மனித வெடிகுண்டு ஜாக்கெட்டுகளை வைத்துக்கொண்டும், அதேபோல நிறைய வெடி மருந்துப் பொருட்களையெல்லாம் இங்கே படகுகளின்மூலமாக ஏற்றியும் வந்துகொண்டிருக்கக்கூடிய விடுதலைப் புலிகளினுடைய நடமாட்டத்தைத் தடுக்க வேண்டும்.

ஈழத்தில் இருக்கக்கூடிய தமிழர்கள் வாழ்வுரிமை பெற வேண்டும்; அவர்களுக்குத் தனி மாநிலம் அமைய வேண்டும் என்பதிலே காங்கிரஸ் கட்சிக்கு மாறுபட்ட கருத்தே கிடையாது. அதற்காகத்தான் எங்களுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் அமைதிப் படையைக்கூட இலங்கைக்கு அனுப்பினார். ஆகவே, அங்கு இருக்கக்கூடிய தமிழர்களுக்கு வாழ்வாதாரத்தைக் கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டிய தலையாய கடமை நிச்சயமாகத் தமிழினத் தலைவருக்கும் உண்டு. அதைப்போல மத்தியிலே ஆண்டுகொண்டிருக்கக்கூடிய அருமை அன்னை சோனியா காந்தி அவர்கள், பாரதப் பிரதமர் நம்முடைய மன்மோகன் சிங் அவர்கள் எல்லாம்கூட நிச்சயமாக அதில் மாற்றுக் கருத்தைச் சொல்லவில்லை. தமிழகத்திலே தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம் விடுதலைப் புலிகள் இயக்கம். அதை நீங்கள் தயவுசெய்து, உள் துறையைக் கையில் வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினாலே, உளவுத் துறையைக் கொஞ்சம் முடுக்கிவிட்டு, அது முடங்கிப் போகாமல் செய்து, நிச்சயமாக விடுதலைப் புலிகளினுடைய நடமாட்டத்தை முழுமையாகத் தடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுதான் முதல் கோரிக்கை.

இந்த பட்ஜெட்டைப் பற்றி நிறையப் பேர் நிறையவே சொன்னார்கள். இதைக் காகிதப் பூ என்றெல்லாம்கூடச் சொன்னார்கள். எதிர்க்கட்சிகள் நிச்சயமாகச் சொல்லித்தான் ஆக வேண்டும். அவர்கள் பாராட்டுவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால், பத்திரிகைகளைப் பார்க்கிறபோது, 'ஜில் என்று ஒரு பட்ஜெட்' என்று 'தினமலர்' கூறுகிறது. அதேபோல, 'அனைத்துத் தாப்பையும் திருப்தி செய்யும் பட்ஜெட்' என்று 'தினகரன்' கூறுகிறது. அதேபோல, 'புதிய வரிகள் இல்லாத



2007 மார்ச் 26] [திரு. சி. ஞானசேகரன்]

சலுகைகள் நிறைந்த பட்ஜெட்' என்கிறது 'தினமணி'. 'அரசு ஊழியர்கள் அகவிலைப் படி உயர்வு, சத்துணவில் வாரத்திற்கு 3 முட்டை, பட்ஜெட்டில் புதிய சலுகைகள் அறிவிப்பு' என்கிறது 'தினத்தந்தி'. 'புதிய வரிகள் இல்லை' என்கிறது 'தமிழ் முரசு'. "Populist measures mark TN budget"—'Indian Express'. அதைப்போல, "Focus on price control; cooking oil, pulses sale through ration shops"—'The Hindu'. இப்படி எல்லாப் பத்திரிகைகளும் உங்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துப் பல கருத்துகளை மிக ஆழமாகப் பதித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நல்ல பட்ஜெட்டை உங்களுடைய வழிகாட்டுதலோடு நம்முடைய இனமானப் பேராசிரியர் அவர்கள் மிக அற்புதமாக 2½ மணி நேரம் படித்து நல்ல கருத்துகளையெல்லாம் நிறையச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், அதில் சொல்லப்பட்ட கருத்துகள், போன பட்ஜெட்டிலே சொன்ன சில விஷயங்கள், தொடர்ந்து இந்த அரசு அவற்றைச் செயல்படுத்த வேண்டுமென்று ஆக்கபூர்வமான சில கருத்துகளை இங்கே நான் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை.

*முற்பகல் 10-35*

விவசாயிகளுடைய உற்பத்திப் பொருளுக்குக் குறைவின்றி உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக, அவற்றைப் பதப்படுத்தக்கூடிய சில முனையங்கள்—Terminal Markets—சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களிலே அமைக்கப்படும் என்று 22-7-2006 அன்று பட்ஜெட்டிலே அறிவித்தீர்கள். ஆனால், இன்னும் அது செயல்பாட்டிற்கு வரவில்லை. ஆகவே, அந்த Terminal Markets-ஐ சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களிலே அமைத்தால், பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு வழியாகும். அதேபோல, கோவை, பல்லடத்திற்குப் பக்கத்திலே வெங்காயத்திற்கும், கிருஷ்ணகிரியில் மாம்பழத்தைப் பதப்படுத்துவதற்கும், தேனி, ஓடைப்பட்டியிலே திராட்சைப் பழத்தைப் பதப்படுத்துவதற்கும் குளிர்பதனக் கிடங்குகள் எல்லாம் அமைப்பதற்கும், ஏற்றுமதிக்கேற்ற வகையில் குளிர்பதன வசதியோடு விற்பனைக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும் என்று சொன்னீர்கள். இன்னும் அவை செயல்படுத்தப்படவில்லை. அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தேர்தல் அறிக்கையிலே சொல்கிறபோது, தரிசு நில முந்திரிச் சாகுபடிக்கென்று நீங்கள் நிலங்களை எல்லாம் எடுத்து, முந்திரிச் சாகுபடி செய்யப்படும் என்றும், புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்கள், பெரம்பலூர் மாவட்டம், தஞ்சாவூர் போன்ற பகுதிகளும் அதில் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னீர்கள்.

[திரு. சி. ஞானசேகரன்] [2007 மார்ச் 26

அதையும் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற பட்ஜெட்டிலே பல்நோக்குத் திட்டக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று சொன்னீர்கள். ரூ.3,900 கோடி மதிப்பீட்டில் பாசன வேளாண்மையை நவீனப்படுத்தவும், நீர் வள ஆதாரங்கள், மேலாண்மைத் திட்டப் பணிகளை விரைந்து செயல்படுத்தவும் பல்நோக்குத் திட்டக் குழு ஒன்று உருவாக்கப்படுமென்றும், இந்தத் திட்டத்தின் முதலாண்டில் 16 துணை வடிநிலப் பகுதிகளில் பணிகள் தொடங்கப்படும் என்றும் சொன்னீர்கள். அதையும் நீங்கள் உடனடியாகச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கொசுவை உற்பத்தி செய்துவிட்டு, அதனை அழிப்பதற்குப் பெரிய, பெரிய புகைபோக்கிகளை வைத்துக்கொண்டு கொசுவை ஒழிப்பதற்கான முயற்சிகளை இப்போது எடுத்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய சென்னையைச் சுற்றியிருக்கக்கூடிய கூவம், அடையாறு, கொசத்தலையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம்–அரும்பாக்கம் வடிகால், பள்ளிக்கரணை சதுப்பு நில ஏரி போன்றவையெல்லாம் ரூ.279.01 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியோடு, மத்திய அரசு நிதியுதவியோடு செம்மைப்படுத்தப்படும் என்று ஏற்கெனவே நீங்கள் பட்ஜெட்டிலே அறிவித்தீர்கள். அதை முழுமையாகச் செய்தால்தான் சென்னையில் இருக்கக்கூடிய கொசுவை நம்மாலே ஒழிக்க முடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக ஏற்று நடத்துவதற்குத் தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திருச்சி புறநகர்ப் பகுதியிலே அமைந்துள்ள கோரையாறு, உய்யக்கொண்டான் கால்வாய், குடமுருட்டி ஆறு மற்றும் அரியாறு போன்றவற்றையும், அதேபோல மதுரை, வைகை ஆற்றுப் பக்கத்தில் இருக்கக்கூடிய எல்லா ஏரிகளையும்-- பரவை ஏரி, தத்தனேரி, ஆனையூர், முடக்கத்தான் குளம் ஏரிகள் போன்றவற்றையெல்லாம் சீரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தீர்கள். அவையும் இன்னும் நிலுவையில் இருக்கின்றன. அவற்றையும் நீங்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ஊரகப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மருத்துவமனைகளில், பல் மருத்துவக் கல்லூரிகளும், செவிலியர்



2007 மார்ச் 26] [திரு. சி. ஞானசேகரன்]

கல்லூரிகளும், அதேபோல Colleges of Physiotherapy-யும் அமைக்கப்படும் என்று சென்ற பட்ஜெட்டிலே குறிப்பிட்டீர்கள். ஆனால், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. பல் மருத்துவக் கல்லூரிகளும், செவிலியர் கல்லூரிகளும் அந்தந்த மாவட்டங்களிலே அமைப்பதற்கான—இப்போதெல்லாம் வெறும் school தான் இருக்கிறதேயொழிய, கல்லூரிகள் இன்னும் அமைக்கப்படவில்லை--நடவடிக்கைகளை நீங்கள் மாவட்ட மருத்துவமனைகள் அத்தனையிலும் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, *(மணியடிக்கப்பெற்றது)* முடித்துவிடுகிறேன்.

திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, கோவை மற்றும் வேலூர் ஆகிய அரசு மருத்துவமனைகளுக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மையங்கள் அமைத்துக் கொடுப்பதாக சென்ற பட்ஜெட்டிலே நீங்கள் அறிவித்தீர்கள். ஆனால் இன்னும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மையங்கள் அந்த மருத்துவமனைகளுக்கு எல்லாம் வரவில்லை. அதேபோல, சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு அதிநவீன 64 Slice CT Scanner ரூ.5.50 கோடி ரூபாயிலே வழங்கப்படும் என்று சொன்னீர்கள். அதுவும் இன்று வரை வழங்கப்படவில்லை. நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அவற்றையெல்லாம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழகத்தை முன்னணி மாநிலமாக மாற்றுவதற்கு வேலைவாய்ப்பு அவசியம். அதேபோல, தொழிற்சாலைகளுக்கு வசதிகள். தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளையெல்லாம் ஒன்று சேர்த்து Special Task Force ஒன்று அமைக்கப்படும் என்று சென்ற பட்ஜெட்டிலே அறிவித்தீர்கள். ஆனால், அந்த Special Task Force இன்னும் அமைக்கப்படவில்லை.

அதேபோல, மாநிலத்திலே சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை—Industrial Corridor of Excellence ஒன்றை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னீர்கள். Industrial Corridor of Excellence இன்னும் அமைக்கப்படவில்லை.

அதேபோல, மெட்ரோ இரயில் திட்டம் சென்ற பட்ஜெட்டிலே அறிவிக்கப்பட்டது. இப்போதும் அறிவித்திருக்கிறீர்கள். சென்னைக்கு அருகே துணை நகரங்கள் அமைக்கப்படும் என்றும் நீங்கள் அறிவித்தீர்கள். ஆனால், துணை நகரங்கள் இன்னும் அமைக்கப்படவில்லை. இப்போது Real Estate வியாபாரம் எங்கோ

[திரு. சி. ஞானசேகரன்] [2007 மார்ச் 26

போய்க்கொண்டிருக்கிறது. சென்னைப் பகுதியிலே இருக்கிறவர்கள் ஒரு plot-ஐ வாங்க வேண்டுமென்றால் ரூ.70 இலட்சம், ரூ.80 இலட்சம் என்கிறார்கள். ஆகவே, நீங்கள் துணை நகரத்தை அமைத்துக் கொடுத்தால்தான், சென்னை நகரத்தில் இருக்கக்கூடியவர்கள் ஏதாவது plot-ஐ வாங்கி, ஒரு சிறிய வீட்டையாவது அவர்களாலே கட்ட முடியும். ஆகவே, நீங்கள் ஒரு துணை நகரத்தை அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 10-40

அதேபோல, முன்னணி மாநிலம் என்று சொன்னீர்கள். ஆந்திராவிற்குப் போனால், அங்கே M.L.A. colony என்ற ஒன்றை Hyderabad-லே வைத்திருக்கிறார்கள். இப்பொழுதெல்லாம் விற்கிற விலையிலே, M.L.A.க்கள் இங்கே plot-ஐயே வாங்க முடியாது. ஆகவே, நீங்கள் 2 ground நிலத்தை M.L.A.க்களுக்கு, M.L.A. colony என்று Hyderabad-லே வைத்திருப்பதைப்போலவும், (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, பெங்களூரிலே M.L.A. colony என்று ஏற்கெனவே கர்நாடக அரசு வழங்கியிருப்பதைப்போலவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25 ஏக்கர் நிலத்தை, சோழிங்கநல்லூரிலோ அல்லது வேறு எங்கேயாவது ஓர் இடத்திலோ ஒதுக்க வேண்டும். ஏற்கெனவே கையகப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிற இடம் இருக்கிறது. அங்கே நீங்கள் உடனடியாக 25 ஏக்கர் நிலத்தை M.L.A. colony-க்கு என்று ஒதுக்கி, 2 ground நிலத்தை ஒவ்வொரு M.L.A.வுக்கும், அவர்கள் மந்திரியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் சரி (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது துணைத் தலைவராக இருந்தாலும் சரி அல்லது யாராக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் நீங்கள் வழங்க வேண்டும். நம்முடைய சபாநாயகருக்கும் வழங்க வேண்டும். அதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஆந்திராவிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னாலே வீடு கட்டுவதற்காக 10 இலட்சம் ரூபாய் வட்டியில்லாமல் கொடுத்தார்கள். விலைவாசியெல்லாம் ஏறியிருக்கக்கூடிய இந்தக் காலக்கட்டத்தில் 10 இலட்சம் ரூபாயில் கட்ட முடியாது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25 இலட்சம் ரூபாயை வட்டியில்லாத கடனாகக் கொடுத்து, அந்த plot-லே வீடு கட்டுவதற்கும் நீங்கள் வழங்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)



2007 மார்ச் 26] [திரு. சி. ஞானசேகரன்]

ஏனென்றால், 50 ஆண்டு கால வரலாற்றைப் படைத்திருக்கிற நீங்கள், M.L.A.க்களுக்கென்று சிலவற்றைச் செய்துவிட்டால்தான் நல்லது. ஆகவே, நீங்கள் M.L.A.க்களுக்கு M.L.A. colony-ஐ உடனடியாக அமைக்க வேண்டுமென்று நான் எல்லோருடைய சார்பாகவும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பொன் விழா ஆண்டில், எப்பொழுதுமே எல்லா M.L.A.க்களும், அவர்களுடைய குடும்பங்களும் நினைவுகூர வேண்டுமென்று சொன்னால், நீங்கள் அதற்கு ஒரு சுவடை ஏற்படுத்த வேண்டும். நிச்சயமாக உங்களுக்கென்று வரலாறு இருக்கிறது. இதையும் சேர்த்து ஒரு வரலாறாக நாங்கள் எங்களுடைய இதயத்திலே வைத்துப் பதித்துக்கொள்வோம். ஆந்திராவை, கர்நாடகாவை எப்பொழுதுமே முன்னுதாரணமாகக் காட்டுகிற நாம், இதிலேயும் காட்ட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, O.A.P. முதியோர் பென்ஷன் கோரி எல்லா இடங்களிலும் மனுக்கள் வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு இலக்கை நிர்ணயித்து, ஒரு மனுவை ஒரு முதியோர் கொடுத்துவிட்டால் அல்லது விதவை கொடுத்துவிட்டால், ஒரு மாத காலத்திற்குள் அவர்களுக்கு அந்த நிவாரணம் சென்றடையக்கூடிய வகையில் நீங்கள் ஒரு உத்தரவைப் போட வேண்டும். ஏனென்றால், முதியோர் பென்ஷன் சில பேருக்குக் கொடுக்கிறார்கள். ஆறு மாதங்கள், ஏழு மாதங்களானாலும்கூட அதற்கு ஒரு விடிவு காலம் கிடைக்கமாட்டேன் என்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ரேஷன் கார்டு கேட்டு மனு கொடுத்தால் 2 வாரத்தில் கொடுக்கப்படும் என்று நம்முடைய அமைச்சர் பதிலளித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அது பல இடங்களில் வராமல் இருக்கிறது. ரேஷன் கார்டுகள் உடனடியாகக் கிடைப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேலூர் நகரத்தில் உள்ள கட்டடங்களை வரன்முறைப்படுத்துவதைப் பொறுத்தவரை, நாம் இரண்டு முறைகள் சட்டத்தை இயற்றியிருக்கிறோம். C.M.D.A.வின் அனுமதியில்லாமல் ஏற்கெனவே கட்டடம் கட்டியிருக்கிறவர்களுடைய வீடுகளை அல்லது அவர்களுடைய கட்டடங்களை வரன்முறைப்படுத்துவதற்கென்று நாம் சட்டத்தை இயற்றினாலும்கூட, நீதிமன்றம் பெரியதா அல்லது சட்டமன்றம் பெரியதா என்கிற நிலையில்தான் போய்க

[திரு. சி. ஞானசேகரன்] [2007 மார்ச் 26

கொண்டிருக்கிறதேயொழிய, சட்டமன்றம் இந்த எல்லைக்குள் இயற்றுகிற சட்டத்திற்கு ஏற்றாற்போலத்தான் தீர்ப்புகள் இதில் வர வேண்டுமேயொழிய, சில நேரங்களில் அவை மாறுபட்டுப் போகின்றன. ஆகவே, இந்தச் சட்டமன்றத்தினுடைய supremacy–ஐ நிலைநாட்டுகிற வகையில், வரன்முறைப்படுத்தக்கூடிய அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, அதற்காக வேறொரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்தாவது, சென்னையிலே அனுமதியில்லாமல் வீடு கட்டியிருப்பவர்களுடைய வீடுகளையெல்லாம் வரன்முறைப்படுத்த வேண்டும். ஏனென்றால், இரண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். Time ஆகிவிட்டது. (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அவர்களாகவே இன்றைக்கு நிலத்தைப் பணம் போட்டு வாங்கி, கட்டடம் கட்டியிருப்பவர்களுடைய வீடுகளை வரன்முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மணல் குவாரிகளிலே நடக்கக்கூடிய சில முறைகேடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து தடுத்து நிறுத்திட வேண்டும். 2 யூனிட்டுக்கு, 5 யூனிட் என்றெல்லாம் ஏற்றி, சில நேரங்களில் ஆற்றையே காலி செய்துவிடுகிறார்கள். அதேபோல, மணல் விலை இன்றைக்கு ஒரு லோடு 4,000 ரூபாய் என்பது 4,400 ரூபாய் என்று ஏறியிருக்கிறது. சிமெண்ட் விலை 190 ரூபாய் என்பது இன்றைக்கு ரூ.245 என்று மாறியிருக்கிறது.

அதேபோல, ரேஷன் கடைகளில் பருப்பு, ஆயில் கொடுப்பதற்கான திட்டத்தை நீங்கள் வகுத்திருக்கிறீர்கள், நன்றி. ஆனால், புளி போன்ற இன்னும் பல பொருட்களையும் வழங்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு ஓர் இயக்குனரகத்தை உருவாக்கி, விலைவாசியைக் கட்டுக்கோப்பில் வைத்துக்கொள்வதற்கும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, மணல் கொள்ளையைத் தடுப்பதற்கு நீங்கள் மணல் வாரியம் ஒன்றை அமைக்க வேண்டும். பொதுப் பணித் துறையிலே கட்டப்படக்கூடிய அணைகள்; செண்பகத்தோப்பு அணையை நாங்கள் திருவண்ணாமலைக்குப் போய்ப் பார்த்தோம். ஏற்கெனவே போடப்பட்ட agreement பிரகாரம் பார்த்தால், அவர்கள் அணையை சிமெண்டால் கட்டியிருக்க வேண்டும். அணையின்மேலே இருக்கக்கூடிய சுவர்களைக் களிமண்ணால் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே,



2007 மார்ச் 26] [திரு. சி. ஞானசேகரன்]

நான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், டெண்டர் கண்டிஷன்படி அது கட்டப்படாமல் இருக்கக்கூடியதை விசாரணை செய்து, அந்த ஊழல் பெருச்சாளிகளை நீங்கள் கண்டுபிடித்து, அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, அணைகள் அணைகளாக இருக்க வேண்டும். ஏனென்று சொன்னால், சாத்தனூர் அணை, வீடூர் அணை போன்றவையெல்லாம் கர்ம வீரர் காமராஜர் காலத்தில் கட்டப்பட்டவை. இன்னும் தலை நிமிர்ந்து நின்றுகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட அணைகளைப்போல செண்பகத்தோப்பு அணை, மிருகண்டா நதி அணை எல்லாம் அமைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** செண்பகத்தோப்பு, மிருகண்டா நதி அணை, குப்பநத்தம் அணைகளை நாங்கள் துவக்கிவிட்டுத்தான் போனோம். கட்டப்பட்டது கடந்த கால ஆட்சியில். அவற்றிலே சில பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அந்த அணைகளை மீண்டும் செப்பனிட்டு, அணைகளைப் பலப்படுத்துகிற காரியத்தை இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிட்டேன். ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Time ஆகிவிட்டது. உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) சரி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி.

அடுத்து, Food Inspector posts எல்லா இடங்களிலும் காலியாக இருக்கின்றன. சென்னை மாநகராட்சியில் 753 இடங்கள் காலியாக உள்ளன. அதேபோல் நகராட்சிகள், Primary Health Centres. உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டமே பயன்படுத்தப்படாமல் இன்று நிறைய

[திரு. சி. ஞானசேகரன்] [2007 மார்ச் 26

உணவுக் கலப்படப் பொருட்கள் சந்தையிலே விற்கக்கூடிய நிலை இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு நீங்கள் Food Inspectors-ஐ முழுமையாக எல்லா இடங்களிலும் நியமனம் செய்து, உணவுக் கலப்படத்தைத் தடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கக்கூடிய வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்கக்கூடிய ஒரு தொழிற்சாலையை உங்கள் காலத்தில் நீங்கள் உடனடியாக இந்த ஆண்டே உருவாக்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய வேலூரில் சக்தி அம்மாள் என்கிற ஒரு சாமியார் ஒரு golden temple--ஒரு தங்கக் கோயிலையே கட்டிக்கொண்டிருக்கிறார். ஆகவே, வேலூரைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து, வேலூரைச் சுற்றுலா மையமாக மாற்றி அமைத்து, நீங்கள் அங்கே ஒரு சுற்றுலா அலுவலரைப் போட்டு நல்ல வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Forest-களில் இப்போது ரோடே போட முடியவில்லை. பணத்தைக் கொடுத்தாலும்கூட இப்போதெல்லாம் வனத்திலே ரோடு போடாமல் நம்முடைய வன அதிகாரிகள் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நம்முடைய மத்திய வனத் துறை அமைச்சரை அழைத்துப் பேச வேண்டும். ஆந்திராவிலே போய்ப் பார்த்தால், குப்பத்திலே எங்கு பார்த்தாலும் பெரிய, பெரிய அகலமான ரோடுகளை வனத்திலே போட்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய வன அதிகாரிகள், எங்களுடைய பஞ்சாயத்துக்களான புதூர் நாடு, ஜவ்வாது மலையில் இருக்கக்கூடிய பகுதிகளிலே ரோடு போடுவதற்கே அனுமதிப்பதில்லை. ஊட்டியிலே பார்த்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் பணம் ஒதுக்கி, 3 ஆண்டுகள் ஆகியும்கூட, பல இடங்களிலே ரோடு போடாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த வனத் துறை அதிகாரிகளை எல்லாம் வைத்து ஒரு கூட்டத்தைக் கூட்டி, அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி சொல்லி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்திலே கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண்



2007 மார்ச் 26] [திரு. தி. வேல்முருகன்]

என்னுடைய நன்றியினைத் தெரிவித்து, இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக்கி, ஆறாவது ஆண்டாக இந்த நிதிநிலை அறிக்கையின் விவாதத்தை எங்கள் இயக்கத்தின் சார்பாகத் தொடங்கி வைத்துப் பேசுகின்ற வாய்ப்பை எனக்கு வழங்கிய எம் தமிழினப் போராளி, மருத்துவர் அய்யா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் இன்றைக்குச் சிறப்பான நல்ல பல திட்டங்களையும், செயல்பாடுகளையும், எதிர்காலத் தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கான ஆக்கபூர்வமான அறிவிப்புகளையும் வெளியிட்டுள்ள தமிழக அரசையும், முத்தமிழறிஞர் டாக்டர் முதல்வர் அவர்களையும், நம்முடைய பேராசிரியர் பெருந்தகை அவர்களையும் பாராட்டி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். அந்த அடிப்படையில், இன்றைக்கு விவசாயிகளுக்கு வழங்கும் கடன் வட்டி விகிதத்தை 7 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கின்ற அறிவிப்பும், என்னுடைய பண்ருட்டி தொகுதியில் பல ஆண்டு காலமாக நான் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கின்ற முந்திரித் தொழிற்சாலை 17 கோடி ரூபாயில் பண்ருட்டியிலே அமையும் என்ற நல்ல அறிவிப்பும் எனக்குத் தந்திருக்கிற தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்கிறேன்.

அதேபோல், தமிழ் வழியில் பயில்கின்ற பத்தாவது வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வுக் கட்டணத்தைத் தமிழக அரசும், நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் இரத்துச் செய்திருக்கிற நல்ல அறிவிப்பு; அதேபோல், இன்றைக்கு அரசுக் கலைக் கல்லூரிகளில் ஏழை எளிய மாணவர்களுடைய உயர் நிலைப் படிப்பைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கான கட்டணங்களை இரத்துச் செய்கின்ற அறிவிப்பு;

முற்பகல் 10-50

அதேபோல், கூடுதலான பொருட்களை நம்முடைய அரசினுடைய பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கொண்டு வந்து—அதிலும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தில் பதிலளிக்கின்றபோது, அவை பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு, சீல் வைக்கப்பட்டு உறைகளிலே அடைத்துத் தருகின்ற அறிவிப்போடு—அவைகளையெல்லாம் தமிழக அரசு இன்றைக்குத் தர இருக்கிறது என்கிற நல்ல பல செய்திகளையும் நான் வரவேற்கிறேன்.

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அறிவிப்புகளில் இடம்பெறும் என்று நாங்கள் மிகப் பெரிய எதிர்பார்ப்போடு இருந்த, தமிழகத்தில் வாழுகின்ற ஆறரைக் கோடி தமிழர்களில் இரண்டரைக் கோடிக்கு மேற்பட்டு வாழ்கின்ற தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதாக இருக்கும் என்று காத்திருந்த, அரசு மதுபானக் கடைகளுக்கு மூடு விழாவை அல்லது அதற்கான இறுதிப் பயணத்தை எட்டுகின்ற ஓர் அறிவிப்பைத் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று இருந்த அந்த எதிர்பார்ப்பு இன்றைக்கு எங்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது என்கிற அந்தச் செய்தியை நான் இங்கு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் நம்முடைய முதல்வரிடத்தில் அன்றைய காலக்கட்டத்திலே, இந்த மதுவிலக்குக் கொள்கைக்கு எதிராக அரசு எந்தவித நடவடிக்கையும் எடுத்துவிடக் கூடாது என்று கோரிக்கை வைத்த வரலாறுகளை அடியேன் சிறுவனாக இருந்தாலும், செய்தித்தாள்களிலும், பத்திரிகைகளிலும் தெரிந்துகொண்ட அந்த அடிப்படையிலும், தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் பெரிதும் மதிக்கின்ற தந்தை பெரியார் அவர்கள்கூட தன்னுடைய தோட்டத்தில் இருந்த தென்னை மரங்களை வெட்டி, அதன்மூலமாக மது ஒழிப்பினுடைய பிரச்சாரத்திற்கு வித்திட்டார் என்கிற வரலாறுகளும், பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில் அரசு அதிகாரிகள் சென்று, கோடிக்கணக்கான ரூபாய் நமக்கு வருமானம் வரும் சாராயக் கடைகளைத் திறந்தால் என்று சொல்லுகின்றபோது, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் நமக்கு வரும்; ஆனால், கோடிக்கணக்கான ஏழைத் தாய்மார்களின் கண்ணீருக்குப் பின்னால்தான் இந்த வருமானம் இருக்கும் என்பதும் எனக்குத் தெரியும்; அதனால் இதை நான் அனுமதிக்கமாட்டேன் என்று சொன்ன அந்த வரலாறுகளும், இன்றைக்கு வரலாறாகவே வாழந்துகொண்டிருக்கின்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தெரியும். கடந்த கால ஆட்சியின்போது மதுபானக் கடைகளை—டாஸ்மாக் 8,000-க்கும் மேற்பட்ட கடைகளைத் தொடங்கி, அரசு விநியோகிக்கின்ற குடும்ப அட்டைகள்மூலமாகப் பெறுகின்ற உணவுப் பொருட்கள் கிடைக்கின்றனவோ, இல்லையோ, எந்தப் பட்டிதொட்டியாக இருந்தாலும், டாஸ்மாக் கடைகளிலே இன்றைக்குச் சாராயம் கிடைக்கும், மதுபானங்கள் கிடைக்கும் என்றிருக்கிற நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று எங்கள் தமிழினப் போராளி





மருத்துவர் அய்யா அவர்கள் அந்தப் போராட்டத்தை அறிவிக்கின்றபோது, அந்தப் போராட்டத்தின்போது தாய்மார்கள் என்றும் பாராமல் அன்றையதினம் அவர்கள்மீது வழக்குப் போட்டு, வழக்கிலே கைது செய்து, இன்றைய அளவிற்கும் நீதிமன்றத்திலே பாட்டாளி மக்கள் கட்சியினுடைய மகளிர் சங்கத்தினுடைய தாய்மார்கள் எல்லாம் அலைந்துகொண்டிருக்கிற ஒரு சூழலும் நிலவிக்கொண்டிருக்கிறது.

இந்தச் சூழலில்தான் இன்றைக்குத் தமிழகத்தினுடைய முதல்வரிடத்திலே எங்கள் அய்யா அவர்கள் வேண்டுகோள் வைக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களே, பக்கத்து மாநிலத்தினுடைய முதல்வராக இருக்கின்ற கர்நாடகத்தினுடைய முதல்வர் சிறிது காலம் முன்புதான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர். உங்களுடைய அரசியல் அனுபவத்திலும், உங்களுடைய ஆளுமைப் பண்புகளிலும், உங்களுடைய நிர்வாகத் திறமையிலும் நூறில் ஒரு சதவீதம் என்றுகூட நான் சொல்ல முடியாது; பக்கத்து மாநிலத்தினுடைய முதலமைச்சரைக் குறை சொல்லி நான் மன்றத்திலே பதிவு செய்ததாகிவிடும்; அந்தளவுக்கு அனுபவம் இல்லாத ஒரு இளைய முதலமைச்சர் இன்றையதினம் அந்த மாநிலத்தில் பூரண மதுவிலக்கை அறிவித்திருக்கின்றபோது, நிர்வாகத் திறமையாக இருந்தாலும், ஆட்சி பரிபாலனமாக இருந்தாலும், தோழமை இயக்கங்களை அரவணைப்பதாக இருந்தாலும், எந்த நிலைகளிலும் இந்தத் தமிழ்நாட்டை முன்னேற்ற வேண்டும் என்று இந்தத் தள்ளாத வயதிலும் உழைத்துக்கொண்டிருக்கிற மாண்புமிகு முத்தமிழறிஞர், தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே, நீங்கள் உடனடியாக 8,000 கடைகளையும் மூடாவிட்டாலும்கூட, இரண்டு முறையாகச் செய்யலாம். இந்தத் தமிழகத்தின் தாய்மார்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்கும், தமிழகத்திலே இருக்கின்ற இலட்சக்கணக்கான குடும்பங்கள் இன்றைக்குக் கண்ணீரும், கம்பலையுமாக விதவைக் கோலம் பூணுகின்ற செயலைத் தடுத்து நிறுத்துவதற்கும் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இந்தக் கொள்கைக்கு எதிராகப் பெருந்தலைவர் காமராஜர் அவர்களிடம் கருத்துக் கேட்கின்றபோது, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் சொன்னார்கள், "இப்போதுதான் ஆதி திராவிட மக்களுடைய, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வீடுகளிலே அலுமினியத் தட்டுக்களையும், ரேடியோக்களையும் பார்க்கின்றோம். இந்தச் சூழலில் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினால், இது மிகப் பெரியதொரு

[திரு. தி. வேல்முருகன்] [2007 மார்ச் 26

பேராபத்தாக முடியும்'' என்று சொன்ன வரலாற்றுச் செய்திகளையெல்லாம் உள்வாங்கிக்கொண்டு தலைவராக இருக்கின்ற நீங்கள், நிச்சயமாக இதில் வருகின்ற வருமானத்தை ஈடு செய்வதற்கு நல்ல பல திட்டங்களை உங்களால் இந்த நாட்டிலே கொண்டு வர முடியும் என்கிற அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான், அதை அரசு உடனடியாக மூட வேண்டும்; ஏழைத் தாய்மார்களுடைய கண்ணீரையும், வாட்டத்தையும் போக்கிட வேண்டும்; எதிர்காலச் சந்ததியினருடைய வாழ்க்கையைச் சீரழிக்கின்ற, 12 வயது, 11 வயது இளைஞர்கள்கூட இன்றைக்கு மதுபானத்திற்கு அடிமையாகி, தங்கள் வாழ்க்கையை இன்றைக்குப் பாழ்படுத்திக்கொள்கின்ற கொடுஞ்செயலில் இருந்து இந்த நாட்டு மக்களைக் காக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கின்ற காரணத்தினாலே, தயவுசெய்து நீங்கள் இதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-55*

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. துரை சந்திரசேகரன் தலைமை)*

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அடுத்து, இந்தச் சட்டப் பேரவையினுடைய கடந்த கூட்டத் தொடரிலே நான் சொன்னேன்; லாட்டரிச் சீட்டுகளும், கள்ளச்சாராயமும், கஞ்சாவும், போதைப் பொருட்களும் பல்வேறு இடங்களிலே இன்றைக்கு விற்கப்படுகின்றன; அதைத் தடுத்து நிறுத்துவதற்குத் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவுக்கிணங்க, தமிழகத்தினுடைய காவல் துறை மிகச் சிறப்பாக அன்றையதினம் பணியாற்றி, சிறப்பானதொரு நடவடிக்கையை எடுத்திருப்பதாகத் தாங்கள்கூட பத்திரிகையாளர்களுடைய கேள்வி-பதிலிலே, முரசொலியிலே பதிலளித்திருக்கிறீர்கள். பத்திரிகையாளர்களுடைய கேள்வி, "தமிழக அரசினுடைய சார்பில் லாட்டரிச் சீட்டுகள் நடத்தப்படாவிட்டாலும், வேறு மாநிலப் பரிசுச் சீட்டுகளைத் தமிழகத்தில் சட்ட விரோதமாக விற்பவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?" மார்ச் திங்கள் 6 ஆம் நாள்; முதல்வர் அவர்களுடைய பதில்; "20-2-2007 முதல் 22-2-2007 வரையுள்ள மூன்று நாட்களில் மட்டும், தமிழகத்தில் சட்ட விரோதமாக வெளிமாநிலப் பரிசுச் சீட்டுகள் விற்றவர்கள் என்று 580 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 556 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து 1,05,617 சீட்டுகளும், 54,679 ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டிருக்கிறது"



2007 மார்ச் 26] [திரு. தி. வேல்முருகன்]

என்று நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களே, நான் பேசிய அந்தப் பேச்சுக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுத்து, நீங்கள் கொடுத்த அந்த உத்தரவின் அடிப்படையில் மூன்று தினங்களில் இவ்வளவு கைப்பற்றப்பட்டிருக்கின்றன; இத்தனை பேர்மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இன்றைக்கு இதற்குப் பின்னால் இருந்து இதை இயக்குகின்ற ஒரு சக்தி இந்தத் தமிழகத்திலே இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அதைக் கனிவோடு பரிசீலனை செய்ய வேண்டும். இந்த மண்ணிலே real estate என்கிற வியாபாரம் செய்வதற்கும், இதுபோன்ற தவறான செயல்களிலே ஈடுபடுகின்றவர்களுக்கும், நூறில் ஒரு சதவிகிதம் இந்த மாநிலத்திலே இருக்கின்ற ஒரு சில உயர் துறைகளிலே இருக்கின்ற, காவல் துறையின் பொறுப்பிலே இருக்கின்ற அதிகாரிகள் துணை நிற்கிறார்கள். அவர்களைக் கண்டறிந்து, உங்களுடைய திறமையின்மூலமாக, நீங்கள் ஆளுகின்ற அந்தப் பண்பின்மூலமாக உங்களுக்கே இருக்கின்ற அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள்மீது மிகக் கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சிறு வணிகத்தில் தமிழகத்தில், இந்தியா உள்ளிட்ட நாடுகளிலே, வளர்கின்ற இதுபோன்ற நாடுகளிலே இன்றைக்கு Wal-Mart என்கிற அமெரிக்க நிறுவனமும், Reliance போன்ற நிறுவனங்களும் ஈடுபடுகின்றன. ஏழை விவசாயிகள் தங்கள் உற்பத்தியைக் கொண்டு வந்து, கிராமப்புறங்களாக இருந்தாலும், நகர்ப்புறங்களாக இருந்தாலும் மாநகராட்சிப் பகுதிகளாக இருந்தாலும், சிறு கடைகளை வைத்து, காய்கறிக் கடைகள் முதல் இன்றைக்கு எல்லா நிலைகளிலும் அந்த வியாபாரத்தைச் செய்கிறார்கள். அதிலும் இதுபோன்ற நிறுவனங்கள் இந்த மண்ணிலே கால் பதிக்கின்றபோது, நம்முடைய உழைப்பும், நம்முடைய பாரம்பரியமும், அதைச் சார்ந்து வாழ்கின்ற விவசாயிகளுடைய வாழ்க்கையும் பாதித்து, இன்றைக்குச் சுமார் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழகத்தினுடைய சிறு வியாபாரிகள் இதனால் பாதிப்பிற்குள்ளாகின்றார்கள். இதுபோன்ற அமெரிக்க நிறுவனங்களும், Reliance போன்ற பணக்காரக் கும்பல்களும் தமிழ் மண்ணிலே காலூன்றுகின்றபோது, அவர்கள் தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த எதிர்காலத்தை, இந்த வணிகத்தைத் தங்கள் கைகளுக்கே கொண்டு வந்து, அவர்கள் தக்காளிக்கு என்ன விலை வைக்கின்றார்களோ, அவர்கள் கேரட்டுக்கு என்ன விலை வைக்கின்றார்களோ, கத்தரிக்காய்க்கு என்ன விலை வைக்கின்றார்களோ,

[திரு. தி. வேல்முருகன்] [2007 மார்ச் 26

அந்த விலைக்குத்தான் எதிர்காலத் தலைமுறையினர் வாங்க முடியும் என்கிற ஒரு மிகப் பெரிய சூழ்ச்சியை இந்த நிறுவனங்கள் இந்த மண்ணிலே இன்றைக்குத் தொடங்கிக்கொண்டிருக்கின்றன. இதைத் தமிழக அரசும், இந்திய அரசும் தடுத்து நிறுத்த வேண்டும். தமிழ்நாட்டில் மட்டும் சிறு வணிகத்தில் ஈடுபட்டு, நேரடியாகப் பயன்பெறுகின்றவர்கள் ஒரு கோடிக்கும் மேற்பட்டவர்கள். அதை நம்பி வாழ்கின்ற 6 கோடிக்கும் மேற்பட்ட மக்களுடைய வாழ்க்கையை, அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாழடிக்கக்கூடிய ஒரு செயலில் இந்த வணிக நிறுவனங்கள் தமிழகத்தில் இன்றைக்கு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

அதேபோல, மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததாக எனக்குத் தெரியவில்லை. 1986–ல் கடந்த கால அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது ஓர் அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அரசாணையில், கடலூர் மாவட்டத்தில் நொச்சிக்காடு, தியாகவள்ளி, நடுத்திட்டு ஆகிய கடலோரக் கிராமங்களில் இருக்கின்ற ஆயிரக்கணக்கான முந்திரிக் காடுகளையும், சவுக்குத் தோப்புகளையும், தென்னந்தோப்புகளையும், வெட்டிவேர் பயிர் செய்கின்ற விவசாய மக்களுடைய விளை நிலங்களையும், அவர்களுடைய வாழ்வாதாரத்தை, அவர்களுடைய குடும்பத்தைச் சிதைக்கின்ற ஒரு மிகப் பெரிய உத்தரவு, அந்த உத்தரவு என்னவென்று சொன்னால், அங்கு ஒரு தனியார் நிறுவனம் வரவிருக்கிறது, அந்தத் தனியார் நிறுவனத்திற்காக மட்டும்தான் இந்த நிலத்தைப் பத்திரப் பதிவு அதிகாரிகள் பதிவு செய்ய வேண்டும். வேறு எந்த நபர்களுக்கும் பத்திரப் பதிவு செய்வதற்கு--மண்ணின் மைந்தர்களாகிய உங்களுக்கு, பூர்வீகக் குடிமக்களாகிய உங்களுக்கு உரிமையில்லை என்கிற உத்தரவு. அந்த உத்தரவின் அடிப்படையில், நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகும் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு, தமிழக அரசின் சார்பாக கடலூர் மாவட்டததினுடைய Registrar அவர்களுக்கு உத்தரவு சென்றிருக்கிறது. ஒரு தனி நபருக்கு மட்டும்தான் அந்த நிலத்தைப் பத்திரப் பதிவு செய்து தர வேண்டும், வேறு யாருக்கும் தரக் கூடாது என்று. ஆயிரக்கணக்கான ஏக்கர்களைக் கையகப்படுத்தி, அந்த மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதித்து,



2007 மார்ச் 26] [திரு. தி. வேல்முருகன்]

அவர்களுடைய வாழ்க்கைச் சூழலைப் பாதித்து, அந்த மண்ணின் மைந்தர்கள் அங்கு கோயில் கட்டி, குளம் வெட்டி வாழ்ந்த அந்த வாழ்க்கைச் சூழலையே மறந்துவிட்டு, வேறு ஒரு இடத்திற்கு அவர்களை அகதிகளாக மாற்றுகின்ற திட்டம்; தமிழகத்தினுடைய எந்தத் திட்டமாக இருந்தாலும், மக்களை வாட்டக்கூடிய திட்டமாக இருந்தால், மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய திட்டமாக இருந்தால், அதை இந்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், அந்த மக்கள் இன்றையதினம் அங்கு போராடிக்கொண்டிருக்கிறார்கள். தனியார் நிறுவனத்திற்கு எங்களுடைய விளைநிலங்களை, எங்களுடைய விவசாய நிலங்களை, நாங்கள் வாழ்கின்ற அந்த இடத்தை ஒருபோதும் விட்டுத் தரமாட்டோம் என்கிற நிலைமைக்கு அவர்கள் வந்து போராடிக்கொண்டிருக்கிறார்கள். இதை நீங்கள் கவனத்திலே கொள்ள வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு முதல்வர் அவர்களே, அதேபோல நான் பல ஆண்டுகளாக எங்கள் முந்திரி விவசாயிகளுடைய கோரிக்கையை வைத்து வருகிறேன். தேயிலைக்குக் கடந்த கால அரசுகூட விலை நிர்ணயம் செய்தது. ஆனால், உற்பத்தி செய்கின்ற விவசாயிக்கு, அது வாழை மரமாக இருக்கலாம், முந்திரியாக இருக்கலாம்; காய்கறிகளாக இருக்கலாம், பலாப்பழங்களாக இருக்கலாம், மாம்பழமாக இருக்கலாம், எந்தப் பொருளையும் உற்பத்தி செய்கின்ற விவசாயி, அதற்கு விலை நிர்ணயம் செய்யக்கூடிய இடத்தில் இல்லை தமிழகத்தில். ஆதலால், ஒரு மூட்டை முந்திரிக் கொட்டை பொறுக்குவதற்கு எங்கள் முந்திரி விவசாயிக்குக் கிட்டத்தட்ட 7,000 ரூபாய்க்கு மேல் செலவாகிறது. அவ்வளவு செலவு செய்து, அந்த முந்திரிக்கு மூன்று முறை மருந்தடித்து, ஏர் ஓட்டி, இலவு கொத்தி, அதைப் பாதுகாத்து, பராமரித்து, அந்த முந்திரிக் கொட்டைகளைப் பொறுக்கி, பதப்படுத்தி, பருப்புகளாக விற்கின்றபோது, ஒரு மூட்டை வெறும் 3,000 ரூபாய்க்குக்கூட விற்பனையாவதில்லை. என்னுடைய தொகுதியிலே முந்திரித் தொழிலாளர்கள் பலர் மடிந்திருக்கிறார்கள்; தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியின்போது, ஆதாரத்தோடு இந்த அவையிலே நான் பேசினேன். எந்த அறிவிப்புகளும் வரவில்லை. ஆதலால், முத்தமிழறிஞர் முதல்வர் அவர்களே, அந்த முந்திரி விவசாயிகளுக்கு மூட்டை ஒன்றிற்கு 7,500 ரூபாய் என்கிற ஒரு தகுதியான விலையை நிர்ணயம் செய்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. தி. வேல்முருகன்] [2007 மார்ச் 26

அதேபோல, ஏழை விவசாயிகளுடைய சுமார் 7,000 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்த இந்த அரசு, பத்துக்கு மூன்று என்ற அளவிலான குடிசைகளில் வாழ்கின்ற அந்த ஏழை விவசாயிகள் விவசாய வங்கிகளின்மூலமாக வீடு கட்டுவதற்குக் கடன் வாங்கி, ஏதோ சொற்ப அளவிலே ஒரு வீடு கட்டியிருந்தால், அதற்கான முழுத் தொகையையும், பல மாத வட்டியையும் சேர்த்து, இன்றைக்கு வட்டி மேல் வட்டி என்று சொல்லி, வீடு கட்டுவதற்கு வாங்கிய அந்தத் தொகையைத் தள்ளுபடி செய்யவில்லை. அதைக் கட்ட வேண்டுமென்று அரசு அதிகாரிகள் அவர்களை வாட்டி வதைக்கின்றார்கள். அந்தத் தொகையைத் தமிழக அரசு முழுவதுமாக இரத்துச் செய்ய வேண்டும். ஒரு அரசு, மத்திய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும், தனி மனிதனுக்கு வீடும், உணவும், குடியிருப்பும் அவசியம் என்கிற கருத்திற்கிணங்க, அந்த ஏழை விவசாயிகள் வீடு கட்டிக்கொள்வதற்கு வாங்கிய கடன்களை இரத்துச் செய்து, அந்த வட்டி விகிதத்தையும் இரத்துச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, மாண்புமிகு முதல்வர் அவர்களே, கடந்த முறை நான் கூட்டத் தொடரிலே பேசினேன். காவல் துறைக்கு ஆள் எடுக்கின்றபோது, குறிப்பாக 500–க்கும் மேற்பட்ட பெண் அல்லது ஆண் காவலர்களைத் தேர்வு செய்கின்றபோது, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு வாய்ப்பு அளிக்கின்ற வகையில் ஒரு ஐந்து ஆண்டு காலம் வயது வரம்பை நீங்கள் தளர்த்தித் தர வேண்டுமென்று கேட்டேன். தாங்கள் ஆவன செய்வதாக நான் கருதிக்கொண்டிருந்தேன். ஆனால், திரும்பவும் இப்பொழுது அந்த அறிவிப்பு வந்திருக்கிறது. வயது வரம்பு தளர்த்தல் என்பது அறிவிக்கப்படாமல் இருக்கிறது. இதை நீங்கள் கருத்திலே கொண்டு, மறு உத்தரவு வழங்க வேண்டும். ஐந்து ஆண்டு காலம் வயது வரம்பைத் தளர்த்தி, அவர்கள் அந்தப் பணியில் சேர்வதற்கான வாய்ப்பை நீங்கள் தர வேண்டும். அதிலும் குறிப்பாக, காவல் துறையிலே காவலர்களாக, தலைமைக் காவலர்களாக, எழுத்தர்களாகப் பணியாற்றுகின்ற காவல் துறை நண்பர்களுக்கு, 100–ல் 20 சதவீதம் உதவி ஆய்வாளர் பணிக்கு அவர்களைத் தேர்வு செய்வதற்கான வாய்ப்பை நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.



2007 மார்ச் 26] [திரு. தி. வேல்முருகன்]

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசில் நாங்கள் எதிர்பார்ப்பது—கடலூர் மாவட்டத்திலே இருக்கின்ற விருத்தாசலம் என்ற ஊருக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்களால் அது திருமுதுகுன்றம் என்று பெயர் மாற்றப்பட வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை எழுப்பப்பட்டு, அன்றைய அரசும் அதனைப் பரிசீலித்து இருக்கிறது. மத்திய உள் துறை அமைச்சகத்திலிருந்து கடந்த சில நாட்களுக்கு முன்பாக எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது, 'தமிழக அரசிடம் நாங்கள் விவரம் கேட்டோம்; இன்னும் அந்த விவரம் எங்களுக்கு வரவில்லை; வந்தால் நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்' என்று. முத்தமிழறிஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் விருத்தாசலம் என்கின்ற அந்தப் பெயரை மாற்றி திருமுதுகுன்றம் என்ற அற்புதமான தமிழ்ப் பெயரைச் சூட்டுவதற்குத் தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நில வள வங்கிகளில் பணிபுரியும் அலுவலர் பெருமக்களுக்குப் பணி வரன்முறை செய்வதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்திருந்தும்கூட, துறையினுடைய தலைவர்களால் இதுவரையில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சங்கத்தினுடைய நிர்வாகிகள் என்னிடத்திலே புகார் மனுவைத் தந்திருக்கிறார்கள். சிறப்பாகச் செயல்படக்கூடிய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி முதலமைச்சர் அவர்களிடம் கலந்தாலோசித்து நல்லதொரு முடிவு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தாங்கள் அறிவித்திருக்கின்ற அண்ணா மறுமலர்ச்சித் திட்டமாக இருந்தாலும், புதிய திட்டங்களாக இருந்தாலும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய திட்டங்களாக இருந்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்துகின்ற ஒன்றியப் பணி மேற்பார்வையாளர்கள் என்று சொல்லக்கூடிய, ஊரர்ட்சி ஒன்றியத்தில் பணிபுரிகின்ற ஒன்றிய **Overseers** கிட்டத்தட்ட 15, 20 ஆண்டுகளாகப், பதவி உயர்வு பெறாமல் அதே நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால்,

மற்ற துறைகளில் அவர்களுக்குக் கீழே இருக்கின்றவர்களெல்லாம் பதவி உயர்வுபெற்று வட்டார வளர்ச்சி அலுவலராக, பொறியாளர்களாக ஆகி வேலை பார்க்கின்ற ஒரு நிலைக்கு உயர்கின்றபோது, அரசுத் துறையைச் சார்ந்த இந்த நண்பர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி, தாங்கள் செய்கின்ற பணியில், கடமை உணர்வில் மிகப் பெரிய தொய்விற்கு உள்ளாகியிருக்கின்றார்கள். அதனால், அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நியாயமான பதவி உயர்வுகளை இந்த அரசு வழங்க வேண்டும்.

அதேபோல, உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் இன்றைக்குத் தமிழகத்தில் கிட்டத்தட்ட 800 பேர் இருக்கிறார்கள். இதனை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவர்களுக்கு அதற்குமேல் பதவி உயர்வே இல்லை என்கின்ற நிலை இருக்கிறது. அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, நான் பல ஆண்டு காலம் கோரிக்கை வைத்தேன். காலையிலேகூட உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே வணக்கம் செலுத்துகின்றபோது, நான் உன்னைப் பார்க்க மாட்டேன் என்று சொன்னார். ஏன் என்று கேட்டேன்; நீ கல்லூரி கேட்பாய் என்றார். நான் கேட்கிறேன், முதல்வர் அவர்களே, ஒரு பிற்படுத்தப்பட்ட சமூகம், ஆதி திராவிட சமூகம், வஞ்சிக்கப்பட்ட சமூகம் இன்றைக்கு உயர் நிலைக் கல்விபெற வேண்டுமென்பதற்காகக் கட்டணங்களை இரத்துச் செய்கின்ற இந்த அரசு, அந்தப் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட மக்களுடைய கல்வி வளர்ச்சிக்காக என் தொகுதியில் இந்த ஆண்டு நிச்சயமாக ஒரு அரசுக் கலைக் கல்லூரியை அமைத்துத் தருவதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டும். அப்படியில்லையென்று சொன்னாலும், இந்த வேல்முருகன் கடந்த 5 ஆண்டு காலம் மட்டும் அல்ல, இந்த 5 ஆண்டு காலத்திலும் இந்தக் கோரிக்கையை விடாமல் எழுப்பிக்கொண்டிருப்பான்; அதற்காகவாவது கருணையோடு நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோன்று, கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவருக்குச் சிலை அமைத்த தலைவர் அவர்களே, அங்கே நாங்கள் நம்முடைய உறுதிமொழிக் குழுவின் சார்பாகவும், பொதுக் கணக்குக் குழுவின்





சார்பாகவும் சென்று ஆய்வு செய்கின்றபோது, விவேகானந்தர் பாறையிலிருந்து அய்யன் திருவள்ளுவர் சிலையினைப் பார்ப்பதற்குப் படகுகளிலே செல்கின்றார்கள். கொஞ்சம் கடல் சீற்றம் இருக்கும்போது, அந்தப் படகுகளில் அங்கு பொது மக்களை அனுமதிப்பது இல்லை. அதற்கு இடைப்பட்ட தூரத்திலே, 100 மீட்டர்கூட அல்ல, 50 மீட்டரில் அழகான பாறைகள் எல்லாம் இருக்கின்றன; அங்கு அற்புதமான ஒரு பாலத்தை நீங்கள் ஏற்பாடு செய்தால் பொது மக்கள் நடந்து சென்று, அழகாக விவேகானந்தரையும் பார்ப்பார்கள்; அய்யன் திருவள்ளுவரையும் பார்ப்பார்கள். அதற்கு ஒரு தரைப் பாலத்தை அமைத்துத் தருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடலூர் மாவட்டத்தில் கடந்த முறை ஒரு சாதிப் பிரச்சினை ஏற்பட்டு, ஒரு ஆதி திராவிடச் சகோதரர் படுகொலை செய்யப்பட்டார். 5 இலட்சம் ரூபாய் நிதி தர வேண்டுமென்று சட்டமன்றத்திலே நான் பேசினேன். தோழர் செல்வப்பெருந்தகை மற்றும் ரவிக்குமார் எல்லாம் பேசினோம். முதலமைச்சர் அவர்கள் இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கினார்கள். நாங்களும் வரவேற்றோம். நன்றி சொன்னோம். அங்கே மிகப் பெரிய சாதிக் கலவரம் நடப்பது தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு கடந்த சில நாட்களுக்கு முன்பு வன்னியர் சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் ஒரு கோயில் திருவிழாவில் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். காவல் துறைக்குப் புகார் கொடுத்தும், இதுநாள் வரையிலும் இன்னும் முக்கியக் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை என்கின்ற ஒரு நிலையிருந்தாலும், கொலை நிகழ்ச்சிப் பாதிப்பால் அந்த மக்கள் சாலை மறியல் போராட்டங்களைச் செய்கின்றபோது, ‘அதெல்லாம் வேண்டாம், நான் முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்கிறேன், நிச்சயமாக நிவாரணம் கிடைக்கும்’ என்று நான் அவர்களிடம் வாக்களித்திருக்கின்றேன். ஆனால், கொலை நடந்து இத்தனை நாட்கள் ஆகியும், இன்றைக்கு அந்தக் குடும்பத்திற்குத் தமிழக அரசினுடைய நிதி ஒரு பைசாகூடச் சென்றடையவில்லை என்ற வருத்தமான செய்தியை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அங்கு வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட உமாநாத் என்பவருடைய குடும்பத்துக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே முன்வைக்க விரும்புகிறேன்.

முத்தமிழறிஞர் அவர்களே, நீங்கள் பத்திரிகைத் துறையிலும், எல்லாத் துறைகளிலும் கால் பதித்தவர்கள். இங்கே மாடத்திலே அமர்ந்திருக்கின்ற நம்முடைய சக பத்திரிகை நண்பர்களும், இன்னும் எத்தனையோ பேர் வீடில்லாமல் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்ற செய்தி வந்துகொண்டிருக்கிறது. அதேபோல, அவர்களின் இறப்பிற்குப் பின்னால் இரண்டு இலட்சம் ரூபாய் தருவதாகத் தமிழக அரசு அறிவித்து, தந்துகொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தத் தொகையை 5 இலட்சம் ரூபாய் என உயர்த்தித் தர வேண்டும். கணினி உலகத்திலே பணிபுரிகின்ற, software நிறுவனத்தில் பணிபுரிகின்ற சாதாரண ஊழியருக்கு இன்றைக்கு ஒரு இலட்சம் ரூபாய், இரண்டு இலட்சம் ரூபாய் சம்பளம் தருகிறார்கள். ஆனால், பத்திரிகைத் துறை நண்பர்கள், சமுதாயத்தில் நடைபெறுகின்ற பிரச்சினைகள், நல்லவைகள், கெட்டவைகள் எதுவாக இருந்தாலும், இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றவர்கள். அவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டும். அதேபோல, நீங்கள் தொகுப்பு நிதி என்ற ஒன்றை அறிவித்திருந்தீர்கள். அந்தத் தொகுப்பு நிதி பத்திரிகை நண்பர்களுக்கு எவ்வளவு என்கின்ற செய்தியையும் நீங்கள் இந்த நேரத்திலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–10*

அதேபோல், வீடுகள் தீப்பற்றி எரிந்தால் 2 ஆயிரம் ரூபாய் தருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இன்றைக்கு ஒரு செய்தி; நம்முடைய அரசுமூலம் அற்புதமாக எரிவாயு அடுப்புகளைத் தந்துகொண்டிருக்கின்றீர்கள்; வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தந்துகொண்டிருக்கின்றீர்கள். ஒரு வீடு தீப்பற்றி எரிந்தால், ஒரு குடும்பத்தில் குறைந்தபட்சம் ஒரு சாதாரண, ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவனாக இருந்தாலும்கூட, 50,000 ரூபாய்க்கான பொருட்கள் அவனுக்குச் சேதம் ஆகின்றன. ஆனால், அரசாங்கம் தருவதோ வெறும் 2 ஆயிரம் ரூபாய். இந்த 2 ஆயிரம் ரூபாயையும், 10 கிலோ அரிசியையும் வைத்துக்கொண்டு அவன் எப்படி அவனுடைய வாழ்க்கையைப் புனரமைத்துக்கொள்வான் என்பதைக் கருத்திலே கொண்டு, இனி வீடு தீப்பற்றி எரிகின்றபோது, உடனடியாக அவன் அதைப் புனரமைத்துக்கொள்வதற்கு, நம்முடைய தமிழக அரசு ரூபாய் 10 ஆயிரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கூட்டத் தொடரின்போது முதலமைச்சர் அவர்களுடைய கனிவான





கவனத்திற்கு நான் கொண்டு சென்ற பிரச்சினை, என்.எல்.சி. பிரச்சினை. இன்றைக்குக்கூட அந்த நிறுவனம் ஜெயங்கொண்டத்தில் நில எடுப்புச் செய்வதற்காகச் சென்றுகொண்டிருக்கிறார்கள். நாங்கள்கூட வரவேற்று; எங்கள் அய்யா அவர்கள் மிகப் பெரிய பொதுக் கூட்டத்தில் அறிவித்தார்கள். 'இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வருகின்றபோது, என்னை அழைத்தால் நானே வந்து வரவேற்கிறேன்; ஆனால், அதற்கு முன் அந்த மண்ணின் மைந்தர்களுக்கான பாதுகாப்பும், வீட்டிற்கு ஒருவருக்கு வேலையும், ஒரு ஏக்கர் நிலத்திற்கு 5 இலட்சம் ரூபாயும் தந்து, அவர்களுக்கான அனைத்துப் பாதுகாப்புகளையும் இந்த அரசு செய்து தந்துவிட்டு நிலம் எடுக்க வரும் என்று சொன்னால், நாங்கள் அதை இரு கரம் கூப்பி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்' என்று நானும் பேசினேன்; எங்கள் அய்யாவும் பேசினார்; எங்கள் மாவீரன் குரு அவர்களும் பேசியிருக்கிறார். அந்தக் கருத்தின் அடிப்படையிலே கடந்த முறை நான் சொன்னேன். என்.எல்.சி.க்கு நிலம் கொடுத்தவர்களுக்கு, இன்றைக்கு Apprentice முடித்தவர்களுக்கு வேலை இல்லை. 19 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குப் பணி நிரந்தரம் இல்லை. ஜவகர் ஆசிரியர் பள்ளி என்ற ஒரு பள்ளியிலே பணிபுரிகின்ற 500–க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. அங்கே இருக்கின்ற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்; திரு. வேல்முருகன், Time ஆகிவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டத்திலே ஒரு அனல் மின் திட்டம் தொடங்குவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 3,888 எக்டேர் நிலம் விவசாயிகளிடத்திலேயிருந்து கையகப்படுத்தப்பட்டு, இன்னும் 4 ஆயிரம் எக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டிய ஒரு சூழ்நிலையில், இன்று தமிழக அரசு 1,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனோடு பேச்சுவார்த்தை நடத்தி, நானும், நம்முடைய மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் திரு. ராஜா அவர்களும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே கலந்து பேசி, அங்கே அறிவிப்புகூடச் செய்துவிட்டு வந்தோம். விவசாயிகள் பெரும்பாலும் அந்தத் திட்டம் வர வேண்டுமென்று விரும்புகிறார்கள். யார், யாருக்கெல்லாம் வேலை கொடுக்க முடியுமோ, அங்கே நிச்சயம்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2007 மார்ச் 26

அவர்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்று உத்தரவாதம் அளித்திருக்கின்றோம். எங்கேயாவது வீடுகள் அப்புறப்படுத்தப்பட்டால், அந்த வீடுகளை 2 இலட்சம் ரூபாய் செலவிலே நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் அவர்களுடைய செலவிலே கட்டித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். ஆனால், ஒரு ஏக்கருக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுப்பது என்று நீங்கள் வற்புறுத்தினால், அல்லது நாங்கள் அதை ஏற்றுக்கொண்டால், அந்தத் திட்டமே வராது. அதற்குப் பிறகு அந்தப் பகுதியிலே ஒரு நல்ல பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்பே இல்லாமல் போய்விடும். நம்முடைய நாட்டிற்குத் தேவையான மின்சார உற்பத்தியைச் செய்வதற்கு ஏற்கெனவே Reliance நிறுவனம் 1997–லே வந்து, இதே பிரச்சினை ஏற்பட்ட காரணத்தினால்தான் அவர்கள் போய்விட்டார்கள். அதனால்தான் இப்போது நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஒரு நியாயமான விலை வேண்டுமென்று கேட்டார்கள். நீதிமன்றத்திலே அவர்கள் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். நீதிமன்றம் என்ன தீர்ப்பு வழங்குகிறதோ, அதற்கு appeal போகாமல் நீதிமன்றம் சொல்கின்ற விலையைக் கொடுப்பது என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. குஜராத், பீகார்போன்ற இடங்களில் நில எடுப்புச் செய்கின்றபோது, 8 இலட்சம் ரூபாய் முதல் 12 இலட்சம் ரூபாய் வரை அந்த நிலக்கரி நிறுவனங்கள் வழங்கி இருக்கின்றன; ஒன்று. இரண்டாவது, அந்த மக்கள் கொடுக்கின்ற ஒரு ஏக்கர் இடத்தில் நிலக்கரியை வெட்டி எடுக்கின்றபோது, 54 கோடி ரூபாய்க்கு நிலக்கரியை வெட்டி எடுத்து அந்த நிறுவனங்கள் இலாபம் ஈட்டுகின்றன. அப்படி இலாபம் ஈட்டுகின்றபோது 5 இலட்சம் ரூபாயை அந்த மக்களுக்குத் தருவது அவர்களுக்குப் பெரிய காரியம் ஒன்றும் அல்ல.

*முற்பகல் 11-15*

நான் முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு ஏற்கெனவே இதே சட்டப் பேரவையிலே கொண்டு வந்திருக்கிறேன். என்.எல்.சி. நிறுவனத்திற்கு நிலம் கொடுத்த கிட்டத்தட்ட 19 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு இதுவரையில் அந்த நிறுவனம் வேலை தரவில்லை. 19 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணி செய்துகொண்டிருக்கிறார்கள். பணி நிரந்தரம் இல்லை. Apprentice முடித்தவர்கள் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அங்கே பணி



2007 மார்ச் 26] [திரு. தி. வேல்முருகன்]

நிரந்தரம் செய்யப்படவில்லை. ஜவகர் பள்ளியிலே ஒப்பந்த அடிப்படையிலே கிட்டத்தட்ட 10, 15 ஆண்டு காலமாக வெறும் 750 ரூபாய், 1,000 ரூபாய் சம்பளத்தைக் கொடுத்துவிட்டு, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுடைய வழிகாட்டல் முறைகளையெல்லாம் தூக்கிக் குப்பையிலே போட்டுவிட்டு, அந்தக் கல்வி நிறுவனங்களை அவர்கள் நடத்திக்கொண்டு, கொள்ளையடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் விரும்புவது, அந்த என்.எல்.சி.க்காக தினம் போராட்டம், தினம் ஆர்ப்பாட்டம், இதைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பு, இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு, காவல் துறையை அனுப்புகின்ற பொறுப்பு என அங்கு பல்வேறு இன்னல்களுக்கு ஆளாவதெல்லாம் தமிழக அரசு, தமிழக அரசினுடைய காவல் துறை, தமிழக அரசினுடைய மாவட்ட நிர்வாகம்தான். ஆனால், அவர்கள் அந்த நிலங்களைக் கையகப்படுத்திவிட்ட பிறகு, தமிழக அரசினுடைய கட்டுப்பாட்டிற்கோ, மாவட்ட ஆட்சித் தலைவருடைய கட்டுப்பாட்டிற்கோ இந்த மத்திய அரசு நிறுவனங்கள் வருவது இல்லை. அதனால்தான் நாங்கள் சொல்கிறோம், என்.எல்.சி.க்கு நிலத்தைத் தந்துவிட்டு, வட மாவட்ட மக்களாகிய நாங்கள் ஏமாந்து நிற்கின்றோம், போராடிக் கொண்டிருக்கிறோம், உரிமையைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்; அவர்கள் காவல் துறையைக் கொண்டு வந்து எங்கள்மீது தடியடி நடத்தி, இன்னும் சொல்லப் போனால், மிகப் பெரிய தொழிற்சங்கமாக இருக்கின்ற என்.எல்.சி. தொ.மு.ச. தொழிற்சங்கத்தினுடைய தலைவர்களையும், முக்கிய நிர்வாகிகளையுமே கடந்த சில ஆண்டுகளுக்கு முன் அடித்துக் காயப்படுத்தினார்கள், காவல் துறையை வைத்துக்கொண்டு. அந்த அளவுக்கு ஒரு நிலை அங்கே வருகிறபோது, மண்ணின் மைந்தர்கள் தங்கள் வீட்டைக் கொடுத்து, விவசாய நிலங்களைக் கொடுத்து, தங்களுடைய வாழ்க்கைச் சூழல் எல்லாவற்றையும் இழந்துவிட்டு, இந்த 5 இலட்சம் ரூபாயை வாங்கிக்கொண்டு போய் அவர்கள் என்ன செய்ய முடியும்? அவர்கள் one time paymentஆக அந்த 5 இலட்சம் ரூபாயைக் கொடுப்பார்கள். கொஞ்சம் ஏதாவது அப்படி, இப்படி என்று இருப்பார்கள்; 2, 3 நாளில் அவர்கள் கதை முடிந்துவிடும். ஆனால், விவசாய நிலம் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் இருந்தால், பரம்பரை, பரம்பரையாக, அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், வாரிசுகள், இன்னும் இருக்கக்கூடிய தலைமுறை அதில் விவசாயம் செய்து, தங்களுடைய வாழ்க்கையைப் புனரமைத்துக்கொள்ள முடியும். தங்கள் வாழ்வாதாரத்திற்கு நிரந்தரப் பாதுகாப்பாகவும் இருக்கலாம். ஆனால், அரசு எவ்வளவுதான் நிலத்தைக் கொடுத்தவர்களுக்குப் பணத்தை

வாங்கிக் கொடுத்தாலும்கூட, அந்த மக்களுக்குத் திருப்தி அளிக்க முடியாது; அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், இந்த அரசு கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டம் நல்ல திட்டம், வரவேற்கிறோம். இந்த அரசைப் பாராட்டுகிறோம். அதே நேரத்தில், ஏமாந்து இருக்கிற நெய்வேலி மக்களைப்போன்று, கடலூர் மாவட்ட மக்களைப்போன்று, பெரம்பலூர் மாவட்டத்து மக்களையும் என்.எல்.சி. நிர்வாகம் ஏமாற்றிவிடக் கூடாது என்கிற முன்னெச்சரிக்கையின் அடிப்படையில் தமிழக அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்பதுதான் எங்கள் அய்யாவின் கருத்து, பாட்டாளி மக்கள் கட்சியின் கருத்து; அந்தக் கருத்தைத்தான் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பல்வேறு நல்ல பல திட்டங்களை இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அறிவித்திருக்கிறது. நான் சொன்ன அந்தக் கலைக் கல்லூரியையும், குள்ளஞ்சாவடிப் பகுதிக்கும், முத்தாண்டிக்குப்பம் பகுதிக்குமாக இரண்டு தீயணைப்பு நிலையங்களையும் நீங்கள் தர வேண்டும்.

இந்த அரசு சிறப்பான ஒரு அரசாகச் செயல்படுவதற்கு, தமிழக அரசு வேல்முருகன் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற அரசு என்று பத்திரிகைகளிலும், நன்றி அறிவிப்புக் கூட்டங்களிலும் நான் சொல்லி வருகிறேன். அது உண்மை என்று நிரூபிக்கின்ற அளவில் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, இந்த அருமையான வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன வேண்டும்? என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, கடலூர் மாவட்டத்தில் முந்தைய ஆட்சிக் காலத்தில், ஒரு தனியார் கம்பெனிக்கு மட்டும்தான் பதிவு செய்யப்பட வேண்டும் என்று சொன்னதாகக் குறிப்பிட்டு அவர்கள் பேசினார்கள்; அது இப்போது மாற்றப்பட்டிருக்கிறது என்ற கருத்தை இங்கே சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே





இருக்கிறபோது, அதுபோன்று எந்த ஆணையையும் பிறப்பிக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு Point of Clarification. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute. என்ன, திரு. சிவபுண்ணியம்? சொல்லுங்கள். திரு. தங்கமணி, உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் பேசுகின்றபோது *(குறுக்கீடு)* இல்லை, இல்லை. ஒரு தவறான தகவலாக இருக்குமானால், அது பற்றி விளக்கம் கேட்க வேண்டுமென்றால் *(குறுக்கீடு)* மதுவிலக்குக் கொள்கை பற்றி இங்கே வேல்முருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அண்டை மாநிலமாக இருக்கிற கர்நாடக மாநிலத்திலே பூரண மதுவிலக்கு வருவதற்கு அந்த முதலமைச்சர் முயற்சி எடுத்தார் என்று சொன்னார். அப்படி இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். அந்த மாநிலத்திலே *(குறுக்கீடு)* இல்லை, தவறான தகவலாக இருந்தால், எது சரி என்பதை இங்கே சொல்ல வேண்டும். *(குறுக்கீடு)* நான், தவறு, தப்பு என்று *(குறுக்கீடு)* உங்கள் கொள்கை நிலையில் நான் தலையிடவில்லை. ஆனால், தவறான தகவலாக அது இங்கே பதிவு செய்யப்படுகிறது என்பதை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்படி அந்த மாநிலத்தில் செய்யப்படவில்லை. குறைந்த விலை மதுவை பாட்டிலில் அடைத்துக் கொடுப்பதற்குரிய முயற்சியை அந்த முதல்வர் எடுத்தார் என்றுதான் தகவல் இருக்கிறது. பூரண மதுவிலக்கு என்பது அங்கு அமல்படுத்தப்படவில்லை. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. திரு. தங்கமணி, கொஞ்சம் உட்காருங்கள். *(குறுக்கீடு)* திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக முதல்வர் அவர்கள் பூரண மதுவிலக்கிற்கு இந்த அரசு துணை நடவடிக்கை எடுக்கும் என்கிற அறிவிப்பைத் தந்திருக்கிறார். முதல்வர் அவர்கள் அடுத்த சில நாட்கள் கழித்துப் பத்திரிகையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் சொன்ன கருத்தை வலியுறுத்தி இருக்கிறார். இப்போது முதல்வராக இருக்கிற திரு. குமாரசாமி அவர்கள் அந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.

[திரு. தி. வேல்முருகன்] [2007 மார்ச் 26

அதற்கான பத்திரிகைச் செய்தியின் ஆதாரத்தை வேண்டுமானாலும் பேரவைத் தலைவர் வாயிலாக நம்முடைய அரசுக்கு நான் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். திரு. தங்கமணி, பேசுங்கள்.

***திரு. பி. தங்கமணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் கழகத்தின் கடைக்கோடித் தொண்டனான என்னை, கிளைக் கழகப் பிரதிநிதியாக, கிளைக் கழகச் செயலாளராக, பள்ளிப்பாளையம் ஒன்றிய இதய தெய்வம் அம்மா பேரவையின் செயலாளராக, ஒன்றியக் கழகச் செயலாளராக, ஒன்றியக் குழுத் தலைவராக ஆக்கி, யார் என்று தெரியாத என்னை, ஊர் நின்று பார்க்க வைத்து, திருச்செங்கோடு சட்டப் பேரவை உறுப்பினராகவும், நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளராகவும் ஆக்கி அழகு பார்க்கும் என் குல தெய்வம், மங்கையர் குல மாணிக்கம், மங்காப் புகழ்கொண்ட தங்கத் தாரகை, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி (மேசையைத் தட்டும் ஒலி) என் கோடானு கோடி நன்றி மலர்களை அவர்தம் பொற்பாத மலர்க் கமலங்களில் காணிக்கையாக்குகின்றேன். மேலும், வாக்களித்த திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும், கூட்டணிக் கட்சியினருக்கும் நன்றியைத் தெரிவித்து, 2007–2008–க்கான நிதிநிலை அறிக்கையில் ... (குறுக்கீடு)

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** Speaker Sir, I am on a point of order. அதாவது, பிரதான எதிர்க்கட்சியில் பேசினார்கள்; பிறகு காங்கிரஸ் கட்சியில் பேசினார்கள்; பிறகு பாட்டாளி மக்கள் கட்சியில் பேசினார்கள்; இப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பேசிய பிறகுதான், ஒரு round போன பிறகுதான், மறுபடியும் இவர்களுக்கு வாய்ப்பு வர வேண்டுமே தவிர, அவர்களை விட்டுவிட்டு, இவர்களுக்குக் கொடுக்கக் கூடாது. நியாயமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குத்தான் வர வேண்டும். இல்லையென்றால் அவர்களுக்கு நேரமே கிடைக்காது. இந்த நடைமுறைதான் இதுவரையில் இந்த அவையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அது அவர்களுக்கே தெரியும். அவரையே சொல்லச் சொல்லுங்கள். முன்னாலே பன்னீர்செல்வம் இருக்கிறார், அவரைச் சொல்லச் சொல்லுங்கள். ஒரு round முடிந்த பிறகுதான் இவர்களுக்கு வரும், உடனே வராது.



2007 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேச ஆரம்பித்துவிட்டார், விடுங்கள். திரு. தங்கமணி, பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** வாய்ப்புக் கொடுப்பதும், கொடுக்காததும் தலைவர் விருப்பம். ஆனால், it creates a bad precedent என வந்துவிடும். பிறகு இதுதான் நடைமுறை என்றும் வந்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரைப் பேசச் சொல்லிவிட்டு, இவரைப் பேசச் சொல்லலாமா? இவர் பேசப் போகிறார். அதற்கு முன்னாலே அவரைப் பேசச் சொல்லிவிட்டு, இவரைப் பேசச் சொல்வோம். அவ்வளவுதானே? (குறுக்கீடு) என்ன இது? What is this?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினரை ... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நான் பிரதான எதிர்க்கட்சியைப் பேசக் கூடாது என்று சொல்லவில்லை. இதுவரையில் இந்த அவையில் நடந்த நடைமுறையை நான் பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அனுபவம் மிக்க உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கேட்டுச் சொல்லட்டும். இதுவரையில் ஒரு round முடிந்த பிறகுதான் மறுபடியும் இவர்களுக்கு வருமே தவிர, முன் வரிசையில் இருப்பவர்களை cut பண்ணிவிட்டு வருவது கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன், உட்காருங்கள். 3 பேருக்கு அ.தி.மு.க.வில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கிறோம், அடுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் பேசப் போகிறார்கள். (குறுக்கீடு) இருக்கட்டும், நாளையிலிருந்து சரி பண்ணிவிடலாம். திரு. தங்கமணி, பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. கோவிந்தசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் பேசினோம். பிரதான எதிர்க்கட்சிக்கு நீங்கள் 3 பேருக்குக் கொடுப்பதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. எங்கள் கட்சிக்கு ஒருவர்தான் என்று சொன்னீர்கள். நாங்களும் அதை ஏற்றுக்கொண்டோம். ஆனால், உரிய நேரத்தில் பேச வாய்ப்பில்லை என்றால், நிறையப் பேர் பேசி முடித்துவிட்டு, பிறகு வீட்டுக்குப் போகிறபோது பேசச் சொன்னால், எந்தக் கருத்தை வலியுறுத்த முடியும்? எப்படிச் சபையினுடைய கவனத்திற்கு எடுத்துச் சொல்ல முடியும்? தயவுசெய்து ஏற்கெனவே இருக்கிற நடைமுறையை நீங்கள் பின்பற்றுவது நல்லது.

[2007 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, அடுத்து உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசப் போகிறார். இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கிறது, பேசலாம், உட்காருங்கள். இதை ஒரு issue-வாக ஆக்க வேண்டாம், உட்காருங்கள்.

**திரு. பி. தங்கமணி:** 2007-2008-க்கான நிதிநிலை அறிக்கையில் கழகத்தின் சார்பில் என் கன்னி உரையைத் தொடங்கக் கடமைப்பட்டுள்ளேன். "எத்தனை காலம் மனிதன் வாழ்ந்தான் என்பது கேள்வி இல்லை, அவன் எப்படி வாழ்ந்தான்" என்பதுதான் முக்கியம் என்று டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடிய பாடலுக்கு ஏற்ப, இவ்வளவு நாட்கள் பதவியில் இருந்தாலும் இந்த நாட்டில் எந்தப் பயனும் இல்லை. வேண்டுமென்றால் அவர்களுடைய குடும்பத்திற்குப் பயனாக இருக்கலாம். எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 59 வயதில் இரண்டு முறை முதல்வராக இருந்தார்கள். அவருடைய 85-வது வயதில் தமிழகத்தில் 7-வது முறையாக முதல்வராக இருப்பார் என்பதை வரலாறு சொல்லப் போகிறது என்பதை இந்த அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர், இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டாத பத்திரிகையே இல்லை என்று கூறினார்கள். 'தினமலர்' பத்திரிகையைப் பார்த்தீர்களானால், தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை காற்றிலே பறக்கிறது என்ற செய்தியை வெளியிட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் மறைத்துவிட்டார் என்பதை இந்த அவையிலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

2007-2008-க்கான நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை, புதிய மொந்தையில் பழைய கள்ளாகத்தான் காட்சியளிக்கிறது. சென்ற ஆண்டு 84 பக்கங்களாக இருந்த நிதிநிலை அறிக்கை, இந்த ஆண்டும் அதே 84 பக்கங்களைக்கொண்ட நிதிநிலை அறிக்கையாகத்தான் உள்ளது. தமிழக மக்களின்மீது எவ்வித அக்கறையும், தொலைநோக்குப் பார்வையும் இல்லாத பட்ஜெட்டாக உள்ளது. கடந்த நிதிநிலை அறிக்கையின் தொகுப்புகளையே இந்த ஆண்டும் தொகுத்து, வரி இல்லாத நிதிநிலை அறிக்கை என்ற பெயரில், நாமக்கட்டிக்கு விலையைக் குறைத்து, மக்கள் நெற்றியிலே நாமத்தை அளித்திருப்பதுதான் இந்த பட்ஜெட் என்பதை நான் இந்த அவையிலே சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். வார்த்தை ஜாலங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையாகத்தான் காட்சியளிக்கிறது. காவிரி நதி நீர்ப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு



2007 மார்ச் 26] [திரு. பி. தங்கமணி]

அணைப் பிரச்சினை மற்றும் பாலாற்றுத் தடுப்பணைப் பிரச்சினை போன்ற உயிர்ப் பிரச்சினைகளில் இந்த அரசும், மத்திய அரசும் மேற்கொள்ளும் நிலைகள் மூடுமந்திரமாக அமைந்துள்ளன என்பதை அவைக்கு எடுத்து வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

முற்பகல் 11-25

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த நிதிநிலை அறிக்கையில் உருப்படியான திட்டம் எதுவும் இல்லை. பொது விநியோகத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களான பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றை அரசே கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகள்மூலமாக விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது என்று இந்த அறிவிப்பில் இருக்கிறது. இந்த அறிவிப்பு கடத்தல்காரர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்பதை இந்த அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். புழுத்துப் போன அரிசி, எடை குறைவு, குறித்த காலத்தில் அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை வழங்காத நிலை, வெளிமாநிலங்களுக்கு மொத்த அரிசியும் கடத்தப்படுகின்ற தற்போதைய நிலை ஆகியவற்றால் தத்தளித்துக் கொண்டிருக்கும் நியாய விலைக் கடைகள்மூலம் அத்தியாவசியப் பொருட்களையும் விநியோகிப்பது என்பது எந்தவிதத்திலும் பயன் அளிக்கப் போவதில்லை. தமிழகத்தில் நியாய விலைக் கடைகள் கடத்தல்காரர்களின் கூடாரமாக மாறிவிட்ட நிலையில், இந்த அறிவிப்பு விலைவாசி உயர்வை ஒருபோதும் கட்டுப்படுத்தப் போவதில்லை. நியாய விலைக் கடைகளில் தினந்தோறும் நடந்து வரும் முறைகேடுகளைக் களைந்தாலொழிய இத்திட்டம் பலன் அளிக்கப் போவதில்லை என்பதை இந்த அவையில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டம் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்ட திட்டம் என்ற ஒரே காரணத்திற்காக, அந்தத் திட்டத்தின் பெயரை மாற்றி, எல்லோருக்கும் பயன் அளிக்காத தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து, 1.37 கோடியாக இருந்தது, 1.15 கோடியாகக் குறைக்கப்பட்டு அதிலும் 57.30 இலட்சம் பேருக்கு மட்டுமே அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் பாகுபாடு காட்டப்பட்டு, எல்லோரும் பலன்பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இன்றையதினம் கல்லூரிகளிலே

[திரு. பி. தங்கமணி] [2007 மார்ச் 26

படிக்கின்ற மாணவ, மாணவிகளெல்லாம் அந்த நிதியுதவி கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சபையிலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஏக்கர் நிலத்தைப் பொறுத்தவரை, இலவச நிலம் என்ற மோசடி அறிவிப்பு மாறி, தரிசு நிலங்களைப் பண்படுத்தி, நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக நிலம் அளிக்கும் திட்டம் வரும் ஆண்டுகளில் தொடரும் என்ற கண்கட்டித் திட்டத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். விவசாயப் பெருங்குடி மக்களிடம் இது கேலிச் சித்திரமாகவே காட்சியளிக்கிறது. நிதி அமைச்சர் அவர்கள் இதுவரை 71,755 ஏழை விவசாயிகளுக்கு 77,117 ஏக்கர் நிலம் பண்படுத்தி அளிக்கப்பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்துள்ளார்கள். ஆனால், உண்மையில், இந்த அரசு எங்கெல்லாம் விவசாயிகள் தாங்கள் ஏற்கெனவே உரிமைபெற்று நிலங்களைத் தற்காலிகமாக உழவு செய்யாமல் வைத்துள்ளனரோ, அதற்கெல்லாம் ஏக்கருக்கு 800 ரூபாய் என்று கொடுத்து, உழவு செய்யச் சொல்லி, அந்த நிலங்களை எல்லாம் இலவசமாகத் தரிசு நிலம் வழங்கியதுபோல போலிக் கணக்குக் காட்டியுள்ளனர். இந்த போலித் திட்டம்தான் வருங்காலங்களிலும் தொடரும் என அரசு அறிவித்துள்ளது நகைப்பிற்குரியதாக அமைந்துள்ளது. 2 ஏக்கரில் தொடங்கி சில சென்ட்களாகக் குறைந்து, கையளவு நிலமாக . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) சொல்லட்டும். அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) அமைச்சர் பதில் சொல்கிறார், உட்காருங்கள் நீங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் பேசும்போது—குறை சொல்வதற்காகவோ, எதற்கோ நான் குறுக்கிடவில்லை—அரசாங்கம், தரிசு நிலத்தை விவசாயிகளுக்கு கொடுத்த நேரத்தில் ஏதோ 500 ரூபாய், 800 ரூபாய்க்கு வாங்கி மறுபடியும் அதையே கொடுத்ததாகச் சொல்கிறார்கள். அப்படியல்ல. வேண்டுமானால் இதுவரையிலே கொடுத்திருக்கிற சுமார் 71,000 ஏக்கர் நிலங்களை நீங்கள் நேரிலே வந்தால் கொண்டு போய்க் காட்டுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். திருவள்ளூரிலே, மற்ற இடங்களிலே முதல்வர் அவர்கள் அந்த நிலத்தைக் கொடுத்த நேரத்திலே அவரோ



2007 மார்ச் 26] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சென்றவன் என்ற அடிப்படையிலே சொல்கிறேன். அந்த நிலத்தைப் பக்குவப்படுத்தி போர்வெல் போட்டு, இணைப்புக் கொடுத்து ஏறக்குறைய இன்றையதினம் திருவள்ளூர் மாவட்டத்திலே ஒவ்வொரு விவசாயிக்கும் கொடுத்திருக்கிற நிலத்தினுடைய மதிப்பு என்ன என்று கேட்டால், market value 5 இலட்சம் ரூபாய் போகும் என்று சொல்கிறார்கள். அந்த அளவிற்கு நல்ல புஞ்சை நிலத்தைப் பக்குவப்படுத்தி, எல்லா வசதிகளும் செய்து, அங்கே மரக் கன்றுகளும் வைத்து அந்த நிலத்தை ஒப்படைத்திருக்கிறோம். எனவே, அந்தத் திட்டத்தைக் குறை சொல்லி, திட்டத்தையே நிறைவேற்ற முடியாத அளவிற்கு எதிர்க்கட்சிக்காரர்கள் அதைப் பங்கப்படுத்திவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி, 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

*முற்பகல் 11–30*

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊரிலே அதிகாரிகள் வந்து, குறையாக இருக்கிற நிலத்தை 800 ரூபாய் நான் கொடுக்கிறேன், அதை நீங்கள் உழுதுகொள்ளுங்கள் என்று சொல்லும் திட்டத்தைத்தான் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேனேயொழிய, நானும் பொய் சொல்லவில்லை என்பதை இந்த அவையிலே சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**திரு. பி. தங்கமணி:** இரண்டு ஏக்கர் நிலம் என்று தொடங்கி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், திரு. தங்கமணி, கொஞ்சம் என்ன நடக்கிறது என்று பார்த்துக்கொள்ளுங்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலத்திற்குப் பட்டா வழங்குவதற்கு ஏதோ பணத்தைக் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். இது உண்மையிலேயே உண்மைக்கு மாறானது. யாரிடமும் பணம் வசூல் பண்ணவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நிலம் ஏற்கெனவே உழுதுகொண்டிருப்பவர்களுக்கு, அவர்களுக்கே பட்டா கொடுக்கிறோம். நீங்கள் இதை முதலிலே புரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை.

[2007 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி. (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. தங்கமணி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி. தங்கமணி:** சார், மைக் கொடுக்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி, பேசுங்கள்.

**திரு. பி. தங்கமணி:** மைக் கொடுக்கச் சொல்லுங்கள், சார்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாக இருங்கள், திரு. ஜெயக்குமார்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** இருங்கள். நான் அதைத்தான் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், அமைச்சர் பேசுகிறார். உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** இல்லை, இருங்கள் சார். அதாவது, 2 ஏக்கர் நிலம் வழங்குகிற திட்டத்திலே 3 பிரிவுகள் இருக்கின்றன மொத்தம். முதலில் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் சட்டமன்ற உறுப்பினர். (குறுக்கீடு) இருங்கள். நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு புரிந்துகொள்ளவில்லை என்றால் என்ன அர்த்தம்? ஏற்கெனவே தரிசு நிலம் சொந்தமாக வைத்திருக்கிறவர்களுக்கு அரசாங்கமே பண்படுத்திக் கொடுக்கிறது. அது ஒரு பிரிவு. அந்தப் பிரிவிலே யாரிடமும் பணம் வாங்கிக் கொண்டு பண்படுத்திக் கொடுக்கவில்லை, அரசாங்கமே பண்படுத்திக் கொடுக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. தங்கமணி பேசுங்கள்.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பட்டா வாங்குவதற்காகச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உட்காருங்கள்.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரியப்படுத்திக்கொள்வது, தனியார் பட்டா நிலம். . .



2007 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 3 பிரிவுகள் இருக்கின்றன. மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. ஜெயக்குமார், மற்ற இரண்டு பிரிவுகள் என்னவென்று கேட்டார். முதல் பிரிவு, நிலமற்ற ஏழைகளுக்கு 2 ஏக்கர் அரசாங்கப் புறம்போக்கு நிலத்தைப் பட்டா போட்டுக் கொடுக்கிறோம், நிலமற்ற ஏழைகளுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது பிரிவு, பல ஆண்டு காலமாக நிலமற்ற ஒரு ஏழை ஒரு நிலத்தை அவர் விவசாயம் செய்து வருகிறார் என்றால், அவருக்குப் பட்டா போட்டுக் கொடுக்கிறோம். இது இரண்டாவது வகை. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், நீங்கள் என்ன தெரிந்துகொள்ள வேண்டும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள். மற்றவர்கள் கொஞ்சம் பொறுங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே அ.இ.அ.தி.மு.க. சார்பாகக் கன்னிப் பேச்சுப் பேசியவர் சொன்னார், 77 ஆயிரம் ஏக்கர் நிலத்தை நீங்கள் 71 ஆயிரம் பேருக்கு எப்படிக் கொடுப்பீர்கள் என்று கேட்டார். நிலம் எப்படி அளிக்கப்படுகிறது என்றால், ஏற்கெனவே உழவு செய்து வருகின்றவர்களுக்கு-- 30 செண்ட் விவசாயம் பண்ணிக் கொண்டிருப்பார்கள், அவர்கள் பட்டா கேட்கிறார்கள்; நாங்கள் பட்டா கொடுக்கிறோம். அதே மாதிரி, 50 செண்ட் ஒருவர் விவசாயம் பண்ணிக்கொண்டிருப்பார். அவருக்கு அந்த நிலத்தைச் சொந்தமாக்குகிறோம். ஆக, எல்லோருக்கும் 2 ஏக்கர் நிலம் என்பது, அரசாங்கப் புறம்போக்கு நிலம் 2 ஏக்கர் கொடுக்கிறோம். நீங்கள் எல்லாப் பேருக்கும் 2 ஏக்கர் என்பது, நிலம் வைத்திருப்பவர்களுக்கா கொடுக்க முடியும்? (குறுக்கீடு) இல்லை, இல்லை, இல்லவே இல்லை. குறிப்பாகத் தேர்தல் அறிக்கையிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார். அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** இதே அவையிலே எங்களுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அரசாங்கப் புறம்போக்கு நிலம் கையளவு இருந்தாலும் அது ஏழைகளுக்குத்தான் வழங்கப்படும் என்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு வழங்கப்படமாட்டாது.

[2007 மார்ச் 26

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள், கொஞ்சம் அமைதியாகக் கேளுங்கள். உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர் சொன்னதற்குத்தான் அவர் clarification கொடுக்கிறார். அவரையே கேட்கச் சொல்லுங்கள். நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? அவரைக் கேட்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதிலேயே பல்வேறு குழப்பங்கள் இருக்கின்றன. தலா 2 ஏக்கர் நிலம் எத்தனை பேருக்கு நீங்கள் தந்திருக்கிறீர்கள் என்பதுதான் இங்கே கேள்வியாக இருக்கிறதே தவிர, 30 சென்ட், 40 சென்ட் வைத்திருக்கிற விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுக்கிற திட்டமே அல்ல. நிலமற்ற ஏழையெளிய விவசாயிகளுக்கு நிலத்தைப் பெற்றுத் தருவேன் என்று நீங்கள் கொடுத்த வாக்குறுதி இருக்கிறது. கையளவு நிலத்தை வைத்துக் கொண்டு **

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** இல்லை. அப்படி இல்லை. (குறுக்கீடு) இல்லை. இல்லை. நீங்கள்தான் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசட்டும். அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) ** என்பதை எடுத்துவிடுங்கள். அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2007 மார்ச் 26]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தலைவர் கலைஞர் தலைமையில் இருக்கின்ற இந்த அரசு, சொன்னதைச் செய்யக்கூடிய அரசுதான். தேர்தல் அறிக்கையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால், 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருந்தால், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத் தலா இரண்டு ஏக்கர் நிலம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். இப்போதும் அதிலே ஒன்றும் மாற்றமில்லை. தரிசு நிலமாகத் தனியாருடைய ஆக்கிரமிப்பிலோ அல்லது சொந்தப் பட்டா வைத்திருப்பவர்களிடமோ இருந்தால் அதை எடுத்துக் கொடுப்பதாகச் சொல்லவில்லை. அரசாங்கத்திடம் தரிசு நிலமாக இருந்தால், அதைப் பிரித்துக் கொடுக்கிறபோது தலா இரண்டு ஏக்கர் இப்போதும் வழங்கப்படுகிறது. இங்கே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அரசாங்கத்திடம் இருக்கின்ற தரிசு நிலங்களைத் தலா இரண்டு ஏக்கர் இப்போதும் வழங்குகிறோம். அது தொடரும். ஆனால், (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். அவசரப்பட வேண்டாம். இரண்டாவது கட்டமாக, ஒருவர் அவருடைய சொந்த நிலத்தோடு சேர்த்து ஆக்கிரமித்து அரசாங்கப் புறம்போக்கு நிலத்தை அவர் அனுபவித்துக்கொண்டிருந்தால், அந்த நிலத்தையும் பக்குவப்படுத்தி விவசாயத்திற்குரிய நிலமாக ஆக்கி, அவருக்குப் பட்டாவும் கொடுக்கப்படுகிறது.

இன்னொன்று, இந்தத் தரிசு நிலம் இரண்டு ஏக்கர் வழங்கப்படுகிறபோதுகூட, 8,500 ரூபாய் ஒரு எக்டேருக்குப் பராமரிப்புச் செலவு செய்து, மாண்புமிகு அமைச்சர் சொன்னதைப்போல ஆழ்துளைக் கிணறு அமைத்து, தோட்டக் கலைத் துறைமூலம் அந்த மண்ணுக்கேற்ற பயிரையும் செய்து நாம் ஒப்படைக்கின்றோம். இதைத்தான் இதே அவையில் அறிவித்ததற்கேற்பத் தொடர்ந்து அரசு வழங்கி வருகிறது. இதிலே ஒன்றும் யாரையும் ஏமாற்றவில்லை. வேண்டுமானால், மாண்புமிகு தங்கமணி அவர்கள்—எங்களுக்கு அருகிலே உள்ள மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான், இருப்பவர், அவர்—என்னோடு வந்தால், அங்கு வழங்கப்பட்டிருக்கின்றவற்றையெல்லாம்கூட நான் காண்பிக்கத் தயாராக இருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. சாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் விளக்கம் சொல்லியாகிவிட்டது. இனிமேல் யாரும் தலையிடக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) குறுக்கீடு செய்யக் கூடாது. உட்காருங்கள். திரு. தங்கமணி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 மார்ச் 26

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்று ஒன்று சொல்லப்பட்டு, 25 இலட்சம் எக்டேர் (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். அப்புறம் பேசுங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே இங்கேயே முதல்வர் அவர்களே அறிக்கையிலே எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள். 25 இலட்சம் எக்டேர் நிலங்களைத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவோம் என்று சொல்லி, கடைசியிலே நானே எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்து கேள்வி கேட்கிறபோது, ஆறு இலட்சம் கொண்டு வந்தோம் என்று அந்த விவசாயத் துறை அமைச்சர் சொல்லி, பின்னர் இரண்டு இலட்சம் என்று சொல்லி, எட்டு இலட்சம் என்று சொல்லி, சொன்னதை வைத்துத்தான் நடந்தது. (குறுக்கீடுகள்) ஆக, அந்த 25 இலட்சம் எக்டேர் நிலங்கள் இருக்கின்றன என்று சொன்னதே கடந்த கால ஆட்சியிலேதான். அந்த 25 இலட்சம் எக்டேர், நீங்கள் சொன்னதை வைத்துத்தான் தேர்தல் அறிக்கையிலும் சொன்னோம். அது இன்று இருப்பதற்கேற்ப அந்தத் திட்டங்களை—அப்போது இதுவரை நீங்கள் சொல்லுங்கள், 25 இலட்சம் எக்டேர் நிலங்களை எங்கே, தனியாருக்கு எவ்வளவு வைத்திருந்தீர்கள்? அரசாங்கத்திற்கு எவ்வளவு வைத்திருந்தீர்கள்? உங்களுடைய கணக்கைக் கொடுங்கள். அதைச் சொல்லத் தயாராக இருக்கிறீர்களா? ஆக, பண்ணியது பூராவும் நீங்கள். செய்தது பூராவும் நீங்கள். 25 இலட்சம் எக்டேர் நிலங்கள் என்று சொல்லிவிட்டு, ஒன்றுமே செய்யாமல் போய்விட்டார்கள். ஆனால், இன்று முதல்வர் அவர்களால், இங்கே வருவாய்த் துறை அமைச்சரும், விவசாயத் துறை அமைச்சரும் சொன்னதைப்போல, ஏழை எளியவர்களுக்கு இந்த நிலங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் (குறுக்கீடுகள்) அதுதான் சொல்கிறேன். இந்த விவரங்களைச் சொல்கிறேன், கேளுங்கள். எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர்கள் சொன்னார்கள், எந்த நிலமும் கொடுக்கவில்லையென்று. இதுவரை மூன்று கட்டங்களாகக் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடுகள்) இருங்கள். நான் சொல்கிறேன். எங்கே கொடுத்திருக்கிறோம் என்றால், வாருங்கள், காண்பிக்கிறேன். நான்காவது கட்டமாக மட்டும், தமிழகத்திலே நிலமற்ற ஏழைகளுக்கு இரண்டு



2007 மார்ச் 26] [திரு. இ. பெரியசாமி]

ஏக்கர் வீதம் 6,091 ஏக்கர் நிலம் வழங்கிடவுள்ளோம். அதே மாதிரி, ஏற்கெனவே அவர்கள் அனுபவித்து வருகின்ற நிலம் மட்டும், 6,903 ஏக்கர் நிலத்தைப் பண்படுத்திக் கொடுத்திருக்கிறோம். மூன்றாவது பிரிவிலே, நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் சொன்னது மாதிரி, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே 25 இலட்சம் எக்டேர் நிலத்தை நாங்கள் பண்படுத்தப் போகிறோம் என்று சொன்னார்கள். ஆனால், ஒரு ஏக்கர் நிலத்தைக்கூடத் தமிழ்நாட்டில் பண்படுத்தாத ஆட்சி முந்தைய ஆட்சி என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். இப்போது நாங்கள் வந்த பிறகு, இந்த மூன்றாவது கட்டத்தில் மட்டும் 13,374 ஏக்கர் தனியாருக்குச் சொந்தமான தரிசு நிலங்களைப் பண்படுத்திக் கொடுத்திருக்கிறது தலைவர் கலைஞர் அரசு. வாருங்கள், புள்ளிவிவரமாக நான் இடத்தைக் காண்பிக்கிறேன்.

முற்பகல் 11–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசி முடியுங்கள். குறுக்கீடு கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசியதற்கு அவர் clarification சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) அவர் பேசியதற்கு அவர் clarification சொல்லிவிட்டார். அவருக்கு clarify பண்ணிய பிறகு அவரைப் பேசச் சொல்லுங்கள். நீங்களும் உட்காருங்கள். திரு. தங்கமணி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) அதாவது, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் (குறுக்கீடுகள்) திரு. தங்கமணி பேசிக்கொண்டிருக்கிறார். திரு. தங்கமணி பேசியதற்கு அமைச்சர் clarification சொல்லிவிட்டார். நீங்கள் எல்லோரும் எழுந்திருந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு கேள்வியைக் கேட்டீர்களானால், எப்போதுதான் பேச்சை முடிப்பது? (குறுக்கீடுகள்) அதை அவர் சொல்லட்டுமே! உங்கள் உறுப்பினர்தானே பேசிக்கொண்டிருக்கிறார்? (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்தானே பேசிக்கொண்டிருக்கிறார்? அவர் சொல்லட்டுமே! அது உண்மையல்ல, அது சரியல்ல, இதுதான் சரி என்று. (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனி ஒவ்வொருவரும் எழுந்திருக்கக் கூடாது. பேசும் உறுப்பினர் கேட்டதற்கு அமைச்சர் பதில் சொல்லியாகிவிட்டது. வேறு ஏதாவது உங்களுக்கு clarification வேண்டும் என்றால் நீங்கள் அதைக் கேட்டுக்கொள்ளுங்கள். அதை விட்டுவிட்டு அங்கொருவர், இங்கொருவர் என்று ஒவ்வொருவரும் கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது. (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஏற்கெனவே இந்தப் பிரச்சினை குறித்து இந்த மாமன்றத்தில் நீண்ட விவாதங்கள் நடைபெற்று மாண்புமிகு அம்மா அவர்களும் இந்தச் சபையிலே இருக்கின்ற நேரத்தில்— எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற நேரத்தில், வருகை தந்து நல்ல விளக்கத்தினைத் தந்தார்கள். மீண்டும் இந்தப் பிரச்சினை இந்த மன்றத்தில் இன்றைக்கு எழுப்பப்பட்டு, ஆளும் தரப்பிலே இருக்கின்ற அமைச்சர்கள் தவறான தகவலையே இந்தச் சபைக்குத் தந்துகொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மூன்று கட்டங்களாக இருப்பதாகச் சொன்னார்கள். விளக்கமும் சொன்னார்கள். தரிசு நிலங்களை மேம்படுத்தி வழங்குகின்ற திட்டம் என்றும், ஏற்கெனவே தரிசாக வைத்திருக்கிற தனியார் நிலங்களை மேம்படுத்தி வழங்குகின்ற திட்டம் என்றும், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்குகின்ற திட்டம் என்றும் 3 திட்டங்களை இவர்கள் ஏற்கெனவே சொன்னார்கள். ஆனால், தி.மு.க.வினுடைய தேர்தல் அறிக்கையில்—நான் திரும்பவும் அதற்குள்ளே போய்விட்டு வர விரும்பவில்லை—தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். நீங்கள் அதற்குப் பிறகு விளக்கம் சொல்லுங்கள்.

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத் தலா இரண்டு ஏக்கர் நிலம் அனைவருக்கும் வழங்கப்படும் என்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள்கூட வந்து கேட்டார்கள். நீங்களும் எதிர்க் கேள்வி கேட்டீர்கள். அம்மா விளக்கமாகச் சொன்னார்கள். என்னுடைய ஆட்சிக் காலத்தில் 2.5 இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் தரிசு நிலங்களாகக் கண்டறியப்பட்டிருக்கின்றன. அவை தனியாரிடமும் இருக்கின்றன, அரசாங்கத்திடமும் இருக்கின்றன. அவற்றைத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில், மேம்படுத்துகின்ற திட்டம்தான் எங்களுடைய திட்டம் என்று சொல்லி, 3.25 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டு இருக்கின்றன இந்த 5 ஆண்டு காலத்தில் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் நல்ல விளக்கத்தினைத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நீங்கள் அறிவித்த திட்டம், நிலமற்ற ஏழை விவசாயிகள் அனைவருக்கும் இரண்டு ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்படும் என்ற திட்டத்தினை அறிவித்தீர்கள். பின்பு கையளவு நிலமாவது நாங்கள் கொடுப்போம் என்று சொன்னீர்கள். இன்றைக்கு 3 கட்டங்களாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்தத் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள். ஆனால், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்குச் சொல்லிக்கொண்டிருக்கின்ற திட்டம்—ஏற்கெனவே காலங்காலமாக, நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து, விவசாய



நிலங்கள் இல்லாத நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக 3 ஏக்கர் நிலம் வரை கொடுப்பதற்கு வழிவகை ஏற்படுத்தப்பட்டு, கடந்த 50 ஆண்டு காலமாக வழங்கப்பட்டுக்கொண்டிருந்த திட்டம்தான், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கும் திட்டமேயொழிய வேறல்ல. புதிதாக நீங்கள் இன்றைக்கு 77,000 ஏக்கர் என்று கணக்குச் சொல்கின்றீர்களே, அது நீங்கள், இந்த வருடம், 2006-ல் வெற்றி பெற்றதற்குப் பின்னால், அரசு அமைத்ததற்குப் பின்னால் கொண்டு வந்த திட்டம் அல்ல என்று நான் இந்தச் சபைக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, ஏற்கெனவே இருந்த திட்டத்திற்குப் புது மெருகு கொடுத்து, நீங்கள் கொண்டு வந்த திட்டத்தைப்போல் இங்கே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பதுதான் தவறான தகவல் என்பதனை இந்தச் சபைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, திரு. கோவிந்தசாமி? சொல்லுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற ஏழைகளுக்கு இரண்டு ஏக்கர் தரிசு நிலம் வழங்குவது என்கிற அந்தத் திட்டம் நடைமுறையில் அமலாகத் தொடங்கி இருக்கிறது. அதிலே சில குறைபாடுகள் இருந்தால், எதிர்க்கட்சிகள் அதைச் சுட்டிக்காட்டி ஒழுங்குபடுத்துவது என்பது ஒவ்வொருவருடைய கடமை. நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், 'இந்தத் திட்டம் புதியது அல்ல; நீண்ட காலமாக அதற்கான திட்டம் இருக்கிறது; 3 ஏக்கர் வரை அந்த நிலங்களை ஏழைகளுக்கு வழங்கலாம்' என்று அவர் இங்கே குறிப்பிட்டார். அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் இதே தரிசு நிலங்களை ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று அன்றைய மாண்புமிகு முதலமைச்சரை நேரில் கேட்ட நேரத்தில், நான் ஏழைகளுக்குத் தர முடியாது என்று மறுத்தவர்தான் அவர்களுடைய முதலமைச்சர் என்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) கொஞ்சம் கேளுங்கள். கத்தக் கூடாது. ஆரோக்கியமான விவாதம் நடத்துவதற்கு நீங்கள் தயார் என்றால் நடத்த வேண்டும். சும்மா ஆள் இருக்கிறது என்பதற்காகக் கூச்சல் போடுவதில் அர்த்தமே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அது உண்மையா, இல்லையா என்பதற்கு நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசினீர்கள். நான் பேசுவதற்கு தலைவர் அவர்கள் அனுமதித்து இருக்கிறார்கள். அமைதியாக இருக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

[2007 மார்ச் 26

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** நான் பேசுகிறேன். நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே நான் ஓர் உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு நீங்கள் அனுமதித்து இருக்கிறீர்கள். (குறுக்கீடு) ஆகவே, இடையில் எழுந்து கூச்சல் போட்டு, சட்டமன்ற ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கக் கூடாது. ஆகவே, அவர்கள் எப்படிப் பல பேர் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோ பாருங்கள், நான் சொல்கிறேன், கேளுங்கள். திரு. செங்கோட்டையன் சொன்னார்; திரு. பன்னீர்செல்வம் சொன்னார். அதே மாதிரி அவரும் சொல்கிறார். அதுதான். அவருக்கு அனுமதி அளிக்க முடியாது என்று நான் சொல்ல முடியாது. உட்காருங்கள். திரு. கோவிந்தசாமி, நீங்கள் சீக்கிரம் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு)

•**திரு. கு. பாண்டுரங்கன்:** இவர் முதலில் எம்.எல்.ஏ.வாக இருந்தாரா அப்போது?

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களை மீண்டும் கேட்க விரும்புகிறேன். இந்தச் சபையிலே பதிவாகி இருக்கிறது. எடுத்துக் காட்டட்டுமா? (குறுக்கீடு) இந்தச் சபையிலே பதிவானதை எடுத்துக் காட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

•**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் அடிப்படையான ஒரு குழப்பத்தை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுமாக ஏற்படுத்திக்கொண்டிருப்பதாக நான் கருதுகிறேன். என்ன குழப்பம் என்று கேட்டால், ஏழைகளுக்கு நிலம் கொடுப்பது என்பது. அது ஒரு பிரச்சினை. தரிசு நிலத்தை மேம்படுத்துவது என்பது



2007 மார்ச் 26] [பேராசிரியர் க. அன்பழகன்]

ஒரு பிரச்சினை. கடந்த ஆட்சிக் காலத்தில் தரிசு நிலத்தை மேம்படுத்துவதாகச் சொல்லி 25 இலட்சம் எக்டேர் இருப்பதாக ஒரு தவறான கருத்து, அவர்களுக்குத் தரப்பட்ட ஒரு தவறான கருத்தை அந்த ஆட்சியிலே சொல்லியதுடன், அந்த நிலத்தை, தரிசு நிலத்தை மேம்படுத்துவதற்கு ஏழைகளிடத்திலே கொடுத்தால் அவர்களால் மேம்படுத்த முடியாது, ஆகவே, பெரிய, பெரிய முதலாளிகளிடத்திலே கொடுத்தால்தான் அவர்களால் மேம்படுத்த முடியுமென்று அந்தக் காலக்கட்டத்திலே அந்தக் கருத்து இங்கே ஆளுங்கட்சியினாலே சொல்லப்பட்டது. ஆனால், அப்பொழுதே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் கேட்டது, பெரிய முதலாளிகளிடத்திலே, தொழிலதிபர்களிடத்திலே அந்த நிலத்தை ஒப்படைத்துவிட்டால், ஏழைகளுக்கு அது கிடைக்காது என்பதால், ஏன் ஏழைகளுக்குக் கொடுக்கக் கூடாது என்று எதிர்க்கட்சி சார்பாகக் கேட்கப்பட்டபோது, அந்தத் தரிசு நிலத்தை மேம்படுத்துகிற அந்தக் காரியத்தில் சாதாரண ஏழைகள், சாதாரண விவசாயிகளால் ஒன்றும் செய்ய முடியாது என்ற ஒரு பதில் சொல்லப்பட்டது. ஆனால், அடிப்படையே தவறாகப் போய்விட்டது.

என்ன அடிப்படைத் தவறு என்றால், 25 இலட்சம் எகடேர் தமிழகத்தில் எங்கேயும் இல்லை. இருக்கிற நிலத்தை எப்படிப் பண்படுத்துவது என்று பார்க்கிறபோது, நிலமே அவ்வளவு இல்லை. இருக்கிற நிலத்தையும் எப்படியாவது பண்படுத்தி ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதியது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆட்சிக் காலத்தில் அவர்கள்கூட ஏழைகளுக்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள். 5 ஆண்டு காலத்தில் 29 ஆயிரத்து 74 ஏக்கர்; அது வேறு நிலம், அந்த ஆட்சியிலே கொடுக்கப்பட்டது. தரிசு நிலப் பிரச்சினை அதில் வரவில்லை. ஆனால், தரிசு நிலங்களாகச் சொல்லப்பட்ட நிலங்களைப் பண்படுத்திக் கொடுத்த முறையில் 77,717 ஏக்கர் நிலம் இந்த ஓராண்டு காலத்தில் தரப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தரிசு நிலம் என்ற அடிப்படையில், அது தனிப்பட்டவருடைய நிலமாக இருந்தால், அதை அவர்களுக்கே திருப்பித் தருவது; அரசாங்கத்தின் புறம்போக்காக இருந்தாலும், நிலம் இல்லாத ஏழைக்கு, அதை உழுவதற்குத் தயாராக இருக்கிறவர்களுக்குக் கொடுப்பது; அந்த அடிப்படையில் ஒரு கொள்கை வகுத்து, அந்த முறையில், இருக்கிற நிலம் எவ்வளவு நிலம் என்பது முக்கியம் அல்ல; இருக்கிற நிலம் எங்கே கிடைப்பதாயினும், அது தனிப்பட்டவர்களுடைய நிலமாக இருந்தால் அவர்களுக்கே தரப்படும்: அரசாங்க நிலமாக

இருந்தால், ஏழைக்குத் தரப்படும்; எந்த முதலாளிக்கும் அந்த நிலம் தரப்பட மாட்டாது என்ற திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி. (குறுக்கீடுகள்) திரு. தங்கமணி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்த கருத்து, தனியார் பட்டா நிலத்தை உழாமல் இருந்தால் அங்கு அரசாங்க அதிகாரிகள் நேரடியாகச் சென்று ஒரு ஏக்கருக்கு 800 ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்லி . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய பொது நோக்கம், மரபு ஒன்றுக்காக நான் சொல்ல விரும்புகிறேன். எழுதிப் படிக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப் படிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அது ஒரு பழக்கத்திற்கு வந்தாகிவிட்டது. அப்படிப் படிக்கிறபோது, அதிலே குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. அப்படி ஏதேனும் குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமானால், அவைத் தலைவரிடம் அதைக் கையிலே கொடுத்து, அவர் ஒப்புதல் கிடைத்தால்தான் அந்தக் குற்றச்சாட்டைப் படிக்கலாம். பேசும்போதுகூடச் சொல்லிவிடலாம். (குறுக்கீடுகள்) நான் வேண்டிக்கொள்கிறேன். ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதும் தலைவருடைய விருப்பம், உங்களுடைய விருப்பம். ஆனால், எழுதிப் படிக்கிறபோது குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால், முன்கூட்டியே தலைவரிடத்திலே தந்து, அதற்குப் பின்னர்தான் படிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி. (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், மேலும், மேலும் வளர்க்காதீர்கள். உட்காருங்கள். திரு. தங்கமணி, பேசுங்கள்.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைக் குறிப்பெடுத்துத்தான் பேசுகின்றேனேயொழிய, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல குற்றச்சாட்டை நான் எழுதி வைத்துப் படிக்கவில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் subject-க்குள்ளே போங்கள்.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் கூறுகின்றபோது ஏழைகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் இலவச நிலம் தரமாட்டேன் என்று சொன்னதாக இங்கே சொல்லியதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். ஏனென்றால், எந்த ஆதாரமும் இல்லாமல், அவருக்குப் பின்னால் பேச வாய்ப்பு இருக்கும்போது அதை விட்டுவிட்டு—ஏழைகளை மேற்கு வங்கத்திலே எப்படிக் குருவிகளைப்போல் சுட்டுக் கொன்றார்கள் என்பது இந்த நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதை இந்த நேரத்திலே நான் பதிய வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி, உரையை முடித்துவிட்டீர்களா?

**திரு. பி. தங்கமணி:** இரண்டு ஏக்கரிலே தொடங்கி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள் சீக்கிரம். (குறுக்கீடுகள்) Time என்ன ஆகிறது? (குறுக்கீடு)

**திரு. பி. தங்கமணி:** I am not yielding Sir. நான் பேசவே ஆரம்பிக்கவில்லை. நான் எப்படி முடிக்க முடியும்? நான் பேசவே இல்லையே! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள் சீக்கிரம். (குறுக்கீடுகள்) திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, உட்காருங்கள் முதலில். அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நீங்கள் எழுந்து பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் பேசுகின்றபோது எழுந்து பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) விவாதங்கள் நல்ல முறையிலே நடைபெற வேண்டுமானால், மன்றத்தில் யார் பேசுகிறாரோ, அவருக்குத்தான் தொடர்ந்து பேச உரிமை தர வேண்டும். பேசுகிற ஒவ்வொரு உறுப்பினரையும் இடையிட்டுக் கேட்கப்படுகிற எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்ல வேண்டுமென்ற அவசியம் கிடையாது. இடையிட்டு ஒவ்வொரு உறுப்பினரையும் நாம்

[பேராசிரியர் க. அன்பழகன்] [2007 மார்ச் 26

கேள்வி கேட்பதும் இந்த அவையிலே முறையல்ல. அமைச்சர்கள் பேசினாலோ அல்லது கட்சித் தலைவர்கள் பேசினாலோதான் குறுக்கிட்டுக் கேட்கலாமே தவிர, மற்றபடி பேச்சு பதிவாகட்டும். பின்னர் பதில் சொல்லிக்கொள்ளலாம் என்ற முறையில் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர் பேசுகின்றபோது சொல்லட்டும். (குறுக்கீடுகள்) அவர் என்ன பேசத் தெரியாதவரா? அவருக்குப் பேசத் தெரியாதா? அவர் பேசுகிறார். அவருக்கு இடையில் நீங்கள் குறுக்கிட்டுக் குறுக்கிட்டுப் பேசினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) சரி, பேசுங்கள். என்ன சொல்ல வேண்டுமோ, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இதோ பாருங்கள், கொஞ்சம் ஒழுக்கமாக இருக்கச் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் பேசுகின்றபோது எழுதி வைத்துக்கொண்டு பேசியதைப் பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சில கருத்துகளைச் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைச் சொன்னார்கள். அதற்கு நான் விளக்கம் கேட்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். எழுதி வைத்துக்கொண்டு குற்றச்சாட்டாகச் சொல்லக் கூடாது என்றும், எழுதி வைத்துக்கொள்ளாமல் தற்செயலாக, குறிப்பு இல்லாமல் பேசினால் குற்றச்சாட்டைக்கூடப் பேசலாம் என்ற தொனியிலே சொன்னார்கள். குற்றச்சாட்டு எழுதி வைத்துக்கொண்டதாக இருந்தாலும், எழுதாமல் பேசினாலும், ஆதாரம் இருந்தால்தான் பேச வேண்டும் என்ற நடைமுறை இருக்கிறதேயொழிய, குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லாத சூழ்நிலையில்கூட எழுதி வைத்துக்கொள்ளாமல் பேசலாமா என்பதைத்தான் நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் விளக்கம் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னது முழுவதையும் ஒத்துக்கொள்கிறேன். முதலிலே தலைவரிடம் எழுதிக் கொடுத்துவிட்டுத்தான் குற்றச்சாட்டு எதையும் இங்கே சொல்ல வேண்டும். ஆதாரம் இருந்தால் தலைவரிடம் ஆதாரத்தைக் காட்ட வேண்டும். ஆதாரம் காட்டாமல் குற்றச்சாட்டை இங்கே சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது.



2007 மார்ச் 26]

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், பேசுங்கள். அந்த பேப்பரை வேண்டுமானால் என்னிடத்திலே கொடுத்துவிடுங்களேன்.

**திரு. பி. தங்கமணி:** சரி, கொடுத்துவிடுகிறேன். பேசி முடித்துவிட்டுக் கொடுத்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) பேசி முடித்துவிட்டுக் கொடுத்துவிடுகிறேன் (சிரிப்பு)

இரண்டு ஏக்கரில் தொடங்கி, சில சென்ட்களாகக் குறைந்து, கையளவு நிலமாவது கொடுப்பேன் என்று சொல்வது, கவைக்கு உதவாத வெறும் பேச்சு. கையளவு நிலத்தைக் கைவிட்டுவிட்டு, இதயத்தில் மட்டும் இடம் இருக்கிறது என்று முதல்வரே கூறக்கூடிய அவல நிலைதான் உள்ளது என்பதை இந்தச் சபையில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரை, நிதிநிலை அறிக்கையிலே புதிய தொழில்கள் தொடங்குவதற்கு அரசாங்கத்தின் வாயிலாக எந்த முதலீடும் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். இங்கே பல பன்னாட்டு நிறுவனங்கள் தொழில் தொடங்கப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று நிதிநிலை அறிக்கையிலே கூறியுள்ளார்கள். எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் காலத்தில், infrastructure என்று சொல்லக்கூடிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததன் வாயிலாகவும், இங்கே தொழிலுக்குப் பாதுகாப்பு உள்ளது என்பதன் வாயிலாகவும்தான் இன்றையதினம் பன்னாட்டு கம்பெனிகள் எல்லாம் இங்கே தொழில் தொடங்க வருகின்றன என்பதைப் பெருமையோடு நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்புப் பொருளாதார மண்டலத்தைப் பொறுத்தவரை, எங்களது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், விளை நிலங்களைக் கையகப்படுத்தி நாட்டு மக்களுக்கு ஆற்றொணாத் துயரத்தை உண்டாக்குவதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம் என்று கூறியிருந்தார்கள். இதை உங்கள் கூட்டணியிலே இருப்பவர்கள்கூட எதிர்த்திருக்கின்றார்கள். அதற்குப் பயந்துதானோ என்னவோ, இன்று தொழிலே இல்லாத வட மாவட்டங்களையெல்லாம் விட்டுவிட்டு, தொழில் அதிகமாக இருக்கின்ற விருதுநகர் மாவட்டத்திலே சிறப்புப்

[திரு. பி. தங்கமணி] [2007 மார்ச் 26

பொருளாதார மண்டலத்தை நாங்கள் உருவாக்குவோம் என்று கூறியது, யாருக்குப் பயந்து அங்கே கொண்டு சென்றிருக்கிறார்கள் என்பது நாட்டுக்கே தெரியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகம் முழுவதும் எரிவாயுத் தட்டுப்பாடு அதிக அளவில் இருப்பதைக் களையாமல், வரும் நிதியாண்டில் 5 இலட்சம் இலவச எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பது, எந்த வகையில் மக்களுக்குப் பயனளிக்கும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. மத்தியிலும், மாநிலத்திலும் ஆளுகின்ற நீங்கள், எரிவாயுத் தட்டுப்பாட்டைக் களைவதற்குண்டான எந்த முயற்சியிலும் ஈடுபடாததைக் கழகத்தின் சார்பில் நாங்கள் கண்டிக்கிறோம்.

சட்டமன்றத் தொகுதிகளின் அடிப்படையில் புதிய மாவட்டங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு ஏற்பதாக நிதிநிலை அறிக்கையிலே அறிவித்துள்ளது பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு மாவட்டமா என்ற கேள்வி எழுகின்ற அளவுக்குச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. புதிய மாவட்டங்கள் அமைப்பது, தொகுதி வரையறைப் பணிகள்—de-limitation work முடிந்த பிறகுதான் என்று அறிவித்துள்ளீர்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நாமக்கல் மாவட்டத்திலே திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதியைப் பிரித்து, குமாரபாளையம் தொகுதியை ஈரோடு பாராளுமன்றத் தொகுதியிலும், சேலம் மாவட்டத்திற்குட்பட்ட மேட்டூர் சட்டமன்றத் தொகுதியை தருமபுரி பாராளுமன்றத் தொகுதிக்கும், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியை நாமக்கல் மாவட்டத்திலும் போட்டிருக்கின்றார்கள் என்றால், இந்தத் தொகுதி வரையறையைப் பொறுத்தவரை, இந்த அரசு இதிலே கண்டும், காணாமல் இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். ஏனென்று சொன்னால், அவர்களுக்குச் சாதகமாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்திலே இதை அவர்கள் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டார்களா என்பதுதான் எங்கள் கேள்வி.

ஆளுங்கட்சி என்ற தைரியத்தில் அரசுத் திட்டங்கள் அனைத்தும் ஆளும் தி.மு.க.வுக்கே என்ற நிலை நாடு முழுவதும் எதிரொலிப்பதை மறுக்க முடியாது. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல, இன்றையதினம் 'தினமலர்' பத்திரிகையிலே நீங்கள் பார்த்திருப்பீர்கள். கலர் டி.வி.யைப் பொறுத்தவரை, ஏற்கெனவே கலர் டி.வி. உள்ள வீட்டிற்கு கலர் டி.வி. கொடுத்துள்ளார்கள் என்று



2007 மார்ச் 26] [திரு. பி. தங்கமணி]

வந்த செய்தியை இன்றையதினம் நான் உங்கள் முன்னால் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்லாமல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள் திரு. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** அது மட்டுமல்லாமல் . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள், திரு. தங்கமணி. *(குறுக்கீடுகள்)*

**திரு. பி. தங்கமணி:** இருக்கிறதைத்தானே சொல்கிறேன்? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாக இருங்கள். திரு. தங்கமணி, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. பி. தங்கமணி:** அனைத்துத் திட்டங்களும் ஆளுங்கட்சியினருக்கே என்பதை நாங்கள் சொல்லவில்லை; உங்கள் தோழமைக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களே சமீபத்திலே வெளிச்சம் போட்டுக் காட்டியதை உதாரணமாகக் காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுவதைப் பற்றிப் பதில் சொல்ல வேண்டுமென்பதற்காக நான் சொல்லவில்லை. ஒரு தவறான செய்தியைச் சொல்லக் கூடாது. விவசாயக் கடன் சுமார் ஏழாயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டது. அதிலே அதிகமாகப் பயனடைந்தவர்கள் யார் என்று கேட்டால், முன்னாள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள்தான். (குறுக்கீடுகள்) வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பற்றிப் பேசுகிறார்கள். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பற்றிச் சொல்கிறேன். குடும்ப அட்டை வைத்திருப்பவர்கள் அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுப்போம் என்று முடிவு எடுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அப்படி ஏற்கெனவே வைத்திருப்பவர்களுக்குக் கொடுக்கவில்லை என்றால், உடனே நீங்கள் அதை ஒரு பிரச்சினையாக ஆக்குவீர்கள். தேர்தல்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2007 மார்ச் 26

நேரத்தில் இப்படிச் சொன்னீர்களே, ஏன் அவர்களுக்குக் கொடுக்கவில்லை என்றும் சொல்வீர்கள். நேற்றைக்கு முந்தையநாள் நான் இராயபுரத்தில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினேன். அண்ணா நகர் தொகுதியிலும் வழங்கினேன். அங்கே வந்தவர்கள் எல்லாம் தி.மு.க.காரர்கள் அல்ல. அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களும் வந்தார்கள். காங்கிரஸ்காரர்களும் வந்தார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் வந்தார்கள். எல்லாவற்றிற்கும் மேலாகப் பொது மக்கள் நிறையப் பேர் வந்து வாங்கிச் சென்றார்கள். *(குறுக்கீடு)*

நண்பகல் *12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, கலர் டி.வி. வைத்திருப்பவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது, இல்லையென்றால் பிரச்சினைகள் வருகின்றன என்று சொன்னார்கள். அப்படியென்றால், தமிழ்நாட்டிலே *1* கோடியே *99* இலட்சம் பேர் குடும்ப அட்டை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் நீங்கள் கலர் டி.வி. வழங்கப் போகிறீர்களா? அதற்கு இந்த அரசினிடத்திலே நிதி இருக்கிறதா என்பதை உங்கள்மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி. *(குறுக்கீடு)*

**திரு. டி. ஜெயக்குமார்:** Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். Don't make it an issue. உட்காருங்கள்.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சியின் அனைத்துத் திட்டங்களும் ஆளுங்கட்சியினருக்கே என்பதைத் தோழமைக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களே சமீபத்தில் வெளிச்சம் போட்டுக் காட்டியதை இந்தச் சபையில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். *25* இலட்சம் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருவதாக அறிவிப்பு வந்துள்ளது. நாடு முழுவதும் கேபிள் வசதியை ஒரு குடும்பத்தின் ஆளுகைக்கு உட்படுத்தி, ஏழை எளிய மக்களிடம் கொள்ளை இலாபம்



2007 மார்ச் 26] [திரு. பி. தங்கமணி]

சம்பாதிக்கும் நிலையை மாற்றியமைக்கத்தான் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் கேபிள் இணைப்புகளை அரசுடைமையாக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஏழை எளிய மக்களுக்குப் பயன்படக்கூடிய அந்தச் சட்டத்தைத் தற்போதைய மைனாரிட்டி அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்த்ததை இந்த நாட்டு மக்கள் நன்கு உணர்வார்கள் என்பதை இந்தச் சபையிலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Mr. Nanmaran, *(குறுக்கீடு)* என்ன பேசவேயில்லை? முக்கால் மணி நேரமாகப் பேசிக்கொண்டிருக்கிறார் அவர்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், உட்காருங்கள். *(குறுக்கீடு)* இரண்டு நிமிடங்களில் உரையை முடியுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள். இன்னும் நிறையப் பக்கங்களைக் கையில் வைத்துக்கொண்டு கையைக் கையைக் காட்டிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? *(குறுக்கீடு)* No, No., நிறைய பேப்பரைக் கையில் வைத்துக்கொண்டு, என்னைப் பார்த்து ஒரு பக்கம் என்றால் ...

**திரு. பி. தங்கமணி:** சார், என்னைப் பேசவேவிடவில்லையே! நான் என்ன செய்வது? *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதை allow பண்ண முடியாது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு submission. இப்போது அவர் உரையை முடிக்க வேண்டும் என்பதற்காக அவரை உட்கார வைக்கிறீர்கள் இல்லையா? ஏனென்றால், அவர் பேசி முடிக்க வேண்டும். நான் எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஒரு நாளும் உரையை முடித்ததே கிடையாதே! *(சிரிப்பு)* அப்படிப் பண்ணினார்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள். திரு. தங்கமணி, One minute-ல் உரையை முடியுங்கள்.

[2007 மார்ச் 26

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்கு என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி மக்களின் கோரிக்கையை இங்கே பதிய வைப்பதை என்னுடைய தலையாய கடமையாகக் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எழுதி வைத்திருக்கிறீர்களே, அதைக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. பி. தங்கமணி:** போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ள பள்ளிப்பாளையம்–ஈரோடு சாலையில் காவிரியாற்றின் குறுக்கே அமைந்துள்ள குறுகிய பாலத்தினையொட்டிக் கூடுதலாக ஒரு பாலம் அமைக்க வேண்டும் என்ற நீண்ட நாள் மக்கள் கோரிக்கையை இந்த அவைமுன் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். போக்குவரத்து நெரிசலைக் கருத்தில்கொண்டு, பள்ளிப்பாளையத்திலிருந்து திருச்செங்கோடு செல்லும் நெடுஞ்சாலையில் பேப்பர் மில் காலனி அருகில் மேம்பாலமும், ஆனூர் அருகில் ஒரு மேம்பாலமும் அமைக்கும் கருத்துரு நீண்ட காலமாக அரசின் நிலுவையில் உள்ளதை இந்த அவையில் பதிய வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பள்ளிப்பாளையம் பகுதியில் கட்டப்பட்டுள்ள அன்னை சத்யா நகர் குடிசை மாற்று வாரியத்தின் 1,248 குடியிருப்புகள் எந்த நிமிடத்திலும் இடிந்துவிடும் சூழ்நிலை உள்ளதால், மாற்றுக் குடியிருப்பு புதியதாகக் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை இந்தச் சபையில் கேட்கக் கடமைப்பட்டுள்ளேன்.

திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதியில் ஒரு அரசுக் கலைக் கல்லூரி வேண்டுமென்பது நீண்ட நாள் பொது மக்கள் கோரிக்கையாக இருப்பதையும் இந்தச் சபையில் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகத்தில் எந்த நகராட்சியிலும் இல்லாத அளவிற்குத் திருச்செங்கோடு நகராட்சியில் வீட்டு வரி விதிக்கப்பட்டுள்ளதை மாற்றியமைத்து, ஏனைய நகராட்சிகளில் உள்ள அளவிற்குக் குறைத்திட வேண்டுமென்ற மக்கள் கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

திருச்செங்கோடு, ஈரோடு பகுதிகளை இணைக்கும் வகையில் திருச்செங்கோடு, கொக்கநாயன்பேட்டை காவிரியாற்றுப் பாலம் அமைத்து புறவழிச் சாலை அமைக்கும் நிலுவையில் உள்ள திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் மலைக் கோயில் பக்தர்களுக்கு நீண்ட நாள் கோரிக்கையான தங்கத் தேர் செய்து முடித்து, அதனை இழுக்கப் பாதை அமைக்க நிதி வழங்க இந்த அரசு முன்வர வேண்டும்.



2007 மார்ச் 26] [திரு. பி. தங்கமணி]

பிற்பகல் 12-05

திருச்செங்கோடு, பள்ளிப்பாளையம் பகுதிகளில் விசைத்தறித் தொழில் அதிகம் உள்ளதைக் கருத்தில்கொண்டு, விசைத்தறிப் பூங்கா அமைக்கப்பட வேண்டும். குமாரபாளையம் நகராட்சிப் பகுதியில், அடிப்படை வசதிகளைப் பெருக்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

திருச்செங்கோடு வருவாய் வட்டம் மிகப் பெரிய வருவாய் வட்டமாக இருப்பதால், குமாரபாளையம், பள்ளிப்பாளையத்தை மையமாகக் கொண்டு ஒரு தனி வட்டாட்சியரகம் அமைக்கப்பட வேண்டும்.

காவிரி ஆறு மாசுபடுவதைத் தடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட National River Action Plan என்ற திட்டத்தில் நிலம் ஒதுக்கப்பட்டும், மேல் நடவடிக்கை தொடராமல் நீண்ட காலமாக நிலுவையில் இருப்பதால் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. பி. தங்கமணி:** எனக்கு இவ்வளவு நேரம் அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்வைத்த நிதிநிலை அறிக்கையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது என்பதை முதலாவதாகத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப் பேச அழைத்ததற்கு நன்றி தெரிவிக்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதை நானும் வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க் கட்சியிலே மூன்று பேர் பேச வேண்டியிருக்கிற காரணத்தினால், அவர்களை அனுமதிப்பதாகக் கூறினீர்கள்.

"நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை"

என்பது குறள். எனவே, நீங்கள் நல்லது செய்வது என்று நினைத்தாலும்கூட, இப்படி இரப்பராக இழுப்பார்கள் என்று

தெரியாததன் விளைவாக, நண்பகலைத் தாண்டி நிற்க வேண்டிய நிலைமைக்கு நான் ஆளாகியிருக்கிறேன். இருந்தாலும், தோழர் கோவிந்தசாமி அவர்கள் குறுக்கிட்டார்கள். சென்ற முறை அந்த விவாதம் நடந்தபோது, அவையில் நான் இருந்தேன். அந்த நண்பர் இல்லை. மேலும், அண்ணன் பொன்முடி இருந்ததாகச் சொல்கிறார்கள். எல்லோரும் இருக்கிறார்கள்.

தரிசு நில விநியோகம் பற்றி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இப்போது சொன்னார்கள். நாங்கள் சொல்கிறபோது, அது ஏழைகளுக்குத் தரப்பட வேண்டும் என்று நாடோடி மன்னன் திரைப்படத்தை எல்லாம் சுட்டிக்காட்டினோம். கோபப்பட்டு, இவர்களுக்கு சொல் புத்தியும் கிடையாது, சொந்த புத்தியும் கிடையாது, இனிமேல் பதிலே சொல்ல மாட்டேன் என்று இதே அவையிலே சொல்லிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பிறகு அதற்காக நாங்கள் ஒரு வெளிநடப்புப் பண்ண வேண்டியதாக ஆயிற்று.

அடுத்து, இப்போதும்கூட நண்பர் கோபப்பட்டு மேற்கு வங்காளத்தைப் பற்றிச் சொன்னார். குருவிகளைப்போலச் சுட்டுச் சுட்டுக் கொல்கிறார்கள் என்று. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வங்காளத்தைப் பற்றி யார், யார் பேச வேண்டும் என்று ஒரு விவஸ்தை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தடவை ஆட்சிக்கு வந்தால் மறு தடவை வரமாட்டீர்கள், அது உங்கள் தலையெழுத்து. (சிரிப்பு) ஆனால், 30 ஆண்டுகளாக இடைவிடாமல் ஒரு ஆட்சி மேற்கு வங்காளத்தில் இருக்கிறது என்றால், அது இடது முன்னணியினுடைய சிறப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அதற்குமேலே இதை நான் மீண்டும் வளர்க்க விரும்பவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். அமைதியாக இருங்கள்.

**திரு. என். நன்மாறன்:** நிதிநிலை அறிக்கையில் புதிய வரிகள் இல்லை. மனப்பூர்வமாக வரவேற்கிறோம். கூட்டுறவு பற்றி சிறப்பாக அதிலே வந்திருக்கிறது. ஆனால் அதே சமயத்தில், மே மாதம், ஜூன் மாதத்திலே தேர்தல் நடைபெறும் என்று தெரிவித்திருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. ஆனால், 18 கூட்டுறவு நூற்பாலைகளிலே 13 கூட்டுறவு நூற்பாலைகள் கடந்த காலத்தில் மூடப்பட்டுவிட்டன. அவற்றை மீண்டும் இயக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இயங்கக்கூடிய





5 நூற்பாலைகளும்கூட நன்கு இலாபகரமாக இயங்குகின்றன. ஆகவே, அவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, கூட்டுறவு நூற்பாலைகள் இயங்க வழி காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை அர்பன் கூட்டுறவு வங்கி மீண்டும் இயங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

தரிசு நில விநியோகம் பற்றி இங்கே கூறப்பட்டிருக்கிறது. அந்த விநியோகத்தைப் பொறுத்தவரையில், இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தெரிவித்தார்கள். அது தெளிவுபடுத்தப்பட வேண்டும். விவர அறிக்கை ஒன்றாவது இந்த அவையில் வைக்கப்படுவது உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு கையிலே இருந்ததில் எவ்வளவு தந்திருக்கிறோம், உழுததில் எவ்வளவு அவர்களுக்கே வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன். அடுத்ததாக, தனியார் கையில் இருக்கக்கூடிய நிலங்கள், உபரி நிலங்கள் எவ்வளவு என்பது கண்டறியப்பட்டு, அவற்றையும் கைப்பற்றுகிற முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆடு வளர்ப்போர் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியிலே சில கூட்டங்களை நடத்திக் கோரிக்கைகளையெல்லாம் வைத்திருக்கிறார்கள். கால்நடை வளர்ப்புக்கு அரசு எடுக்கக்கூடிய முயற்சி நல்ல முயற்சி. ஆனால், ஆடு வளர்ப்போர் பாதிக்கப்படுகிறார்கள். தேனி மாவட்டத்தில் மலை மாடுகள் வளர்க்கக்கூடியவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அந்த அமைப்பைச் சேர்ந்தவர்களை அழைத்துப் பேசி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர் வள, நில வள மேம்பாடு என்பதில் நான் குறிப்பிட விரும்புவது, வைகை உற்பத்தியாகக்கூடிய வருஷநாடு பகுதியில் உள்ள அந்த உற்பத்தித் தலம் பாதுகாக்கப்பட வேண்டும். இயற்கையான மழை அங்கே பொழிவதற்குரிய சூழல் ஏற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வைகை அணையைத் தூர் வார வேண்டும். அதேபோன்று, நீர், நில வளத் திட்டத்தின்கீழ் சில ஆறுகள் சேர்க்கப்பட்டுள்ளன. வைகை ஆற்றையும் அதில் சேர்க்க வேண்டும். அதன்மூலம் தென் மாவட்ட மக்களுக்குத் துணை புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

On-line வர்த்தகம் பற்றி இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. ஏற்கெனவே எங்களுடைய கட்சியின் தலைவர்கள் தோழர் என். வரதராஜன், டி.கே. ரங்கராஜன் ஆகியவர்கள் எல்லாம் முதலமைச்சர் அவர்களையும்

பார்த்துப் பேசியிருக்கிறார்கள். On-line வர்த்தகத்தில் பருப்பு வகை என்பதை மத்திய அரசு கைவிட்டிருக்கிறது. அதே சமயத்தில், பிற அத்தியாவசியப் பொருட்களும் சேர்க்கப்பட வேண்டும் என்று அரசு வற்புறுத்தும் என்று தெரிவித்திருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. அன்னிய மூலதனம் என்பது இந்த On-line வர்த்தகத்துக்குள் நுழைகிறது. அதனையும் நம்முடைய அரசு எதிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

*பிற்பகல் 12–10*

நீதிமன்றத்தில் தமிழ் மொழி. ஏற்கெனவே இது நீண்ட காலக் கோரிக்கை. கடந்த ஆட்சிக் காலத்திலும்கூட எழுதியிருந்தேன்; பரிசீலனையில் இருக்கிறது என்று பதில் வந்திருந்தது. அதுவும் நீண்ட காலம் ஆகிவிட்டது. இப்போது மத்தியிலும், மாநிலத்திலும் ஒரு சுமுகமான சூழலில் தமிழ் நீதி மொழியாவது மகிழ்ச்சிக்குரியது, இந்த மன்றத்திலேயே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். ஆனால், அதை விரைவுபடுத்துவதற்காக மதுரையில் இருக்கக்கூடிய வழக்கறிஞர்கள் நடத்தக்கூடிய போராட்டம் அரசின் கவனத்திற்கு வந்திருக்கும். அதனையும் உறுதி செய்ய வேண்டும் என்றும், மத்திய அரசை மீண்டும் வற்புறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்தைப் பொறுத்தவரையில் இந்த நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது. அதில் அண்டை மாநிலங்களில் நமது வழித்தடத்தில் தனியார் பேருந்துகளை வாடகைக்கு விடுவது என்கிற ஒரு கருத்துரு அரசிடம் இருப்பது போக்கப்பட வேண்டும். ஏற்கெனவே தனியாரிடம் இருந்ததை அரசுடைமையாக்கியதில் தமிழக அரசுக்கு மிகப் பெரிய பங்கு உண்டு. குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குப் பங்கு உண்டு. இப்போது மீண்டும் தனியார்மயம் வரக்கூடிய சூழலைப் போக்குவரத்தில் ஏற்படுத்தக் கூடாது என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, வாகன ஓட்டுநர்கள் பற்றி ஒரு குறிப்பு இருக்கிறது. குடிபோதையில் ஓட்டுவது பற்றி எல்லாம் இருக்கிறது. குடிபோதையில் யாராவது வாகனம் ஓட்டினால் அது கண்டிக்கத்தக்கது, தண்டிக்கத்தக்கது. ஆனால், சாலை விபத்து என்பது பல்வேறு காரணங்களால் ஏற்படுகிறது. ஓட்டுநர்கள் மிகப் பெரிய குற்றவாளிகளாக நடத்தப்படுகிறார்கள். அவர்களை ஜாமீனில் விடுவதற்குக்கூட மறுக்கப்படுகிறது. எனவே, ஓட்டுநர்களைச் சொந்த ஜாமீனில் விடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





பள்ளிகளில் தரம் உயர்வு என்பதைத் தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள், கல்வியில் இடை நிறுத்தம் கூடாது என்பதற்காக. அதிலும் மதுரை மாநகராட்சி பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். மதுரையில் இருக்கக்கூடிய மாநகராட்சிப் பள்ளிகளில், குறிப்பாகக் கிழக்குப் பகுதியில் இருக்கக்கூடிய மாநகராட்சிப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படவில்லை. அதில் உரிய கவனத்தை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களும்கூட, வருகிற கல்வி ஆண்டில் நிறைவேற்றப்படும் என்று கூறினார்கள். அது விரைவில் நிறைவேற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தரம் உயர்த்துகிறபொழுது, அந்த முறையில் ஆசிரியர் நியமனம், அலுவலர் நியமனம் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாவட்ட நூலகங்களில் I.A.S. படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஒரு தனி இட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சென்னையிலும்கூட தேவநேயப் பாவாணர் நூலகத்திலும் சிறப்பாக இருக்கிறது. மாவட்ட நூலகங்களில் மாத்திரம் இதைச் செய்யாமல், வட்டார அளவிலான நூலகங்களிலும், I.A.S. பயிலக்கூடிய மாணவர்களுக்குக் குறிப்பெடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும், இதன்மூலம் கிராமப்புற மாணவர்கள் பயன்பெற வழி ஏற்படும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உயர் கல்வியைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே அண்ணா பல்கலைக்கழகம் பற்றி இங்கே பேசியிருக்கிறோம். சட்டமுன்வடிவிலும்கூட அதைக் குறிப்பிட்டோம். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மதுரையில் அண்ணா பல்கலைக்கழகம் வேண்டும் என்று கேட்டிருந்தோம். அதற்கு உயர் கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபொழுது, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்து உரிய நடவடிக்கை மேற்கொள்கிறோம் என்று தெரிவித்தார்கள். இது ஒரு முக்கியமான கோரிக்கை. மதுரை காமராஜர் பல்கலைக்கழக Senate-ல்கூட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழுவும் கேட்டுக்கொண்டிருக்கிறது. தற்பொழுது திருநெல்வேலிக்கு இந்தப் பல்கலைக்கழகம் செல்கிறது, அதை நான் மறுக்கவில்லை. அங்கேயும் வரட்டும். மதுரையில் இது அமைக்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது மதுரை மக்களுடைய மிகப் பெரிய எதிர்பார்ப்பு என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. என். நன்மாறன்] [2007 மார்ச் 26

அதேபோல, அரசு பல் மருத்துவக் கல்லூரி தென் மாவட்டங்களில் இல்லை. மதுரை பாலரங்காபுரம் பகுதியில் இந்தப் பல் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான கருத்துரு என்பது உருவாக்கப்பட்டு, மனுக்கள் குழுவிலும் பேசப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் உள்ளன. அதனை உறுதி செய்து அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கையில் கிராபைட் கனிம வளத்தைப் பயன்படுத்துவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு கனிம வள நிறுவனம் தனியார் நிறுவனங்களோடு இணைந்து இந்தப் பணிகள்ள நிறைவேற்றும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் தனியார் என்பது இல்லாமல் அரசே இந்தப் பணியை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரியக்கூடிய இளைஞர்களுக்கு ஒரு சட்டப் பாதுகாப்பு கிடைக்கக்கூடிய வழியை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. சிற்சில இடங்களில் புகார்கள் வரக்கூடிய சூழல் ஏற்படுகிறது, அதனையும் தவிர்க்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

சாலை மேம்பாடு என்பதில் மேம்பாலங்கள் பற்றி நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது. இரயில்வே மேம்பாலங்கள் முடிந்துள்ளன என்று ஒரு குறிப்பு இருக்கிறது. அதிலே மதுரையைப் பொறுத்தவரையில், அந்த நகரமே துண்டிக்கப்பட்ட ஒரு நிலையில் இருக்கிறது. எல்லிஸ் நகர் பாலம் இன்னும் முடிக்கப்படாமல் பாக்கி இருக்கிறது. தத்தனேரி, கூடல் நகர் பாலங்களை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட்டு இருக்கிறார்கள். அவை முழுமையாக்கப்பட வேண்டும், உரிய தேதியும் அறிவிக்கப்பட்டு, திறப்பு விழா விரைவில் நடைபெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–15

மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல பதிலை இந்த அவைக்குத் தெரிவித்தார்கள். மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலைச் சுற்றிலும் மின் கம்பிகளை பூமிக்கடியில் பதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாநகராட்சி முழுவதும் அது விரிவுபடுத்தப்படுமா என்று கேட்டிருந்தேன். அதற்கு மின் துறை



2007 மார்ச் 26] [திரு. என். நன்மாறன்]

அமைச்சர் பதில் சொல்கிறபோது, மதுரை மாநகராட்சி மாத்திரமல்ல; தமிழகத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகளிலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொன்னார். அதைப் பற்றி இந்த அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இந்தத் திட்டத்தினை நிறைவேற்றுவதன்மூலம், மின் கம்பிகள் தட்டாத ஒரு சூழல், மரங்களை உயரமாக வளர்ப்பதற்கான ஒரு சூழல் ஏற்படும்; சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விமான நிலைய விரிவாக்கத்தின்போது குடும்பங்கள் பாதிக்கப்படக் கூடாது என்று எங்களுடைய தலைவர்களான தோழர் என். வரதராஜன் அவர்களும், தோழர் டி.கே. ரங்கராஜன் அவர்களும் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். முதல்வரும் அந்த அறிவிப்பை வழங்கியிருக்கிறார். ஆகவே, மக்களையும் பாதுகாக்க வேண்டும்; விமான நிலைய விரிவாக்கப் பணியும் மதுரை போன்ற இடங்களில் விரைவுபடுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பணிகளை நிறைவேற்றித் தருமாறு வேண்டிக்கொள்கிறேன்.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறச் சீரமைப்புத் திட்டத்திற்கு 2,470 கோடி ரூபாய் மதிப்பீடு என்று வந்திருக்கிறது. இதில் மதுரை மாநகருக்கு 284 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை கூடுதலாக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சிக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக உயர்த்தப்பட்டிருந்தாலும்கூட, இது போதாது. அண்டை மாநிலங்களில், குறிப்பாக, வங்கம்போன்ற மாநிலங்களில் உள்ளாட்சி நிருவாகம் நடைபெறுவதைக் கவனத்தில் வைத்து, இங்கேயும் அதிகப்படுத்தப்பட வேண்டும். வரி வருவாயில் 30 சதவீதம் வரையிலும் உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும். இதில் ஊழியர் சம்பளம் என்பது சேர்க்கப்படக் கூடாது என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

இலவச வீட்டுமனைப் பட்டா என்பது தமிழக மக்களுடைய மிகப் பெரிய கனவு. குறிப்பாக, மதுரை காமராஜபுரம் பகுதியில் வாழக்கூடிய மக்கள், கீரைத்துறை, அனுப்பானடியில் இருக்கக்கூடிய மக்கள், அதுபோலத் தமிழகம் முழுவதிலும் இருக்கக்கூடிய மக்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தார்கள். அதன்மீது அரசும்கூட அறிவிப்பு வெளியிட்டது; இந்த நிதிநிலை அறிக்கையிலும் இருக்கிறது. கால வரம்பு செய்யப்பட வேண்டும்; விரைவில் இந்தப் பணியை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்களைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரியில் காணாமல் போகக்கூடிய மீனவர்களைத் தேட அங்கேயே ஹெலிகாப்டர் வசதி செய்து தரப்பட வேண்டும். இன்றைக்குக்கூட நாளேடுகளில் செய்தி வந்திருக்கிறது. அவர்கள் இராமேஸ்வரத்தையும், வேறு சில இடங்களையும் நாட வேண்டிய நிலைமை இல்லாமல், குமரியிலேயே அந்த ஹெலிகாப்டர் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுடைய குடியிருப்புகள் சீர்படுத்தப்பட வேண்டும். மனித மலத்தை மனிதனே அள்ளுகிற அந்தக் கொடுமை என்பது போக்கப்பட வேண்டும். ஆதி திராவிடர்களாக உள்ள உள்ளாட்சித் தலைவர்கள், நெல்லை மாவட்டத்திலே இரண்டு அருந்ததியர்கள் படுகொலை செய்யப்பட்டது நமக்கெல்லாம் தெரியும். இந்த நிலைமை மேலும் தொடராமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பழங்குடிப் பகுதியைச் சார்ந்தவர்கள் பல பேர் இன்னும் சாதிச் சான்றிதழ்கள் கிடைக்காமல் இருக்கிறார்கள். குறிப்பாக, மதுரை காட்டுநாயக்கன் சமூகத்தைச் சார்ந்த, புட்டுத்தோப்புப் பகுதியில் வாழக்கூடிய அந்த மக்களுக்கும், வேறு பல இடங்களிலே இருக்கிற பழங்குடியின மக்களுக்கும் சாதிச் சான்றிதழ் இல்லாத நிலைமையைக் கண்டறிந்து, உரிய நிவாரணம் கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடி சமூக இளைஞர்கள் விளையாட்டுத் துறையிலே ஊக்குவிக்கப்பட வேண்டும். எங்கள் தலைவர் தோழர் டி.கே. ரங்கராஜன் அடிக்கடிச் சொல்வார். கிரிக்கெட் போட்டியில் அவர்களை ஈடுபடுத்தினால் உலகத்தில் யாரும் நம்மை வெல்ல முடியாது. அந்த முறையில் அவர்களுக்கு உரிய பயிற்சியை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொழிக் காவலர்கள் பற்றிய ஒரு குழு என்பது அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின்மீது மிகப் பெரிய எதிர்பார்ப்பை சம்பந்தப்பட்டவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குழு இயங்குவதற்கான ஒரு நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் துறையைப் பொறுத்தவரையில், அமைப்புசாராத் தொழிலாளர்களுடைய நலன் பற்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.





அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியங்கள் இன்னும் கூடுதலாக்கப்பட வேண்டும். குறிப்பாக, அந்தத் தொழிலாளர் துறை முறையாக இயங்க வேண்டும். அவை இயங்குவதற்கான வழியும் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுமை தூக்கும் பணி செய்யும் தொழிலாளர்களும் தனி நல வாரியம் தேவையென்று விரும்புகிறார்கள். ஆகவே, அதனையும் செய்ய வேண்டும். ஏற்கெனவே மனு செய்தவர்களுக்கும் உரிய நிவாரணம் கிடைக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

டாஸ்மாக்கில் வேலை செய்யக்கூடிய இளைஞர்களுடைய பணி பாதுகாக்கப்பட வேண்டும். பணி நேரம் என்பது நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

வணிகத்தைப் பொறுத்த அளவிலே, VAT வரி விலக்கு என்பது பல பொருட்களுக்கு இருக்கிறது. மகிழ்ச்சி. வெல்லம் என்பது விடுபட்டுள்ளது. மிட்டாய், சாம்பிராணி, உடனடி சாம்பிராணி ஆகியவையும் சீர்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையைச் சேர்ந்த சிறுமி சுபஸ்ரீ ஓட்டப் பந்தயத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டதன்மூலம், அந்தக் குழந்தையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழைத்துப் பாராட்டியிருக்கிறார்கள். அந்தக் குழந்தைக்குச் படிப்புக்கும் உதவி செய்திருக்கிறார். அந்தக் குழந்தைக்குச் செய்திருக்கக்கூடிய உதவிக்கு மதுரை மக்களின் சார்பில் என்னுடைய நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோன்ற விஷயங்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்துகளைப் பதிவு செய்வது என்கிற முறையில் எங்களுடைய மாநிலக் குழுவும் அதனைத் தெரிவித்திருக்கிறது. அந்த அடிப்படையில் சொல்ல வேண்டிய தகவல்களாக இவைகளைக் குறிப்பிட்டு, இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

குறிப்பாக, வேலையில்லாக் கால நிவாரணம் இப்போது வழங்கப்படுகிறது. நெசவாளர்கள் ஓய்வூதியத் திட்டம் என்கிற முறையில் 200 ரூபாய் என்பதை 400 ரூபாயாகத் தமிழக அரசு அறிவித்திருப்பதற்கு மதுரை செல்லூர் பகுதியிலும், காஞ்சியிலும், பல்வேறு இடங்களிலும் இருக்கக்கூடிய நெசவாளர்களின் சார்பில் நான் நன்றியைத் தெரிவிக்கிறேன். வேலையில்லாக் கால நிவாரணம் என்பது ஒரு நீண்ட காலக் கோரிக்கை. இங்கே சொன்னார்கள், மேற்கு

வங்கத்தைப் பற்றி. அந்த வங்க மாநிலத்தில்தான் அசோக் மித்ரா என்கிற நிதி அமைச்சர் இருந்தபோது, மாண்புமிகு அன்றைய மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இது கொண்டு வரப்பட்டு, அதையே தமிழகத்திலும் நிறைவேற்ற வேண்டுமென்று நீண்ட கால இயக்கத்தை நாங்கள் நடத்தி, அங்கு சோசலிஸ்ட் வாலிபர் முன்னணி என்கிற அமைப்பின் சார்பில் 15 நாட்களாக மத்திய சிறைச்சாலையிலும் நாங்கள் இருந்து, மிகப் பெரிய சைக்கிள் பேரணிகளை நடத்தி, குமரியிலிருந்து சென்னை வரையிலும் சைக்கிளில் வந்து, ஒரு நீண்ட முயற்சிக்குப் பின்னால் அது வந்தது. பிறகு நிறுத்தப்பட்டது. மீண்டும் அந்த நிவாரணத்தைத் தமிழக அரசு கொண்டு வந்திருப்பதற்குத் தமிழக இளைஞர்களின் சார்பில் நான் நன்றி தெரிவிக்கிறேன். அது 300 ரூபாய் என்று இருக்கிறது. நெசவாளர் ஓய்வூதியம் ரூபாய் 200 என்பது எப்படி ரூபாய் 400 ஆக்கப்பட்டதோ, அதேபோல இந்த வேலையில்லாக் கால நிவாரணம் என்கிற முறையில், Unemployment Relief-ஐ இப்போது இருக்கும் ரூபாய் 300 என்பதிலிருந்து ரூபாய் 400 ஆக உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அமரர் ஜீவானந்தம் அவர்களுடைய பிறந்த நாள் விழாவை, நூற்றாண்டு விழாவை மூன்று இடங்களில் அரசு நடத்தும் என்று அரசு எடுத்திருக்கிற முயற்சிக்கு, முடிவிற்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில், அவர் உருவாக்கியிருந்த சிறாவயல் ஆசிரமம்—சேரன்மகாதேவியில் பாகுபாடு காட்டப்பட்ட அந்த ஆசிரமத்திற்கு மாற்றாக இங்கே உருவாக்கியிருந்தார்—அந்த ஆசிரமத்தையும் அரசு கையகப்படுத்தி அதை ஒரு நினைவு இல்லமாக மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்; அதனை அந்தப் பகுதி மக்கள் விரும்புகிறார்கள். அதனையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

***திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறப்பான நிதிநிலை அறிக்கையிலே விவாதத்தைத் தொடங்குவதற்கு முன்னால், தமிழகத்தில் 70 ஆண்டு காலம் பல்வேறு சோதனைகளிலும் நிலையான கொள்கையோடு, தமிழகத்தின் வளர்ச்சிக்காக, தமிழகத்தின் பாரம்பரியம், பண்பாடு, நாகரிகத்தை உலகத்திற்கு அளித்து, அரசியலில் மட்டுமல்லாது தமிழ் மொழியின் இலக்கண, இலக்கியத்திலும், எழுத்திலும், பேச்சிலும் தனக்கென ஒரு





இடத்தைப்பெற்று சாதனை படைத்துள்ள நமது முதல்வர் அவர்கள் தொடர்ந்து 50 ஆண்டு காலம் மக்கள் பிரதிநிதியாகத் தேர்வுபெற்று சாதனை படைத்ததோடு மட்டுமல்லாமல், மக்கள் பிரதிநிதிகளுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறார்கள். அவரது மக்கள் பணி தொடர இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக அரசின் சிறப்பான நிதிநிலை அறிக்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். இந்த அரசு பொறுப்பேற்று, முதல் கவர்னர் உரை மற்றும் வரவு–செலவு நிதிநிலை அறிக்கையில் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றியதையும், அந்தத் திட்டங்கள் முழுமைபெறுவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் தொடர்ந்து நிதி ஒதுக்கீடுகளையும், கண்காணிப்பையும் உருவாக்கியுள்ளது சிறப்பிற்குரியது.

சிவகங்கைக்குத் தொழிற்பயிற்சி நிலையம், காவிரியிலிருந்து குடிதண்ணீர் கொடுப்பதுபோன்ற பல்வேறு திட்டங்களைப் பின்தங்கிய அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கியதற்காக நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு அந்த மாவட்ட மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிவகங்கை மக்களின் நீண்ட கால கிராபைட் திட்டத்தை உயர் தொழில்நுட்பத்துடன் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தும் வகையில் புதிய கிராபைட் சுத்திகரிப்பு ஆலையைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததற்காக சிவகங்கைத் தொகுதி மற்றும் மாவட்ட மக்களின் சார்பிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக அரசின் இந்த அறிவிப்பால், காலங்காலமாகப் பின்தங்கியுள்ள சிவகங்கைப் பகுதி தொழில் வளர்ச்சி அடையும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தமிழக அரசின் திட்ட அறிவிப்பான சிவகங்கை கிராபைட் கனிமத்தை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் தமிழ்நாடு கனிம நிறுவனம் தனியார் தொழில் முனைவரோடு இணைந்து சர்வதேசத் தரத்திற்கான உயர் தொழில்நுட்பத்துடன் கிராபைட் சுத்திகரிக்கும் மற்றொரு ஆலையை நிறுவும் திட்டம் உருவாக்கப்படுகிற அதே வேளையில், கிராபைட்டைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் சூளைக் கற்கள், மொசைக் கல், உயர் ரக பெயின்ட்கள், கிராபைட் கிரீஸ் மற்றும் கார்பனைப் பயன்படுத்திச் செய்யப்படும் பல தொழிற்சாலைகளை சிவகங்கையில் தொடங்குவதற்கான திட்டத்தை அறிவிக்க வேண்டுகிறேன்.

[திரு. சு. குணசேகரன்] [2007 மார்ச் 26

பிற்பகல் 12-25

கிராபைட் உப தொழிற்சாலைகளைத் தொடங்க, சிவகங்கை பகுதியில் கிராபைட் தொழில் மண்டலம் அல்லது தொழிற்பூங்காவை உருவாக்கிட அறிவிக்க வேண்டும். அங்கு தொழில் செய்பவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். இதன்மூலம் மட்டுமே சிவகங்கையில் வேலைவாய்ப்பில் வளர்ச்சி ஏற்படுத்த முடியும். கிராபைட் கனிமம் எடுக்கிறபோது, பெருமளவில் தண்ணீர் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே, அவற்றை முறையாகப் பாசன வசதிகளுக்குப் பயன்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த திட்டத்தை உருவாக்கித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு சிவகங்கை மாவட்டம் கடும் வறட்சிக்கு இலக்காகி உள்ளது. எனவே, சிவகங்கை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, வறட்சி நிவாரணப் பணிகளைத் தொடங்க வேண்டும். விவசாயிகளில் 7.5 சதவிகிதத்தினர் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் சேராத சூழலில், அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் இழப்பீடு நிவாரணம் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். வறட்சியால் குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ள நிலையில், குடிதண்ணீருக்காக மாவட்டத்திற்குக் கூடுதலான நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கைத் தொகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகமான முத்தரையர்கள் இன்றைக்கும் பெருமளவில் குடிசையில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு சிறப்புத் திட்டத்தின் அடிப்படையில் கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை மீண்டும், மீண்டும் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, இன்றைக்கு அமரர் ஜீவானந்தம் நூற்றாண்டு விழாவை சென்னை, கோவை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் சிறப்பாக நடத்த நமது முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளதை உளப்பூர்வமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்பதோடு, அதே சமயம், தமிழுக்காக, உழைக்கும் மக்களுக்காகத் தன்னலமற்று வாழ்ந்த அருமைத் தலைவர் ஜீவானந்தம் அவர்களுடைய திருவுருவப் படத்தை இந்தச் சட்டமன்றத்திலே இந்த ஆண்டு வைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் விடுக்கிறேன்.

தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு, அவர்களுடைய குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குவது நல்ல



2007 மார்ச் 26] [திரு. சு. குணசேகரன்]

நடவடிக்கை. அதில் புதுக்கவிதையின் நாயகனாக விளங்கிய, சிவகங்கையைச் சார்ந்த கவிஞர் மீராவின் நூல்களை அரசுடைமையாக்கிச் சிறப்புச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களில் பனைத் தொழிலைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் காலங்காலமாகச் செய்து வருகிறார்கள். அந்தத் தொழில் நசிந்து, அந்த மக்கள் கடும் நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுடைய வாழ்வு பாதுகாக்கப்படும் வகையில், பனைப் பொருட்கள் உற்பத்தி, விற்பனை என்ற அடிப்படையில் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

எனது தொகுதியிலும், இளையான்குடி தொகுதியிலும், காவல் துறையினர் கள் இறக்குவதைத் தடுக்கிறோம் என்று சொல்லி, ஒட்டுமொத்தமாகப் பனைகளிலுள்ள பாளைகளை வெட்டி, வீடுகளில் புகுந்து மிரட்டுவது என்ற கடுமையான நெருக்கடிக்கு அந்த மக்களை ஆளாக்குகிறார்கள். அதன்மூலம் அந்த மக்கள் எந்தத் தொழிலும் செய்ய முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட போக்குகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிவகங்கைத் தொகுதியில் காட்டாண்டிகுளம் என்ற கிராமத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஆடு மேய்க்கச் சென்ற செல்லம்மாள் என்ற ஆதி திராவிடப் பெண்மணி கொலை செய்யப்பட்டிருக்கிறார். கொலையாளி யாரென்று இன்னும் கண்டுபிடிக்க முடியாத ஒரு சூழ்நிலை நிலவிக்கொண்டிருக்கிறது. உடனடியாக அந்தக் கொலையாளியைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சாதாரண விவசாயத் தொழிலாளியாக இருக்கிற அந்தக் குடும்பத்திற்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை. எனவே, நமது முதல்வர் அவர்கள் அந்தக் குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் முழுமையாகச் செயல்படுவதைக் கண்காணிக்க, மாநில அளவில் முதல்வர் தலைமையிலே அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள்கொண்ட குழு அமைப்பது வரவேற்கத்தக்கது. அதே சமயம், திட்டங்களைப் பற்றி முழுமையாக ஆய்வு செய்வது, தொகுதி மட்டத்தில் உருவாக்கப்படுவது சிறப்பாக இருக்கும். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் உள்ளாட்சி

மற்றும் அதிகாரிகளைக்கொண்ட கண்காணிப்புக் குழுக்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிகாரப் பரவல் இருக்க வேண்டுமென்ற கருத்து எழுவது ஜனநாயகத்தில் சிறப்புக்குரியது. இப்பொழுதுகூட இந்த நிதிநிலை அறிக்கையிலே, நாமெல்லாம் மத்தியிலே இருக்கக்கூடிய அதிகாரம் மாநிலங்களுக்குக் கூடுதலாகக் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற கருத்தை மீண்டும் வலியுறுத்தியிருக்கிறோம்; அதையும் வரவேற்கிறோம். ஆனால், மாவட்ட அளவில் அனைத்து அதிகாரங்களும் மாவட்ட ஆட்சியரிடமே ஒப்படைக்கப்படுகிறது. தொகுதி அளவில் திட்டங்களை உருவாக்குவது, திட்டங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரங்களை வழங்க உறுதியான நடவடிக்கையை இந்த ஆட்சி எடுக்க வேண்டும்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த on-line வர்த்தகத்தைத் தடை செய்ய எடுக்கும் முயற்சி வரவேற்பிற்குரியது. இதை முழுமையாகச் செயல்படுத்திட மத்திய அரசை நமது சட்டமன்றம் வலியுறுத்த வேண்டும். அதேபோல, சிறு வணிகத்தில் அன்னிய கம்பெனிகள், Reliance போன்ற நிறுவனங்கள் ஈடுபடுவதை உறுதியாகத் தமிழகத்திலே தடுத்து நிறுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12-30

விவசாயத் துறை வளர்ச்சிக்குப் பல நல்ல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அதே வேளையில் விவசாயிகளிடம் அதிகத் தொடர்புடைய கூட்டுறவு அமைப்புகள், தொடக்க வேளாண் வங்கிகள் சிறப்பாகச் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். வைத்தியநாதன் கமிட்டி பரிந்துரைகளை அமல்படுத்துவதும், தொடக்க வேளாண்மை வங்கிகளை வலுவுள்ள அமைப்புகளாகச் செயல்பட வைப்பதும் அவசியமாகும். இன்றைக்கு மறு கடனுக்காகத் தொடக்க வேளாண்மை வங்கிகளுக்கு ஒரு குறிப்பிட்ட நிதியை வழங்கினாலும், விவசாயிகளுக்குப் பல்வேறுவிதங்களில் உதவியாக இருக்கிற L.D. Bank போன்ற அமைப்புகளுக்கு, தள்ளுபடி செய்யப்பட்ட நிதியை இதுவரை அவர்கள் வழங்காத ஒரு போக்கு நீடிக்கிறது. எனவே, அந்த வங்கிகளுக்கும் இழப்பீட்டு நிதியைக் கொடுத்து, அந்த வங்கிகளின்மூலமாக விவசாயிகளுக்கான கடனைக் கொடுப்பதற்கான





நிலையை உருவாக்க வேண்டும். விவசாயக் கடன்களுக்கான வட்டிக் குறைப்பு என்பது மிகச் சிறப்புக்குரிய, வரவேற்புக்குரிய திட்டமாகும் என்று இந்த நேரத்திலே நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை முழுமையாக விவசாயிகள் பயிரிடும் அனைத்துப் பயிர்களுக்கும் பயன்படுத்தும் திட்டமாக விஸ்தரிக்க வேண்டும். விவசாய விளைபொருட்களுக்கு இலாபகரமான விலை கிடைப்பதற்கான உறுதியான திட்டங்களை உருவாக்க வேண்டும். இந்தியா சந்தைப் பொருளாதார நாடாக மாற்றப்பட்டுள்ள நிலையில், உள்ளூர் விவசாய விளைபொருட்கள், அதேபோல மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் உருவாகும் உற்பத்திப் பொருட்கள், சிறு தொழில் புரிவோர்களுக்கான பொருட்கள், சர்வதேச, இந்திய அளவிலான சந்தை நிலவரங்களைத் தெரிந்துகொள்வதற்கு உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்காக கிராமப்புற அளவிலான அமைப்பை உருவாக்கித் தர வேண்டும். விவசாயிகளுக்குக் காலதாமதம் இல்லாமல் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை உறுதியாக எடுப்பதன்மூலமாக, கூடுதலாக விவசாயத் துறைக்கு முன்னுரிமை தருகிற ஒரு வாய்ப்பை நமது அரசு உருவாக்கித் தர வேண்டும்.

தமிழக மக்களுக்கு ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை பயில்வதற்கு அரசின் கல்விக் கட்டணம் இரத்து, அரசுக் கல்லூரிகளில் மாற்று முறை துவக்கப்பட்டு 30 ஆயிரம் மாணவர்களிலிருந்து 60 ஆயிரம் மாணவர்கள் என்ற விகிதத்தில் எண்ணிக்கையை உயர்த்தியது ஆகியவை சிறப்புக்குரியன. அதே நேரத்தில், புதிதாகப் பல்வேறு மாவட்டங்களில் அரசுக் கலைக் கல்லூரிகளை நிறுவுவதற்கான நடவடிக்கையையும் எடுக்க வேண்டும். அதேபோல, ஆசிரியர் பணியிடங்களைப் பூர்த்தி செய்வது எதிர்காலத் தமிழக வளர்ச்சிக்குப் பயனுள்ள நிலையை உருவாக்கி இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. துரை சந்திரசேகரன் தலைமை)

மருத்துவக் கல்லூரிகளை மாவட்டந்தோறும் கொண்டு வரும் இந்த அரசின் சிந்தனை சிறப்புக்குரியது. வளர்ந்து வரும் மக்கள் பெருக்கம், மக்களின் சுகாதாரத் தேவைக்கேற்ற பல திட்டங்களை நிறைவேற்றக் கூடுதல் மருத்துவர்கள் தேவை. எனவே, வரும் ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கைக்குக் கூடுதல் முன்னுரிமை அளித்து, அதிகமான மாவட்டங்களில் அவற்றை உருவாக்க வேண்டும்.

[திரு. சு. குணசேகரன்] [2007 மார்ச் 26

குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்தில் இந்த ஆண்டே மருத்துவக் கல்லூரியை சிவகங்கைத் தொகுதியிலே உருவாக்கித் தர வேண்டும் என்று நமது முதல்வரைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொகுதிச் சீரமைப்பு என்ற அடிப்படையில் நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகளை புதிதாக வரையறைப்படுத்தியிருப்பது மிகுந்த குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. புதிய தொகுதி வரையறைகள் பற்றிய விவரங்கள் தெளிவாக மக்களுக்குத் தெரிகிற வகையில் அவை அறிவிக்கப்பட வேண்டும். தற்போது கிடைக்கிற தகவல் அடிப்படையில் உள்ள தொகுதி வரையறைகள் பல சிக்கல்களை உருவாக்கும்; தமிழகத்தின் நிர்வாகத்திற்கும், வளர்ச்சிக்கும் பின்னடைவை உருவாக்கும். எனவே, புதிய ஆலோசனைக் குழுவை நியமித்து, தொகுதிகளை வரையறைப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

அதேபோல, இங்கே பூரண மதுவிலக்குக் கொள்கை பற்றி எல்லாம் விவாதிக்கப்பட்டது. பூரண மதுவிலக்கு வருகிறதா, இல்லையா என்பது அடுத்த கேள்வி. ஆனால், இன்றைக்குத் தமிழகத்தினுடைய வருவாயில் கிட்டத்தட்ட 6 ஆயிரம் கோடி ரூபாய் வரையில் வருவாய் ஈட்டிக் கொடுத்துக்கொண்டிருப்பது டாஸ்மாக் நிறுவனம். அந்த டாஸ்மாக் நிறுவனத்திலே வேலை பார்க்கிற ஊழியர்களுக்கு எந்தவிதமான பயன்களும், நலன்களும் அறிவிக்கப்படாதது ஏமாற்றம் தருகிறது. எனவே, இலாபத்தை ஈட்டித் தருகிற டாஸ்மாக் ஊழியர்களுக்குப் பணி நிரந்தரம், அதேபோல், அரசு ஊழியர்களுக்கான எல்லாச் சலுகைகளும் அவர்களுக்குக் கிடைக்கிற வாய்ப்பு, அரசு ஊழியர்கள் என்ற உயர்வினைக் கொடுப்பதற்கான நடவடிக்கை முதலானவற்றை எடுக்க வேண்டும்.

அதேபோல, தமிழகத்திலே 10 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடியிருக்கிறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகிற திட்டம், அது அறிவித்திருக்கிற வேகத்தோடு நிறுத்தப்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டம் உட்படப் பல்வேறு மாவட்டங்களில் அந்தத் திட்டம் இன்னும் சிறப்பான நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படாத ஒரு நிலையில், இன்னும் கால நீட்டிப்புக் கொடுத்து, எப்படித் தமிழகத்தினுடைய பல்வேறு திட்டங்கள் சிறப்பாக நடத்தப்படுகின்றனவோ, அதைப்போல வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகிற திட்டத்தையும் காலம் நிர்ணயித்து, விழாக்களின்மூலமாகப் பட்டாக்கள் வழங்குகிற திட்டத்தை முறையாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.



2007 மார்ச் 26]

பிற்பகல் 12–35

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தில் நான் பேசுவதற்கு முன்பாக, என் தொகுதியிலே நடைபெற்ற சில சம்பவங்களை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

கடந்த மாதத்தில் கூடலூரில் ஒரு மன நோயாளி, விதவைகள் தங்கியிருக்கின்ற வீடுகளைப் பார்த்து உள்ளே நுழைந்து, மூன்று விதவைகளைத் தாக்கி இருக்கின்றார். உருட்டுக் கட்டையால் தலையில் அடித்து, ஒரு விதவை அந்த இடத்திலேயே இறந்துவிட்டார். அவருடைய பெயர் கூத்தநாச்சி. மற்ற இரண்டு விதவைகள் சதுரகிரி மற்றும் சரஸ்வதி ஆகியோர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கூடலூர் நகரில் பீதியும், அச்சமும், பதற்றமும் நிலவுகின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அங்கே அதிகமான போலீஸ் பந்தோபஸ்தை ஏற்பாடு செய்து, இறந்தவரின் குடும்பத்திற்கு நிவாரண உதவியை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, கம்பம் தொகுதியில், 1980 ஆம் ஆண்டின் ஜனத்தொகை நிலவரப்படி, கம்பம் நகரில் 30,000 ஜனத்தொகை இருந்தது. இப்போது 65,000 மக்களுக்குமேல் வாழ்கின்றார்கள். அன்றைக்குக் கொடுத்திருந்த அந்தக் குழாய் இணைப்புகளின் அடிப்படையிலே இன்றைக்கும் தண்ணீர் வழங்குவதால், அதிலே பல சிக்கல்களை, சிரமங்களை மக்கள் அனுபவித்து வருகின்றார்கள். கடந்த ஒரு வார காலமாக அங்கே மறியல் போராட்டம் நடைபெற்று வருகிறது. பத்திரிகைகளில் எல்லாம் அந்தச் செய்தி வந்துள்ளது. அதை நான் பேரவைத் தலைவர் அவர்களிடம் தர இருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து, கம்பம் நகருக்கு அதிகமான தண்ணீர் கிடைக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, இராயப்பன்பட்டி கிராமத்தில் காட்டுப் பன்றிகள் புகுந்து, கிட்டத்தட்ட 5,000 வாழைகளை நாசப்படுத்தியுள்ளன. விவசாயிகள் ஏழ்மை நிலையில் இருக்கின்றார்கள். உடனடியாக

[திரு. நா. இராமகிருஷ்ணன்] [2007 மார்ச் 26

அவர்களுக்கும் நிவாரணம் தந்து, solar fencing அமைப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில், வேளாண்மையில் விஞ்ஞான முறையில் நவீன யுக்திகளைப் பயன்படுத்தினால் மட்டுமே அதிக வருவாயை ஈட்ட முடியும் என்று தெரிவித்திருக்கின்றார்கள். நவீன யுக்தி என்று சொன்னால், அது எந்த அர்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்று எங்களுக்குப் புரியவில்லை. இரசாயன உரத்தை அதிகமாகப் பயன்படுத்தியதனாலோ அல்லது பூச்சிப் பூஞ்சாள நோயைக் கட்டுப்படுத்த அதிகமாக நோய் மருந்தைப் பயன்படுத்தியதனாலோ அல்லது ஒட்டு வீரிய ரக விதைகளைப் பயன்படுத்தியதனாலோ, அதனால் பாதிப்புக்குண்டான விவசாயிகள் இன்றைக்கு ஏராளமாக இருக்கின்றார்கள். மண் வளம் கெட்டு இருக்கின்றது. சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டிருக்கின்றது. உடல் வளம் கெட்டு இருக்கின்றது. மேலும் இதை நீங்கள் ஊக்கப்படுத்தக் கூடாது. இந்தியாவைப் பொறுத்தவரையில், உலக நாடுகளைப் பொறுத்தவரையில், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக இயற்கையாகக் கிடைத்த இடுபொருட்களை விவசாயத்திற்கு இட்டு அதிக உற்பத்தியைச் செய்திருக்கின்றார்கள். இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்திய இரசாயனப் பொருட்களை விவசாயத்திற்குப் பயன்படுத்தி, அன்றைக்கு ஐரோப்பிய நாடுகள் அதிகமான உணவு உற்பத்தியை ஈட்டின. ஆனால், பின் வருங்காலங்களில் அது மண் வளத்திற்குக் கெடுதல் என்பதனை உணர்ந்த பிறகு, ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான்போன்ற நாடுகள் எல்லாம் இன்றைக்கு இயற்கை விவசாயத்திற்குத் திரும்பி வந்திருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கின்ற வகையில், இரசாயன உரத்தை அறவே ஒழிக்கின்ற வகையிலே இந்த அரசு உரிய திட்டத்தைத் தீட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-40

அதைப்போல, கடந்த ஆண்டு விவசாயிகளுக்காக சுமார் 7,000 கோடி ரூபாய் கடன் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றது. ஒழுங்காக, முறையாகப் பயிர்க் கடன்களைத் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு எந்தச் சன்மானத்தையும் இந்த அரசு வழங்கவில்லை. மாறாக, இந்த ஆண்டு கூட்டுறவுக் கடன்களை ஒழுங்காகத் திருப்பிச்



2007 மார்ச் 26] [திரு. நா. இராமகிருஷ்ணன்]

செலுத்துபவர்களுக்கு 7 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக, இரண்டு சதவிகிதம் குறைத்து வட்டியைத் தரலாம் என்று தெரிவித்திருக்கின்றது. நான் கேட்பதெல்லாம், கடந்த ஆண்டு பயிர்க் கடன்களை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு நீங்கள் ஊக்கம் அளிக்க வேண்டும். அந்த வகையிலே, கடந்த ஆண்டு முறையாகச் செலுத்திய அந்த விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடனைத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, கால்நடைகள். கால்நடை என்பது விவசாயிகளுக்குத் தோழன். பால் உற்பத்தியைத் தருவதும் கால்நடைகள்தான். இன்றைக்கு எங்கே கால்நடைகள் இருக்கின்றன? தேனி மாவட்டத்திலே 5 இலட்சம் கால்நடைகள் இருந்தன. இப்பொழுது வெறும் 10,000 கால்நடைகள்கூட அங்கே கிடையாது. காரணம், தீவனம் கிடையாது. உலர் தீவனம் கிடைப்பது அரிதாகிவிட்டது. வைக்கோலைக் கேரளாவிலுள்ள பேப்பர் தயாரிக்கும் மில்களுக்குக் கொண்டு செல்கின்றார்கள். அந்த பச்சைத் தீவனம், கூபா புல், நேப்பியர் புல் போன்ற புல் இனங்களே இன்றைக்கு அழிந்துவிட்டன. அதைப்போல, மாட்டுத் தீவனம். கம்பு விலை உயர்ந்திருக்கின்றது. சோளம் விலை உயர்ந்திருக்கின்றது. மக்காச்சோளம் விலை உயர்ந்திருக்கின்றது. பருத்தி விலை உயர்ந்திருக்கின்றது. புண்ணாக்கு விலை உயர்ந்திருக்கின்றது. இந்த நேரத்தில், இல்லாத மாடுகளை வைத்து எப்படி நீங்கள் பால் உற்பத்தியைச் செய்ய முடியும்? நீங்கள் பால் உற்பத்திக்காகக் குளிர்பதனச் சாதனங்கள் அமைப்பதாகவும், அதே நேரத்திலே, துருப்பிடிக்காத எஃகுக் கலன்கள் அமைப்பதாகவும் இங்கே தெரிவித்திருக்கின்றீர்கள். பால் உற்பத்தியைப் பெருக்க நீங்கள் செய்ய வேண்டிய கடமை என்னவென்று சொன்னால், வீட்டிற்கு ஒரு மரம் என்று சொல்வதைப்போல, வீட்டிற்கு ஒரு கால்நடையை வளர்க்க வேண்டும் என்ற அந்த நிலைக்குத் தமிழ்நாடு வந்தால்தான் இந்தத் திட்டம் உருப்படியாகும் என்பதனை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு மின்சாரத் தேவை நமக்கு அதிகமாக இருக்கின்றது. மின்சாரத் தேவைக்காகத் தமிழ்நாட்டிலே அணு மின் நிலையம் தொடங்கப்படுவது பேராபத்தாக முடியும். மத்திய அரசு 27,000 கோடி ரூபாயில் 14,000 மெகாவாட் திறனுள்ள நான்கு அணு மின் நிலையங்களைத் தமிழ்நாட்டில் தொடங்கப் போவதாக இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒன்றைத்

[திரு. நா. இராமகிருஷ்ணன்] [2007 மார்ச் 26

தெரிவித்துக்கொள்கின்றேன். ஏற்கெனவே கூடன்குளம் மின் நிலையம் கட்டப்பட இருக்கின்றபொழுது, அப்பொழுது நில அதிர்வு ஏற்பட்டாலோ அல்லது பூகம்பம் ஏற்பட்டாலோ அல்லது கசிவு ஏற்பட்டாலோ தென் மாவட்டங்களுக்கு முழுவதுமாக ஆபத்து ஏற்படும். அதைப்போல, கடலோரப் பகுதிகளிலும் ஆபத்து ஏற்படும் என்று அன்றைக்கே பல வல்லுநர்கள் சொன்னார்கள். ஆகவே, இதையெல்லாம் கருத்தில்கொண்டு, அதைக் கைவிட வேண்டும். ரஷ்யாவிலேகூட செர்னோபில் என்ற இடத்திலும், அமெரிக்காவிலே Three mile Island என்ற இடத்திலும்கூட கட்டப்பட்ட அந்த அணு மின் நிலையங்களை மூடியிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, தொலைநோக்குப் பார்வையோடு அந்தத் திட்டத்தை இந்த அரசு கைவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. அதே நேரத்திலே, மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அம்மா அவர்களும், வைகோ அவர்களும் சில கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார்கள். நடுவர் மன்றம் தீர்ப்புத் தெரிவித்து 50 நாட்கள் ஆகியும்கூட, இன்னும் தமிழக அரசு தன்னுடைய பாதக நிலைமைகளைக் களைவதற்காக நடுவர் மன்றத்திற்கு மேல்முறையீடு செய்யவில்லை என்று சொல்லியும், நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டுமென்று சொல்லியும், அதைப்போல, நடுவர் மன்றத் தீர்ப்பை முற்றிலுமாகக் கர்நாடகா புறக்கணித்த பின்பும் ஏன் இன்னும் தமிழ்நாடு உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை என்ற கருத்தையும் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்குத் தமிழக முதல்வர், உச்ச நீதிமன்றத் தலைமை வழக்கறிஞர் கே. பராசரன் மற்றும் பி.பி. ராவ் ஆகியோருடைய கருத்துகளைக் கேட்டு, சில விளக்கங்களைத் தந்திருக்கின்றார்கள். அதாவது, காவிரி நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கி, 90 நாட்களுக்குள் அரசிதழில் வெளியிட முடியாது என்றும், அதைப்போல, பன்மாநில நதி நீர்ச் சட்டப்படி, நடுவண் அரசு அதை ஏற்றுக்கொள்ளாது என்றும், மே 4 ஆம் தேதி வரைக்கும் சம்பந்தப்பட்ட இரண்டு மாநிலங்களிலிருந்து மேல்முறையீடு வராவிட்டால், அது மத்திய அரசால் வெளியிடப்படும் என்றும், ஒரு வேளை appeal செய்தால், மேல்முறையீடு செய்தால், அந்த நடுவர் மன்றம் தீர்ப்புத் தருகின்ற வரைக்கும் பொறுத்திருக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். எனக்கு எழுகின்ற சந்தேகங்களெல்லாம் இவைதான். நடுவர் மன்றம் முடிவெடுக்கும் வரை நாம் காத்திருக்க



2007 மார்ச் 26] [திரு. நா. இராமகிருஷ்ணன்]

வேண்டும் என்றால், நமக்குள் எழும் சந்தேகங்களை இந்த அரசு விளக்க வேண்டுமல்லவா? காவிரி நடுவர் மன்றம் முடிவெடுக்கும் வரை நாம் காத்திருக்க வேண்டுமென்று சொன்னால், காவிரி டெல்டா பகுதியில் குறுவைச் சாகுபடி செய்ய ஜூனில் தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும். தண்ணீர் இடைக்காலத் தீர்ப்பின் அடிப்படையிலா அல்லது இறுதித் தீர்ப்பின் அடிப்படையிலா திறந்து விடப்படும்? குறுவைப் பயிருக்குத் தண்ணீர் கிடைக்க இந்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

*பிற்பகல் 12-45*

இரண்டாவதாக, காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பைக் கர்நாடகம் முற்றிலும் நிராகரித்துவிட்டது. அம்மாநிலம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது. இந்த நிலையில், எந்த அடிப்படையில் கர்நாடகம் நமக்குத் தண்ணீர் திறந்துவிடப் போகின்றது?

மூன்றாவதாக, இறுதித் தீர்ப்பில் முடிவெடுக்கும் வரை இடைக்காலத் தீர்ப்பு நடைமுறையில் இருக்குமா? இடைக்காலத் தீர்ப்பின்படி தண்ணீர் விடவேண்டுமென்று சொன்னால், இந்த ஆண்டு 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும். கர்நாடகம் திறந்துவிடுமா? இறுதித் தீர்ப்பை ஏற்கவில்லையென்று சொன்னால், கர்நாடகம் எவ்வளவு தண்ணீர் கொடுக்கும்?

நான்காவதாக, உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை ஏதும் விதிக்காத நிலையில், நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பைத் தெரிவிக்கின்ற காலம் வரையில் அந்த இடைப்பட்ட காலத்தில் கர்நாடகம் தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் தர வேண்டுமெனக் கர்நாடகத்தை உச்ச நீதிமன்றம் நிர்ப்பந்திக்குமா அல்லது நடுவர் மன்றம் நிர்ப்பந்திக்குமா அல்லது மத்திய அரசு நிர்ப்பந்திக்குமா என்பனபோன்ற சந்தேகங்களை இந்த அரசு விளக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பெரியாறு அணைப் பிரச்சினை ...

(குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்திற்கு நான் ஒட்டுமொத்தமாகப் பதில் சொல்ல விரும்புகின்றேன். காவிரி நடுவர் மன்றம் தீர்ப்புரைத்திருக்கிறது. Inter-State Water Disputes Act, 1956 என்று ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின்

அடிப்படையில்தான் இந்தத் தீர்ப்பை நாம் அணுக வேண்டும். தீர்ப்புரைக்கப்பட்ட பிறகு 90 நாட்கள் அவகாசம் கொடுக்கிறது நடுவர் மன்றம். அதற்குள்ளாக சம்பந்தப்பட்ட மாநிலங்கள், தங்களுக்கு ஏற்படுகின்ற ஐயங்களை, explanation and guidance, எது தேவையோ, அதற்கு நடுவர் மன்றத்தை அணுகலாம். அதற்குப் பிறகு நாம் விடுக்கின்ற அந்தக் கோரிக்கைகளை, ஐயங்களுக்கேற்ப அவர்கள் பதில்ளித்த பிறகு சில திருத்தங்களை வேண்டுமானால்—தேவைப்பட்டால் சிறு, சிறு திருத்தங்களைச் செய்து ஒரு இறுதி அறிக்கையை மத்திய அரசுக்கு அது அனுப்பும். அந்த அறிக்கையின்மீதுதான் மத்திய அரசு Notification செய்யும் என்று அந்தச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இப்பொழுது நமக்கு இன்னும் 90 நாட்கள் ஆகவில்லை. நமக்குத் தேவையான explanation and guidance பற்றி அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி வழக்கறிஞர்களுடனும், பொறியாளர்களுடனும் விவாதித்து, அந்த நடுவர் மன்றத்தை அணுகுவதற்கு, அதற்கு வேண்டிய points–களை gather பண்ணிக்கொண்டு, நாம் தயார் செய்து வைத்திருக்கிறோம். அதற்குப் பிறகுதான் நடுவர் மன்றம் ஒரு அறிக்கை அனுப்பி, notification கொடுக்கும். ஆனால், இந்த நிலையில் உச்ச நீதிமன்றத்திற்கு ஏன் போகவில்லை என்கிறார்கள். உச்ச நீதிமன்றத்திற்கு எந்த அடிப்படையில் போவது? காரணம், உச்ச நீதிமன்றத்திற்குப் போனால்கூட உச்ச நீதிமன்றம் என்ன சொல்லுமென்றால்—பல வழக்கறிஞர் நண்பர்கள் இங்கு இருக்கிறார்கள்—Further remedy should be exhausted என்பார்கள். அதாவது, உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது, உச்ச நீதிமன்றத்தில் நீங்கள் வந்து சொல்லுகிற இந்தக் கருத்துகளைச் சொல்வதற்கு நடுவர் மன்றத்திலேயே உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அங்கேயே நீங்கள் தெளிவுபெற்றிருக்கலாம் என்று மறுபடியும் உச்ச நீதிமன்றம் திருப்பி இங்கேதான் அனுப்பும். ஆகையினால், உச்ச நீதிமன்றத்திற்குப் போகக் கூடாது என்பது அல்ல.

கர்நாடகம் போகிறதே என்று கேட்டால், கர்நாடகம் 'போவோம்' என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உங்களைவிட மிக உன்னிப்பாக, கர்நாடகம் என்ன செய்கிறது என்று ஒவ்வொரு வினாடியும் நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்தத் தீர்ப்பை முழுக்க அவர்கள் புறக்கணிக்கவில்லை. அவர்களும் நடுவர் மன்றத்தை நாடுகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நடுவர் மன்றத்திலும் நாங்கள் explanation கேட்போம் என்கிறார்கள்; உச்ச நீதிமன்றத்திற்கும் போவோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், மத்திய அரசு notification செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சுருக்கமாகச்





சொன்னால், கர்நாடகம், அவர்களையும் குழப்பி, மற்றவர்களையும் குழப்பிக்கொண்டிருக்கிறது. நாம் தெளிவாக இருக்கிறோம். நமக்கு ஏற்படுகின்ற ஐயங்களுக்கு Inter-State Water Disputes Act-ன் 5 (3)-ன் அடிப்படையில் நாம் நடுவர் மன்றத்தை அணுகுவோம்.

அதற்குப் பிறகு கர்நாடகா கொடுத்தாலும் சரி அல்லது பாண்டிச்சேரி கொடுத்தாலும் சரி, கேரளா கொடுத்தாலும் சரி, மத்திய அரசே கொடுத்தாலும் சரி, இது குறித்து ஒரு முடிவு எடுத்து மத்திய அரசுக்கு நடுவர் மன்றம் அனுப்பிய பிறகுதான் மத்திய அரசை நாம் Notification கேட்க வேண்டும். ஆனால், தேவைப்பட்டால், ஒருக்கால் உச்ச நீதிமன்றத்திற்கு அவர்கள் போனால் என்ன செய்வீர்கள் என்று கேட்டால், அவர்கள் என்ன நிலையில் அணுகுகிறார்கள் என்று பார்த்து, அந்த வழக்கையும் உச்ச நீதிமன்றத்திலே தேவையென்றால் தமிழக அரசு சந்திக்கும்.

பிற்பகல் 12–50

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைத் தந்தார்கள். 90 நாட்களுக்குள் அப்பீல் பண்ணும், அப்பீல் பண்ணுகிறோம். கர்நாடகமும் அப்பீல் பண்ணுகிறோம். அப்பீல் நடுவர் மன்றத்திற்கு. நாமும் அப்பீல் பண்ணுகிறோம். தருகின்ற வரைக்கும் பண்ணிய பிறகு, அது இறுதித் தீர்ப்பைத் தருகின்ற வரைக்கும் நாம் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டும் இல்லையா? பொறுத்துக்கொண்டிருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணனுக்கு என்ன சந்தேகம் என்றால், நாம் நடுவர் மன்றத்திற்குப் போகிறோம்; அவர்கள் 90 நாள் வரையிலும் காத்திருந்து கடைசியாக—இந்த டெண்டர் விட்டால் போடுவார்களே, நாம் எப்போது கொடுத்தாலும் சரி, 3 மணிக்குத்தான் டெண்டர் close பண்ணுவார்கள்; அது மாதிரி—90 நாள் ஆன பிறகுதான் அதை close பண்ணுவார்கள். அதற்குப் பிறகு அவர்கள் decision எடுப்பதற்கு, நாம் சொன்ன argument–ஐ அவர்கள் மறுப்பார்கள். அவர்கள் சொன்ன argument–ஐ நாம் மறுப்போம். அங்கு மறுபடி வக்கீல்களின் வாதம் நடக்கும். அதற்குமேல் இறுதித் தீர்ப்பை அனுப்பி, அதற்குப் பிறகு Notification வந்து, அதற்குப் பிறகு implementation வந்து, எப்போது

காவிரிக்குத் தண்ணீர் வரும் என்று கேட்கிறீர்கள். அதனால்தான் மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். தற்போது அளித்திருக்கிற நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு முடிவு தெரிந்து, implementation வருகிற வரையில், இடைக்காலத் தீர்ப்பு அமலில் இருக்கும் என்று சொல்கிறார். அந்த இடைக்கால தீர்ப்புப்படி நமக்கு 205 டி.எம்.சி. வரும். அந்த 205 டி.எம்.சி.யில் எவ்வளவு வரும் என்பதை நாமும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களும் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்னும் சொல்லப் போனால், அந்தத் தீர்ப்பைக்கூட முழுக்க மதிக்கவில்லை கர்நாடக அரசு. மழை வந்தால் 205 டி.எம்.சி. விடுவார்கள். இல்லையென்றால் விடமாட்டார்கள். இருந்தாலும் நாம் பெற்றுக்கொண்டிருக்கின்றோம். குறுவைக்குத் தண்ணீர்பெற வேண்டிய வழிகளை Interim order அமலில் இருந்தால் எப்படி இந்த அரசு முயற்சிக்குமோ, அதே பாணியில் இந்தக் குறுவைக்கும் முயற்சிக்கும். குறுவைக்கு நம்மிடத்திலே இப்போது தண்ணீர் இருக்கிறது.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** அதேபோல, பெரியாறு அணை விஷயத்தில் மாண்புமிகு திரு. அச்சுதானந்தன் அவர்கள், அணை உடைந்துவிடுகின்ற அபாயத்தில் இருக்கிறது என்று சொல்லி, தமிழ்நாட்டுப் பத்திரிகையிலே விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். அணை பலமாகத்தான் இருக்கின்றது; பாதுகாப்பாக இருக்கின்றது என்கிற பல சரித்திர உண்மைகளைச் சொல்லி நாம் ஏன் அங்கே கேரளாவில் விளம்பரப்படுத்தக் கூடாது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நாமும் பண்ணியிருக்கிறோம். நாமும் அவர்கள் ஊரிலே பண்ணியிருக்கிறோம். பத்திரிகைக்காரர்கள் யார் கொடுத்தாலும் போடுவார்கள். அவர்களுக்குத் தேவை விளம்பரம். (குறுக்கீடு) நாமும் அங்கே கொடுத்திருக்கிறோம்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு திரு. அச்சுதானந்தன் பத்திரிகையில் விளம்பரம் தருகிறார்கள். தமிழர்கள் ஆயிரக்கணக்கில் அங்கே வாழ்கின்றனர். ஏன் தமிழ்நாடு அரசு விளம்பரம் கொடுக்கவில்லை? அணை பலமாகத்தானே இருக்கிறது என்று கேட்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சரே சொல்லியிருக்கிறார், பூகம்பம் வந்தாலும் அணை உடையாது என்று. T.K. Mittal Committee, S.S. Barar Committee, S.S. Roy Committee–களே சொல்லியிருக்கின்றனவே, பூகம்பமே வந்தாலும் அணை உடையாது என்று. அதையெல்லாம் தெளிவுபடுத்தி நீங்கள் விளம்பரமாகவே கேரளப் பத்திரிகைகளில் வெளியிடலாம். பாலாறு விஷயத்திலேயும். . .



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவர்களுக்குச் சொல்கிறேன். நாம்தான் முதலிலே கொடுத்தோம். விளம்பரம் கொடுத்திருக்கிறோம். அதற்குப் பிறகுதான் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** பாலாறு விஷயத்திலேகூட நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், 15 ஆண்டுகள் ஆனாலும்கூடத் தண்ணீர் வராது என்று சொல்லியிருக்கிறார். எந்த அர்த்தத்தில் சொல்லியிருக்கிறார் என்பது எனக்கு விளங்கவில்லை. பத்திரிகையிலே, செய்தியிலே பார்த்தேன். ஊடகங்களிலேயும் பார்த்தேன். ஒரு வேளை இப்படிச் சொல்லியிருக்கலாம் என்று கருதுகிறேன். கர்நாடகாவிலே பேத்தமங்களம் என்ற இடத்திலே ஓர் அணை கட்டியிருக்கிறார்கள். சந்திரபாபு நாயுடு 35 துணைத் தடுப்பு அணைகள் கட்டியிருக்கிறார்கள். 7 ஏரிகள் கட்டியிருக்கிறார்கள். இப்போது குப்பத்திலே, கணேசபுரத்திலே ரூ.100 கோடிக்கு மேலே ஒரு அணையைக் கட்டி, குப்பம், விஜிலாபுரம் பகுதிகளுக்கு எல்லாம் தண்ணீர் கொண்டு போகிறார்கள். அங்கே எல்லாம் கொண்டு போன பிறகு தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் வராது என்ற அர்த்தத்திலே சொன்னாரா? இல்லையென்றால், கட்டப் போகிற அணையை, நீங்கள் முயற்சி செய்து அதனைத் தடை செய்வதற்குண்டான முயற்சியில் ஈடுபடப் போகிறீர்களா என்பதைப் பாலாறு விஷயத்தில் அறிய விரும்புகின்றேன். மின்சாரத் துறை அமைச்சர் சொல்லியிருக்கிறார். 15 ஆண்டுகளானாலும் அங்கே தண்ணீர் வராது என்று சொல்லியிருக்கிறார் (குறுக்கீடு) பாலாற்றிலிருந்து தமிழ்நாட்டிற்கு . . .

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பாலாற்றுக்குத் தண்ணீர் வராது என்று சொல்லியிருக்கமாட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலாற்றைப் பற்றிப் பேசுவதற்கு மிகவும் நன்றி. ஏனென்று கேட்டால், அது எங்களுடைய வாழ்வுப் பிரச்சினை. இந்தப் பிரச்சினை குறித்து, பாலாற்றிலே அணை கட்டுகிறார்கள் என்று சொன்னவுடனேயே நானும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் இந்த அவையிலே பேசியிருக்கிறோம். மற்ற நண்பர்களும் பேசியிருக்கிறார்கள். அன்றைக்கு நாங்கள் ஆர்ப்பாட்டம் எல்லாம் நடத்தியிருக்கிறோம். அதே நிலையில் இருந்து இன்னும் இந்த அரசு மாறவில்லை. நானும் மாறவில்லை. எனவே, இது குறித்து ஆந்திர அரசோடு பேசியிருக்கிறோம். தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறது. ஆந்திர

[திரு. துரைமுருகன்] [2007 மார்ச் 26

முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். கலைஞர் அவர்கள் நேரடியாகவே அவரோடு பேசினார்கள். எனவே, 1891 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி நமக்குப் பாலாற்றுத் தண்ணீர் வருகிறது. அவர்கள் எதைக் கட்ட வேண்டுமென்றாலும், நம்மைக் கேட்டுக்கொண்டுதான் கட்ட வேண்டும். ஆகையினாலே, சுற்றுச்சூழல் clearance-க்கு அனுப்ப வேண்டும். இவ்வளவு நியதி இருக்கிறது. ஆதலால், பத்திரிகையிலே ஏற்படுகிற பரபரப்புதான் பெரிய பரபரப்பு. கொஞ்சம் நாம் தணிந்து இருக்க வேண்டும். இந்தப் பிரச்சினை அண்டை மாநிலத்தோடு இருக்கின்ற காரணத்தினால், சுமுகமாக முடித்து, இன்னும் குறிப்பாக, சிறப்பாக, காஞ்சிபுரம், வேலூர் போன்ற மாவட்டங்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் இந்த அரசு மிகக் கவனமாக இருக்கிறது. பெரியாறு அணையிலிருந்து பாலாற்றுக்கு இராமகிருஷ்ணன் காட்டுகிற அந்தப் பரிவுக்கு நன்றி.

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** முடித்துவிடுகிறேன். நதிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும். அதோடு, பல்வேறு கோயில்களைச் சீரமைப்பதற்காக 10 கோடி ரூபாய் செலவிலே இந்த அரசு திட்டம் கொண்டு வந்திருக்கிறது. 8–வது நூற்றாண்டு, 10–வது நூற்றாண்டிலே சோழர் காலத்திலே கட்டப்பட்ட கோயில்தான் உத்தமபாளையத்திலே, கூடலூருக்குமேலே இருக்கிற அந்த மங்களதேவிக் கோட்டம், கண்ணகிக் கோட்டம்.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்"

என்கிறது சிலப்பதிகாரம். இளங்கோவடிகளின் கண்ணகி தெய்வமாக வீற்றிருக்கிற அந்த மங்களதேவி கோயிலைச் சீரமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டுகோள் வைத்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி.



2007 மார்ச் 26]

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் 2007–2008 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை அவைமுன் வைத்து ஆற்றிய உரையைப் பாராட்டியும், ஆதரித்தும் இப்பேரவைமுன் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, என் உரையைத் துவக்குகிறேன். தனது 83 ஆண்டு கால வாழ்க்கை ஓட்டத்தில், 16 வயதினிலே பொது வாழ்க்கையில் தன்னை இணைத்துக்கொண்டதன் காரணமாக, 67 ஆண்டு காலப் பொது வாழ்க்கை, 1957 முதல் 2007 வரையிலான 50 ஆண்டு காலத்தில் நடைபெற்ற அனைத்துச் சட்டமன்றத் தேர்தல்களிலும் வெற்றிபெற்று, அனைத்துச் சட்டமன்றத் தேர்தல்களிலும் தோல்வி கண்டிராத ஒரே முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களால் வழங்கப்பட்ட, கடந்த ஆட்சியில் வழங்கப்பட்ட வறண்டு போன புள்ளிவிவரங்களை மட்டும் உள்ளடக்கிய வட்டிக் கடைக்காரன் புத்தகம்போல் அல்லாமல், முழுமையான சமூக நீதியைக் குறிக்கோளாகக்கொண்ட, சமூக நீதித் திட்டங்களைக்கொண்ட நிறைவான ஒரு வரவு–செலவுத் திட்டத்தை அளித்து இருப்பது அனைவராலும் பாராட்டக்கூடிய ஒன்று.

இன்றைக்குக் கல்வித் துறையில் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வியை வழங்கி இருக்கிறார்கள். இராஜாஜி காலத்திலே, நிதி இல்லாததால் ஆரம்பப் பள்ளிகள் மூடப்படும் என்று சொன்ன காலம் மாறி, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அனைவருக்கும் கல்வியைத் தந்து, ஆரம்பக் கல்வியை இலவசமாக வழங்கினார். இன்றைக்கு சத்துணவுத் திட்டம், இலவசமாக முட்டை வழங்குகின்ற திட்டம், பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வித் திட்டம் ஆகியவற்றை வழங்கிய ஒரே மாநிலமாகத், தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆளுகின்ற இந்த மாநிலம்தான் கல்வித் துறையிலே புதிய சகாப்தத்தை இன்றைக்கு நிறைவேற்றிக் காட்டி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அகில இந்தியாவிலேயே கல்வித் துறையில் வளர்ச்சிபெற்ற மாநிலமாக, கேரளாவை முந்துகின்ற வகையிலே தமிழகம் உயர்ந்துகொண்டு இருக்கிறது என்றால், தலைவர் கலைஞர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே கொண்டு வந்திருக்கின்ற

[திரு. கு. பிச்சாண்டி] [2007 மார்ச் 26

மாணவர்களுக்கான பல திட்டங்களின்மூலமாகத்தான் இந்த நன்மைகள் கிடைத்திருக்கின்றன.

பாரதி பாடினான், 'காணி நிலம் வேண்டும் பராசக்தி' என்று. ஆனால், காணி நிலம் கிடைத்ததா என்றால், அந்தப் பராசக்தியால்கூட கொடுக்க முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்காக 2 ஏக்கர் நிலத்தை வழங்கி 77 ஆயிரம் ஏக்கர் நிலம் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்றால், பராசக்தி படத்திற்குக் கதை வசனம் எழுதிய தலைவர் கலைஞர் அவர்களால் இன்றைக்கு அதை நடத்திக் காட்ட முடிந்திருக்கிறது என்பதை நாட்டு மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பொது விநியோகத் திட்டம். விலைவாசி உயர்வு வருகிறது என்றவுடன், தலைவர் கலைஞர் அவர்கள் on-line trading-ஐத் தடுத்தார்கள். அதேபோல, இன்றைக்குப் பொது விநியோகத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவோம் என்று சொன்னவுடன், இந்தியாவிலேயே விலைவாசிகள் குறைந்து போய் இருக்கின்ற மாநிலமாகத் தமிழ்நாடு மாறி இருக்கிறது என்றால், அது கலைஞர் அவர்கள் எடுத்த அந்த நடவடிக்கையின் காரணமாகத்தான்.

அதேபோல, சத்துணவிலே முதலிலே ஆட்சியிலே இருந்தபோது ஒரு முட்டை, சென்ற ஆண்டு மேலும் ஒரு முட்டை, இப்போது மூன்று முட்டைகளை வழங்க இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை நாங்கள் மட்டும் பாராட்டவில்லை; அருகில் இருக்கின்ற கர்நாடக மாநிலம் இன்றைக்கு அங்கே இருக்கின்ற பள்ளிக் குழந்தைகளுக்கெல்லாம் முட்டை வழங்குகிறது என்றால், எந்த ஒரு முத்தான திட்டத்தைக் கலைஞர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள் என்பதை அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோல, தலைவர் கலைஞருடைய ஆட்சிதான் விவசாயிகளுக்குப் பொற்கால ஆட்சியாக விளங்கிக்கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்குத் தலைவர் கலைஞர்தான் இலவச மின்சாரம் வழங்கினார்கள். 7,000 கோடி ரூபாய் அளவிற்குக் கூட்டுறவுக் கடன்களை இரத்துச் செய்தார்கள். வேறு எந்த மாநிலத்திலாவது 7,000 கோடி ரூபாய் அளவிற்குக் கூட்டுறவுக் கடன் இரத்துச் செய்யப்பட்டதா என்றால், இல்லை. இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் 7,000 கோடி ரூபாய்



2007 மார்ச் 26] [திரு. கு. பிச்சாண்டி]

அளவிற்குக் கூட்டுறவுக் கடன்களை கலைஞர் இரத்துச் செய்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு மாநிலங்களிலே ஆளுகின்ற முதல்வர்களால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. ஒரு மிகச் சிறப்பான திட்டம், விவசாயிகளுடைய உற்ற தோழனாக, இன்றைக்கு விவசாயிகளுக்குத் தண்ணீரைப் பாதுகாத்து வழங்குகின்ற வகையிலே, 104 கோடி ரூபாயில் 1,30,100 ஏக்கர் பயனடையக்கூடிய அளவுக்கு விவசாயத்திலே நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். வேளாண்மையிலே இன்றைக்கு ஒரு புரட்சி உருவாகி இருக்கிறது என்றால், இரண்டாவது பசுமைப் புரட்சியைத் தமிழகத்திலே உருவாக்கியவர் தலைவர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் காரணமாகத்தான் இன்றைக்கு விவசாயிகளுக்கான இத்தனை நன்மைகள் இந்த நாட்டிலே கிடைக்கின்றன. மற்ற எந்த மாநிலத்திலும் விவசாயிகளுக்கு இத்தனை சலுகைகள் கிடைத்தனவா என்றால், இல்லை. இப்படி அடுக்கடுக்கான திட்டங்கள்.

பிற்பகல் 1-00

தகவல் தொழில்நுட்பத் துறையிலே இன்றைக்கு வளர்ந்து இருக்கிற பெங்களூரு, ஐதராபாத்போன்ற நகரங்களைவிடத், தமிழகம் முன்னேற வேண்டுமென்று அவருடைய ஆட்சிக் காலத்திலே அவர் உருவாக்கிய Tidel Park இன்றைக்கு சிறுசேரிபோன்று பல பகுதிகளிலே விளங்கி, பெங்களூருக்கு இணையாக இன்றைக்கு வளர்ந்திருக்கிறது என்றால், தகவல் தொழில்நுட்பத்தில் தலைவர் கலைஞர் எடுத்த முயற்சிதான் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதியில் ஈடுபட்டு, தமிழகம் ஒரு சிறப்பான இடத்தை இந்தியாவிலே பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, தலைவர் கலைஞர் ஆட்சி செய்கின்ற காலங்கள். 50 ஆண்டு காலம் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார் என்றால், இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட அத்தனை சட்டங்களும், சிறப்பான திட்டங்களும் கலைஞர் ஆட்சிக் காலத்திலேதான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவே தவிர, வேறு ஆட்சிக் காலத்திலே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) குடிநீர் வாரியமாக இருந்தாலும் சரி, சுய மரியாதைத் திருமணச் சட்டமாக இருந்தாலும் சரி, புன்செய் நில வரி இரத்துத் திட்டமாக இருந்தாலும் சரி, இப்படி அனைத்துச் சட்டங்களையும் நிறைவேற்றிய ஒரு சிறந்த மாநிலமாக நம்முடைய மாநிலம் விளங்குகிறது என்றால், கலைஞர் ஆட்சியிலேதான் இத்தனைத்

[திரு. கு. பிச்சாண்டி] [2007 மார்ச் 26

திட்டங்களையும் இந்தத் தமிழகம் கண்டிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைக்குத் தமிழகத்திலே கட்டப்பட்டிருக்கிற அணைகள், கட்டப்பட்டிருக்கிற கல்லூரிகள், தொடங்கி இருக்கிற கல்லூரிகள், அவருடைய ஆட்சிக் காலத்திலே திறக்கப்பட்ட பள்ளிக்கூடங்கள், அவர் ஆட்சியிலே தொடங்கப்பட்ட உழவர் சந்தைகள், சமத்துவபுரங்கள், இப்படிப்பட்ட முத்தான திட்டங்கள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழகத்தை ஒரு முன்னோடி மாநிலமாக, இந்தியாவிலே இருக்கிற நான்கு முன்னோடி மாநிலங்களிலே ஒரு மாநிலமாக உயர்த்தியிருக்கிறது என்றால், அவர் 50 ஆண்டு காலமாக இந்தத் தமிழகத்திலே அவர் ஆட்சியிலே வழங்கி இருக்கிற நிதிநிலை அறிக்கைகளின்மூலமாக மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய திட்டங்களாகத்தான் விளங்கிக்கொண்டிருக்கின்றனவே தவிர, மற்றவர்களைப்போல பயனில்லாத திட்டங்களை அவர் வழங்கவில்லை.

கடந்த ஆட்சிக் காலத்திலே நாங்களெல்லாம் எதிர்க்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களாக இதே அவையிலே இருந்தோம். அப்போது என்ன நிலைமை? கஜானா காலி ஆகிவிட்டது. அதனால் அரசின் திட்டங்கள் எதையும் செயல்படுத்த முடியவில்லை என்று செல்லுமிடமெல்லாம் புலம்பலோ புலம்பல் என்று புலம்பி, அதனாலே அரசு ஊழியர்களுக்குச் சம்பளக் குறைப்பு, சலுகைகள் பறிப்பு, பணியிடங்கள் நிரப்பாமை, அரசுப் பணியிடங்களுக்கான தேர்வுகள் நடத்தாமை, நெசவாளர்கள், விவசாயிகள் என்று அனைத்துத் தரப்பு மக்களும் புறக்கணிப்புபோன்ற மக்கள் விரோதக் கொள்கைகளைக் கடந்த கால ஆட்சி மேற்கொண்டதை மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். ஆனால், அதே கஜானா கலைஞர் கையில் வரும்போது, அது அள்ள, அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரமாக மாறிவிட்ட அதிசயத்தையும் நம்மால் காண முடிகிறது. மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பர் சான்றோர். இன்றைக்கு அட்சயப் பாத்திரமாக இந்த நிதிநிலை அறிக்கை, ஆதி திராவிட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், அனைத்து மக்களுக்கும் பல திட்டங்களை வழங்கி இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்கள் கல்விக்காகவும், ஆதி திராவிட மக்களிலே சிறப்பாகப் படிக்கின்ற மாணவர்கள் சிறந்த பள்ளியிலே படிப்பதற்காகவும் இந்த நிதிநிலை அறிக்கையிலே திட்டத்தை வழங்கி இருக்கிறோம். சிறுபான்மை மக்கள், குறிப்பாக முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் ஆகியோர் நலனில் அக்கறைகொண்டிருக்கிற தலைவர் கலைஞருடைய ஆட்சி, மைனாரிட்டி மக்களுக்கான ஆட்சியாக இன்றைக்குப் பல நல்ல திட்டங்களை இந்த



2007 மார்ச் 26] [திரு. கு. பிச்சாண்டி]

மைனாரிட்டி மக்களுக்கு வழங்கி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களைப்போல மைனாரிட்டி மக்களைப் புறக்கணிக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் கலைஞருடைய ஆட்சி ஏழை மக்களுடைய நலனில் அக்கறைகொண்ட ஆட்சியாக இருக்கிற காரணத்தால்தான் விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டம் போன்றவையெல்லாம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு, அவர்களுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்திலே ஆற்றியிருக்கிற பணிகளைப்போல இந்தியாவிலே எந்தவொரு முதலமைச்சரும் ஆற்றாத அளவிற்கு, 5 முறை முதலமைச்சராக இருந்து தமிழகத்தை ஓர் உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள் என்பதை அனைத்துப் பத்திரிகைகளும் பாராட்டுகின்றன. அந்த அளவிற்கு அவர் சிறப்பாகத் தன்னுடைய பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். இங்கே பேசிய நம்முடைய உறுப்பினர்களெல்லாம் சொன்னதைப்போல, கலைஞருடைய ஆட்சி ஒரு பொற்கால ஆட்சியாக இன்றைக்கு நாட்டு மக்களுக்கான நல்ல திட்டங்களை வழங்கிக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–05

அதேபோல, என்னுடைய திருவண்ணாமலைத் தொகுதியிலே ஓர் அணை—நந்தன் கால்வாய்த் திட்டத்தில், சாத்தனூர் மேல்மட்டக் கால்வாயிலிருந்து ஒரு கால்வாய் வெட்டிச் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கைக்கு அண்ணன் துரைமுருகன் அவர்களால் முன்பு அறிவிக்கப்பட்டது. கடந்த ஆட்சி அதை நீக்கிவிட்டது. அதை மீண்டும் நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கோருகிறேன்.

அதேபோல, திருவண்ணாமலையில் ஒரு தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கை, ஏழை எளிய மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு, தொழிலாளர் வர்க்கத்திற்குத் தொடர்ந்து பல திட்டங்களை வழங்கக்கூடிய ஒரு சிறப்பான நிதிநிலை அறிக்கையாக, அள்ள, அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரமாக விளங்குகிறது. ஆனால், இதை சில கட்சித் தலைவர்கள், ஏதோ கோபுரத்திலிருந்து குப்பை மேட்டிற்குச் செல்லுகின்ற நிதிநிலை அறிக்கை என்று சொல்கிறார்கள். குப்பை மேட்டில் இருப்பவர்களையும் கோபுரத்திற்கு உயர்த்தக்கூடிய ஒரு

நிதிநிலை அறிக்கை இந்த நிதிநிலை அறிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி) இதைப்போல எந்தவொரு முதலமைச்சரும், நிதி அமைச்சரும் வழங்க முடியாத நிதிநிலை அறிக்கை என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட்மீதான இந்த விவாதத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கலந்துகொள்ள வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்கள் கட்சியின் தலைவர் பெரியவர் அய்யா சுதர்சனம் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக அரசு அளித்துள்ள இந்த அறிக்கையைக் கூர்ந்து கவனித்ததிலே, இவ்வறிக்கை தமிழகத்திலே இருக்கக்கூடிய ஒவ்வொரு குடிமகனின் வாழ்க்கையின் அங்கமாகத் திகழ்கின்றது என்பதை நாம் நன்றாக உணரலாம். குறிப்பாக, விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், மாணவர்களுக்கும் அதிக அளவில் சலுகைகள் அறிவித்திருப்பதை நான் வரவேற்கின்றேன். கூட்டுறவுக் கடன்களையெல்லாம் தள்ளிய இந்த அரசு, கூட்டுறவு நிறுவனங்களுக்கு 1,628 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதிலே குறிப்பாக, வேளாண்மைக் கடன்களுக்கு வருங்காலங்களிலே 1,360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்ததற்காகத் தஞ்சை மாவட்ட விவசாயிகளின் சார்பாக மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, இந்தத் தொகைக்கெல்லாம் 5 சதவீத வட்டியிலே கடன் வழங்குவது என்பது ஒரு சிறப்புமிகு திட்டமாகும். ஏனெனில், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே ஒவ்வொரு முறையும் அதிகமான வெள்ளத்தையும், வறட்சியையும் மாறி, மாறிச் சந்தித்துக்கொண்டிருக்கின்ற நேரத்திலே இதுபோன்ற சலுகைகளைத் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குக் கொடுத்தமைக்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், கடந்த ஐந்தாண்டு காலமாக உறுப்பினர்கள் சேர்க்கப்படாமல் இருக்கக்கூடிய காரணத்தினாலே பல பேர் அதன்மூலமாகப் பயனடைய இயலாமல் உள்ளது. எனவே, விரைவிலே கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய கடன் வழங்கக்கூடிய மற்ற கூட்டுறவு வங்கிகள் பல வருடங்களாக நலிவடைந்த நிலையில் உள்ளன. ரிசர்வ்





வங்கியைப் பொறுத்தவரையிலே, இந்த வங்கிகள் 11 (1) என்ற பிரிவின்கீழ் வைக்கப்பட்டுள்ளன. இந்த வங்கிகளுடைய நிதிநிலை மேம்பட அரசு கவனம் எடுத்துக்கொண்டு, அதைச் சிறப்புடன் செயல்படக்கூடிய வகையிலே சீரமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலங்களிலே பட்டுக்கோட்டைப் பகுதியிலே கடன் கொடுக்கும்போது சில பகுதிகளிலே ஏக்கருக்கு 8 ஆயிரம் ரூபாய் வரை கொடுத்தார்கள். சில இடங்களிலே 4,000 4,500 ரூபாய் வரையும் கொடுத்தார்கள். பட்டுக்கோட்டையில் 3 போகம் சாகுபடி செய்யக்கூடிய, ஆழ்குழாய்க் கிணறு வைத்திருப்பவர்களுக்கெல்லாம் நன்கு ஆராய்ந்து, அவர்களுக்கும் 8 ஆயிரம் ரூபாய் வருங்காலங்களில் கிடைப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இந்த அரசைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் கிட்டத்தட்ட 7 ஆயிரம் கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். வரக்கூடிய காலங்களிலும் கடன் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். அது சிறந்த முறையில் நடைபெறுவதற்கு ஒவ்வொருவருக்கும், பான் எண் பெற்றவர்களுக்கெல்லாம் நிரந்தரக் கடன் எண்--PAN என்று சொல்லக்கூடிய அந்த Permanent Account Number-ஐக் கொடுத்து, மத்தியக் கூட்டுறவு வங்கிக் கடன்களைக் கணினியில் பதிவு செய்து, அவர்களுக்கு விரைவிலே கடன் வசதி வழங்குகின்ற திட்டத்தையும் நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்தால், அது எங்கள் மாவட்டத்தில் விவசாயிகளுக்குப் பெருமளவிலே உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, நெல்லுக்கு அடுத்தபடியாக இருக்கக்கூடியது தென்னை. தென்னையைப் பொறுத்தவரையிலே, அதனுடைய விலை, supporting price-ஐக் கொடுக்க வேண்டுமென்று கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத்திலே பேசும்போது இங்கே மரியாதைக்குரிய முதல்வர் அவர்களிடமும், மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களிடமும் கோரிக்கை வைத்திருந்தோம். தென்னையினுடைய விலை வீழ்ச்சி அடைந்திருக்கிறது. இன்றைக்கு 2 ரூபாய் 70 பைசாவிற்குத் தேங்காய் விற்கக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கின்றது. கொப்பரைக் கொள்முதலைப் பொறுத்தவரையில் தற்போது நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதை உடனடியாகத் தொடங்குவதற்கு நீங்கள் ஆவன செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மைத்

துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம். ஏனெனில், கொப்பரையைச் சரியாக அவர்கள் கொள்முதல் செய்யாத காரணத்தினால், தேங்காயினுடைய விலை மிகக் கடுமையாக வீழ்ச்சி அடைந்துகொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு மாதங்களில் அதிக அளவிலே தேங்காய் விளையும்போது இன்னும் வீழ்ச்சியடையும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒரு கிலோ கொப்பரைத் தேங்காய் என்ன விலைக்கு விற்கிறது என்று அறிய விரும்புகின்றேன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** தற்போது outside market-ல் 29 ரூபாய்க்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், 36 ரூபாய்க்கு அவர்கள் அரசாங்கத்திலே கொள்முதல் செய்தாலும்கூட, தற்போது கொள்முதல் செய்யப்படாமல் இருக்கின்றது. நாங்கள் கடந்த ஆண்டு காலத்திலே மரியாதைக்குரிய முதல்வர் அவர்களிடத்திலும், தங்களிடமும், 40 ரூபாயாக உயர்த்திக் கொடுங்கள், அதில் 4 ரூபாய் தமிழக அரசு subsidy-யாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றோம். அதற்கு இந்த வருடத்தில் நீங்கள் ஆவன செய்து கொடுக்க வேண்டுமாய் நான் தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பாக உங்களிடம் என் அன்பான கோரிக்கையாக வைத்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, ரேஷன் கார்டு விண்ணப்பத்தைப் பொறுத்தவரையில், தினமும் ரேஷன் கார்டு விண்ணப்பங்கள் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். நேற்றுகூட எங்களிடம், சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தால் உடனே கிடைக்கும் என்பதற்காக வந்தார்கள். நாங்களும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே, மிக விரைவாக இந்த ரேஷன் கார்டு விண்ணப்பங்களை எல்லாம் பரிசீலித்து, உடனடியாக அதைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், நடுவிலே விவசாயிகளுக்கெல்லாம் கார்டுகள் அடிக்க வேண்டிய காரணத்தால் ஏல்காட்டிலே மிகக் காலதாமதமாக அடிக்கின்றார்கள் என்று சொன்னார்கள். எனவே, நீங்கள் ரேஷன் கார்டுகள் மிக விரைவாகக்





கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றை எல்லாம் இன்றைக்கு அரசே கொள்முதல் செய்து, அதை மக்களுக்கு விநியோகிப்பது என்பது மிகவும் நல்ல திட்டமாகும். இதன்மூலமாக விலைவாசிகள் நிச்சயமாகக் கட்டுப்படுத்தப்படும். ஏழையெளிய மக்களுக்கு ஒரு சிறப்பான திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தி இருப்பதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது நல்ல முறையில் நடக்கக்கூடிய வகையில் நீங்கள் நன்றாகச் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போர்டு கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய கனவு நனவாகக்கூடிய வகையிலே சர்வ சிக்ஷா அபியான் திட்டத்திற்காகத் தமிழக அரசினுடைய பங்காக 375 கோடி ரூபாயை நீங்கள் ஒதுக்கீடு செய்து இருப்பதற்காக என்னுடைய பாராட்டுக்கள், நன்றி. அதேபோன்று, கட்டடங்களை சர்வ சிக்ஷா அபியான் திட்டம் மூலம் நீங்கள் கொடுக்கும்போது பள்ளியிலே ஒரு குழுவை அமைக்கின்றார்கள். தலைமையாசிரியர், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய முக்கியப் பிரமுகர்களை எல்லாம் அழைத்து, பெற்றோர்-ஆசிரியர் கழகத்தினரையும் சேர்த்து அமைத்து, அவர்கள்மூலமாக அந்தக் கட்டடங்களைக் கட்டச் சொல்கின்றீர்கள். ஆனால், அந்தப் பள்ளிகளிலே பெண் தலைமையாசிரியைகள் இருக்கக்கூடிய இடங்களிலே எல்லாம் நிறைய இடர்ப்பாடுகள் இருக்கின்றன. ஆண்களில் யாராவது ஒருவர் பொறுப்பேற்றுக்கொண்டு, நாங்கள் கட்டுகிறோம் என்று சொல்லிவிட்டு, பணத்தை வேறொருவிதமாக rotate செய்துவிட்டு, உடனே அதற்கு நான்கு பேர் ஊரிலே போய்ப் பஞ்சாயத்து வைத்துப் பணத்தை வாங்க வேண்டியுள்ளது. எனவே, இதுபோன்ற முறைகேடுகளைத் தவிர்ப்பதற்காக, அந்தத் திட்டத்தை மாற்றிவிட்டு, மாவட்டக் கட்டட மையம்மூலமே நீங்கள் அதைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை அரசு யோசிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சர்வ சிக்ஷா அபியான் திட்டம் மூலமாகக் கல்விக்காக எல்லாக் காரியங்களையும் செய்து கொடுக்கிறார்கள். கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுகிறது. சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்கப்படுகிறது. தற்போதுகூட நமது கல்வி அமைச்சர் அவர்கள், ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்படும், கழிவறைகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று

அறிவித்திருக்கிறார்கள். ஆனால், நீண்ட காலமாக இந்தப் பள்ளிகளுக்கெல்லாம் bench, desk-களை யாரும் வழங்குவது இல்லை. எந்தத் திட்டத்திலும் வருவது கிடையாது. எனவே, bench, desk-களை வாங்க வேண்டுமென்று சொன்னால், இப்போது அதிகமாக மாணவர்களைச் சேர்க்கக்கூடிய நேரங்களிலே தனியார்களிடம் சென்று நன்கொடையாகப்பெற்று அவற்றைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்காகத் தனி நிதி ஒதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளிலே இருக்கக்கூடிய மாணவர்களுக்குத் தேவையான bench, desk-களை வழங்குவதற்கு NABARD வங்கியிலே ஏற்கெனவே நாங்கள் பேசி இருக்கிறோம். இதே அவையிலே நான் பல முறை குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். இதுவரை NABARD வங்கி அந்த் bench, desk-களைக் கொடுப்பதற்கு நிதியுதவி வழங்கவில்லை. முதல் முறையாக இப்போது அவர்கள் ஒத்துக்கொண்டு, அதற்கு ஏறத்தாழ 70 கோடி ரூபாய் அளவிற்குக் கடனுதவி வழங்குவதற்கு இப்போது NABARD வங்கியினர் ஒப்புதல் அளித்து இருக்கிறார்கள். விரைவிலேயே நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அதற்கான ஆணையைப் பிறப்பிப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** நன்றி. அதேபோன்று, சர்வ சிக்ஷா அபியான் பள்ளி என்று சில பள்ளிகளை நீங்கள் தேர்ந்தெடுத்து, அந்தப் பள்ளிகளிலே பட்டதாரி ஆசிரியர்களை நியமித்து, நல்ல முறையிலே அவற்றை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். அதேபோன்று, 6, 7, 8 ஆம் வகுப்புகளில், மற்ற இடங்களிலும் பாடவாரியாக அதற்குரிய பட்டதாரி ஆசிரியர்களை நியமித்து, நல்ல முறையிலே அவர்களுக்கெல்லாம் நல்ல வசதி கிடைக்கக்கூடிய வகையிலே ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, அரசு உதவி பெறக்கூடிய தனியார் பள்ளிகளிலே பணியிடங்கள் நிறைய நிரப்பப்படாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். அது என்ன கோரிக்கை என்று நீங்கள் முடிவு செய்து, ஒரு வேளை அப்படியிருக்கிறது என்று சொன்னால், அந்தப் பள்ளிகளுக்கெல்லாம் ஆசிரியர்களையும், பணியாளர்களையும் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





அதேபோன்று, இன்றைக்குப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையிலே, சிறந்த முறையிலே புதிய பேருந்துகள் எல்லாம் பல இடங்களிலே விடப்பட்டு, குறிப்பாக எனது பட்டுக்கோட்டைத் தொகுதிபோன்ற பல இடங்களுக்கு நான் செல்லும்போதெல்லாம் புதிய பேருந்துகள் சிறப்பான முறையில் இயக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. பொது மக்களுக்கு மிகவும் அதிகமாக உபயோகப்படக்கூடிய வகையிலே மிகச் சிறப்பாக இயக்கப்பட்டுக்கொண்டிருப்பதற்காக அரசுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

மருத்துவத் துறையைப் பொறுத்தவரையிலே, கடைநிலைப் பணியாளர்களை முழு அளவிலே நீங்கள் நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திக்கொண்டே இருக்கின்றோம். அதை இந்த வருடம் செய்து கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மருத்துவத் துறையில் மாவட்ட அளவிலே J.D. என்ற ஒரு post இருக்கின்றது. நாங்கள் ஏதேனும் காரியங்களாக அவர்களிடம் பேச வேண்டும் என்று சொன்னால், அவர்கள் retire ஆகக்கூடிய stage-லே அதிகபட்சமாக 6 மாத காலம்தான் J.D. ஆக இருக்கின்றார்கள். சமயத்திலே cellphone-லே phone போட்டோம் என்று சொன்னால், சார் நான் retire ஆகிவிட்டேன், இன்னார் J.D. ஆக வந்திருக்கிறார் என்று அவர்கள் சொல்லும்போது, எங்களுக்கு யாரிடம் சொல்வது என்று புரியாத புதிராக இருக்கிறது. எனவே J.D. ஆக இருக்கக்கூடியவர்கள் குறைந்தபட்சம் ஒரு வருடமாவது அந்தப் பதவியிலே பணிபுரியக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி இருந்தால்தான் அவருடைய களப் பணியும் சரியான முறையில் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, M.R.I. scan-க்கு சின்னச் சின்ன சிகிச்சைக்கெல்லாம் 100 ரூபாய், 200 ரூபாய் என்று வாங்குகிறார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையிலே, மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் தாயுள்ளத்தோடு பல விஷயங்களை எல்லாம் ஏழை எளிய மக்களுக்குச் செய்துகொண்டிருக்கக்கூடிய வேளையிலே, விபத்துக்குள்ளாகி ஒருவர் வரும்போது அவரிடம் விபத்துக்காக 350 ரூபாய் அல்லது 500 ரூபாய் அல்லது ஏதாவது ஒரு amount-ஐப் பெற்றுக்கொண்டுதான் scan எடுத்துக் கொடுக்கிறார்கள். அவருக்கு surgery செய்ய வேண்டியிருக்கிறது என்று சொன்னால், அதற்குத் தனியாரிடத்திலே சென்றால், 50 ஆயிரம் ரூபாய்

[திரு. என்.ஆர். ரங்கராஜன்] [2007 மார்ச் 26

செலவாகக்கூடிய surgery-ஐக்கூட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே இலவசமாகச் செய்து கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட பெரிய காரியத்தைச் செய்யும்போது, இந்த scan–க்கும், M.R.I.க்கும் பணம் வாங்க வேண்டுமா என்பதை அரசு யோசித்து, நல்ல திட்டங்களைத் தீட்டி, அதை இலவசமாக ஆக்கிக் கொடுக்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை டெல்டா மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, நாங்கள் எல்லாம் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், காவிரி நீரை நம்பி இருப்பவர்கள். மரியாதைக்குரிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நீண்ட அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்களிடம் எங்களுடைய சிறு கோரிக்கையாக நான் வைப்பது, காவிரி நீரைப் பொறுத்தவரையிலே, கல்லணைக் கால்வாய்களைப் பழுது நீக்க 40 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டிக் கொடுக்கிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். பட்டுக்கோட்டை, பேராவூரணிப் பகுதிகளிலே கடந்த ஆண்டு அதிக அளவுத் தண்ணீர் இருந்தபோதிலும்கூட—120 அடி இருந்தபோதிலும்கூட பட்டுக்கோட்டை, பேராவூரணி கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் வரவில்லை. அப்போதுகூட நான் பல முறை எல்லோரிடமும் எடுத்துச் சொன்னேன். ஆனால், அன்றைக்கு அதிகாரிகள் எல்லாம் மிகவும் முயற்சி செய்தும்கூட வரவில்லை என்று சொன்னால், கல்லணையிலிருந்து எடுக்கக்கூடிய தண்ணீரைக் 'குறைந்தபட்சம் 4 ஆயிரம் கன அடி வெளியிலே எடுத்துவிட்டால்தான், எங்கள் பகுதிக்குத் தண்ணீர் வரும். ஆனால், இன்றைக்கு 3,000, 3,500 கன அடிதான் எடுக்க முடிகிறது. என்ன காரணம் என்று சொன்னால், தலைப் பகுதியிலே இருக்கக்கூடிய வாய்க்கால்கள் பலமிழந்து இருக்கின்றன. கடந்த 70 ஆண்டு காலமாக major renovation எதுவுமே அதிலே கிடையாது. Sluice என்று சொல்லக்கூடிய மதகுகள் எல்லாம் அங்கே கட்டப்பட வேண்டியிருக்கின்றன. மிக மூத்த, அனுபவம் வாய்ந்த பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய காலத்திலேயே இதை ஆய்வு செய்து—கல்லணையைக் கட்டிப் புகழ்பெற்றான் கரிகாலன்—கல்லணைக் கால்வாயைக் கட்டிச் சீரமைத்துக் கொடுத்தார் டாக்டர் கலைஞர் என்று தஞ்சை மாவட்ட மக்களுடைய மனதிலே என்றும் நிரந்தரமாக இடம்பெறக்கூடிய வகையிலே நீங்கள் அதைச் செயல்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தஞ்சை மாவட்ட விவசாயிகளுடைய சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2007 மார்ச் 26] [திரு. என்.ஆர். ரங்கராஜன்]

அதேபோன்று, பட்டுக்கோட்டைத் தொகுதியிலே, அந்தப் பகுதிகளில் எல்லாம் கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர், 12 கிலோ மீட்டரிலே கடல் பகுதி ஆரம்பித்துவிடக்கூடிய காரணத்தினாலே, நாளுக்கு நாள் உப்புத் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. 3 வருடங்களுக்கு முன்பு ஆய்வு செய்த மாணவர்கள், இன்னும் சிறிது காலம் போனால் ஒரத்தநாடு வரை தண்ணீர் உப்பாக மாறக்கூடிய அபாயம் இருக்கிறது என்றெல்லாம் ஓர் அறிக்கையிலே குறிப்பிட்டார்கள். அதையெல்லாம் மனதிலே கொண்டு, பட்டுக்கோட்டைப் பகுதியிலே பாத்துவனாச்சி, செல்லிக்குறிச்சி ஆகிய மிகப் பெரிய ஏரிகள் எல்லாம் இருக்கின்றன. மழை நீரைச் சேகரிப்பதற்கு, நல்ல முறையிலே தண்ணீர் தேக்கக்கூடிய வகையிலே அவற்றைத் தூர் வாரிக் கரைகளைப் பலப்படுத்திக் கொடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக் கோரிக்கைக்கு நான் இந்த நேரத்திலே வந்துவிடுகின்றேன். மரியாதைக்குரிய அண்ணன் திரு. ஞானசேகரன் அவர்கள் கூறியதுபோல, Old Age Pension திட்டம், விதவைக்கு நல உதவி கொடுக்கக்கூடிய திட்டம் ஆகிய இதுபோன்ற நல்ல திட்டங்களை அரசு அமல்படுத்தும்போது, அதில் அதிகாரிகளால் மிக, மிகக் காலதாமதம் செய்யப்படுகிறது. கிட்டத்தட்ட ஆறு மாதம், ஏழு மாதம்கூட வயதானவர்களை எல்லாம் அலைய வைக்கின்றார்கள். அதுபோன்று நிகழாதவாறு, ஒரு மாதமோ அல்லது இரு மாதமோ அல்லது குறிப்பிட்ட நாட்களுக்குள் அது கொடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதிப் பிரச்சினைக்கு வந்துவிடுகின்றேன்.

மரியாதைக்குரிய நமது முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கையாகக் கொடுத்திருந்த bye-pass திட்டம் மரியாதைக்குரிய நமது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்படும் என்று கடந்த முறை அறிவித்தார்கள். அதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, பட்டுக்கோட்டையினுடைய மிகுந்த போக்குவரத்து நெருக்கடியை மனதிலேகொண்டு இந்த நிதியாண்டிலே அவற்றைச் செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மரியாதைக்குரிய நமது மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டைப் பகுதிக்கு வந்து எல்லாப் பாலங்களையும் ஆய்வு செய்தார்கள். ஆய்வு செய்து அவர்கள் உத்தரவிட்டும்கூட, சில பாலங்களின் வேலைகள் இன்னும்

நடைபெறவில்லை. குறிப்பாக, கொண்டிக்குளம் என்ற பாலம் 56 பேர் இறந்து போன பாலம். அந்தப் பாலத்தினுடைய பணி இன்னும் தொடங்கப்படாமல் இருக்கின்றது. உடனடியாகக் கடுமையாக உத்தரவிட்டு, அந்தப் பணியினைத் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அய்யா அவர்கள் பட்டுக்கோட்டையிலே தாலுக்கா காவல் நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கடந்த ஆண்டிலே, நான் அவரிடம் கோரிக்கை வைத்திருந்தேன். பொன்னை வைக்கின்ற இடத்திலே பூவை வைக்கிறோம் என்று தஞ்சையிலே ஒரு பழமொழி சொல்வார்கள். அதேபோன்று அவர்கள் அதைச் செய்ய முடியாவிட்டாலும்கூட, அந்தக் காவல் நிலையத்தைத் தரம் உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். எனவே, வரக்கூடிய நிதியாண்டிலே பட்டுக்கோட்டைக்கு ஒரு புதிய தாலுக்கா காவல் நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-20

அதேபோன்று, இன்றைக்கு நாங்கள் மரியாதைக்குரிய அண்ணன் ஞானசேகரனோடு பொதுக் கணக்குக் குழுவிலே பல இடங்களுக்குச் செல்லும்போது, ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகமும் மிக அழகாக அமைந்திருக்கிறது. ஆனால், தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் என்பது மிகவும் பழைமையானது. வெள்ளைக்காரர் காலத்திலே கட்டப்பட்ட அந்த அலுவலகத்தில் மிக நெருக்கடியாக உள்ளது. கார்கள் நிறுத்துவதற்கெல்லாம் மிக நெருக்கடியான ஒரு நிலைமையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிற காரணத்தினாலே, தஞ்சை மாவட்டத்திலே ஒரு புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான இடம் வேண்டுமானால், அங்கே சிறுவர் சீர்திருத்தப் பள்ளி 32 ஏக்கரிலே அமைந்திருக்கின்றது, ஏராளமான இடங்கள் அங்கு காலியாகக் கிடக்கின்றன. அதிலே ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு, அந்தப் பகுதியிலே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை அமைத்துக் கொடுத்தால், தஞ்சை மாவட்ட மக்களுக்குப் பெருமை மிக்க ஒரு விஷயமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கடந்த முறை தஞ்சை வரும்போது பட்டுக்கோட்டையிலே பாதாளச் சாக்கடைத் திட்டம் சுமார் 26 கோடி ரூபாயிலே நிறைவேற்றப்படும் என்று எங்களிடையே அவர்கள் சொல்லியிருந்தார்கள். இந்த வருடமே அந்த நிதியை ஒதுக்கீடு செய்து, பணிகளை ஆரம்பிப்பதற்கு ஆவன செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த முறை சட்டமன்றத்திலே நான் கோரிக்கை வைத்தபோது தஞ்சை மாவட்டத்தினுடைய சவலைக் குழந்தையாக இருந்துகொண்டிருந்த பட்டுக்கோட்டைத் தொகுதியைப் பொறுத்தவரையிலே, திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகுதான் அது ஊட்டச் சத்து மிகுந்த குழந்தையாக இன்றைக்கு வளர்ந்துகொண்டிருக்கின்றது. அந்த வகையிலே நமது மரியாதைக்குரிய அய்யா டாக்டர் கலைஞர் அவர்கள், அவர்களுடைய உத்தரவின்பேரிலே விவசாயத் துறை அமைச்சர் அவர்கள், தென்னை வளாகத்தை அமைத்து, அதற்கான இடத்தையெல்லாம் தேர்வு செய்து கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், மரியாதைக்குரிய அய்யா டாக்டர் கலைஞர் அவர்களுடைய உத்தரவின்பேரிலே--அங்கே வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வேண்டுமென்று கேட்டிருந்தேன்--அதைக் கடந்த வாரம் வந்து திறந்து வைத்திருக்கின்றார்கள். அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கோ ஒரு மூலையில் கடைக்கோடித் தொண்டனாக, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை மானாமதுரை நகரத்தினுடைய இளைஞர் அணித் தலைவராகவும், மானாமதுரை நகரத்தினுடைய அம்மா பேரவையினுடைய இணைச் செயலாளராகவும், நகரக் கழகத்தினுடைய செயலாளராகவும், இன்றைக்கு ஒன்றியக் கழகச் செயலாளராகவும் நியமனம் செய்து, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தனித் தொகுதியில் இரண்டு முறை வாய்ப்புக் கொடுத்து, இந்த முறை வெற்றிபெறச் செய்து, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த

மாமன்றத்தில் 2007–2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த ஏழைகளின் இதய தெய்வம், வாழும் வள்ளல், எங்களின் குல தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இரண்டு முறை வாக்களித்து, என்னை வெற்றிபெறச் செய்த என்னுடைய மானாமதுரைத் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினைக்கு வருகின்றேன். என்னுடைய மானாமதுரைத் தொகுதியிலுள்ள மானாமதுரைப் பேரூராட்சி, மானாமதுரை காவல் நிலையத்திற்கும், கிருஷ்ணராஜபுரம் தெருவிற்கும் இடையில் ஒரு தரைப் பாலம் கட்டுவதற்குக் கடந்த தி.மு.க. ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் மறைந்த தா. கிருட்டிணன் அவர்களால் 25–2–2001 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு இந்த அரசு ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, பாலத்தைக் கட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்தப் பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது, அண்ணன் தா. கிருட்டிணன் அவர்கள் இரண்டாண்டு காலம் அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும்போது அந்தப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார். கடந்த ஐந்து ஆண்டு காலம் இவர்களுடைய ஆட்சியில் என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ம. குணசேகரன்:** அந்தப் பாலத்திற்கு அவர் அடிக்கல் நாட்டினாரேயொழிய, அதற்கான டெண்டர் விடுவதற்குரிய நிதியை ஒதுக்காமல் சென்றுவிட்டார். அந்தப் பாலம் கட்டப்பட்டால், பள்ளிக் குழந்தைகளும், சுமார் 35 கிராமங்களின் மக்களும் பயன்பெறுவார்கள்.



மேலும், மானாமதுரைத் தொகுதியில் இதுவரை ஒரு அரசுக் கல்லூரி இல்லை. அதனால் மானாமதுரைத் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்று கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மானாமதுரைத் தொகுதியில் அரசு சார்பாக ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மானாமதுரையில் ஓர் அரசு மருத்துவமனை இருக்கிறது. இது மதுரையிலிருந்து இராமேஸ்வரம் வரைக்கும் தேசிய நெடுஞ்சாலையில் இருக்கின்ற ஒரு பெரிய மருத்துவமனை. இந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மானாமதுரையில் அந்தப் பகுதியினுடைய மக்களின் நலன் கருதி, நல்ல தண்ணீர் வசதியும், அதிகமான இடமும் இருக்கின்ற எங்களுடைய சிப்காட் வளாகத்தில் bus body கட்டும் தொழிற்சாலை ஒன்று கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–25

மானாமதுரை சிப்காட் வளாகத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வந்த ஜிப் தொழிற்சாலை சமீபத்தில் கதவடைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த ஜிப் கம்பெனியில் வேலை பார்த்த தொழிலாளர்களினுடைய நலனைக் கருதி, அந்தத் தொழிற்சாலையை மீண்டும் இயங்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரையிலிருந்து சென்னைக்கு நவீன வசதிகளுடன்கூடிய ஒரு அரசு விரைவுப் பேருந்தை இயக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இந்தப் பகுதியில் தற்போது அகல இரயில் பாதை வேலைகள் நடந்துகொண்டிருப்பதால் மானாமதுரையிலிருந்து சென்னைக்கு வருவதற்கு மதுரை வந்துதான் செல்ல வேண்டும் என்ற ஒரு நிலை இருப்பதனால், மானாமதுரையிலிருந்து சென்னைக்கு ஒரு அரசு விரைவுப் பேருந்தை இயக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மானாமதுரைத் தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் பேரூராட்சியில் இதுவரை பேருந்து நிலையமே இல்லை. அந்தத் திருப்புவனம் பேரூராட்சிக்கு ஒரு பேருந்து நிலையம் கட்டித் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. ம. குணசேகரன்] [2007 மார்ச் 26

மானாமதுரைத் தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் பேரூராட்சியில் ஒரு அரசு சமூக நல மருத்துவமனை இயங்கி வருகின்றது. அந்த மருத்துவமனையில் எந்தவிதமான நவீன வசதியும் இல்லை. அந்த மருத்துவமனையை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மானாமதுரைத் தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் பேரூராட்சியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,500-க்கும் மேற்பட்ட மாணவிகள் பயின்று வருகிறார்கள். அந்த இடத்தில் இட நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால், அந்த இடத்தை மாற்றி, வேறு ஒரு இடத்திற்கு அந்தப் பள்ளியைக் கொண்டு செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரைத் தொகுதி, மானாமதுரைப் பேரூராட்சியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் அதே நிலைதான் நீடிக்கின்றது. அந்தப் பகுதியிலே வேறு இடங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்த அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியையும் வேறு இடத்திற்குக் கொண்டு வந்து, அந்தப் பள்ளியைச் சிறப்பாக நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மானாமதுரைப் பகுதியில் ஓடும் வைகை ஆற்றை சுத்தப்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மானாமதுரைத் தொகுதியில் ஓடும் வைகை ஆற்றில், மணல் திருட்டை ஒழிக்கும் வகையில் விரகனூர் மதகு அணையிலிருந்து பார்த்திபனூர் மதகு அணை வரை மணல் அள்ளுவதற்குத் தடை செய்யப்பட்ட பகுதியாக இந்த அரசு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரைத் தொகுதி திருப்புவனம் ஒன்றியத்தில், மானாமதுரைத் தொகுதியிலிருந்து மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்கு என்னுடைய தொகுதியில் இருந்துதான் குடிநீருக்காகத் தண்ணீர் கொண்டு செல்லப்படுகின்றது. ஆனால், என்னுடைய மானாமதுரைத் தொகுதியில் வயல்சேரி பகுதியில் குடிநீர் கிடைக்கவில்லை. அதனால் அந்தப் பகுதியிலே வயல்சேரியை மையமாகக் கொண்டு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மானாமதுரைத் தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தில் உள்ள சிறப்பு வாய்ந்த மடப்புரம் அருள்மிகு ஸ்ரீபத்ரகாளியம்மன் கோயிலை அழகுபடுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

2007 மார்ச் 26] [திரு. ம. குணசேகரன்]

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, தமிழகத்தின் ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நாமம் போடுவதற்காக நாமக்கட்டிக்கு வரியைக் குறைத்திருக்கின்றது. 2006–2007-ல் அறிவித்த நிதிநிலை அறிக்கை வார்த்தை ஜாலங்களால் மட்டுமே மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்காக மட்டுமே தயார் செய்யப்பட்டுள்ள ஒரு நிதிநிலை அறிக்கையாக இந்த 2007–2008-க்கான நிதிநிலை அறிக்கை உள்ளது.

தி.மு.க. வின் சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் இலவசமாகத் தருகிறோம் என்று சொன்ன இந்த அரசு, தற்போது கையளவு நிலமாக இருந்தாலும்கூட விவசாயிகளுக்குத் தருகிறோம் என்று மக்களை ஏமாற்றி வருகின்றது.

எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த பொற்கால ஆட்சியில், அரசுக்கு வருமானம் கிடைத்திட அரசு மதுபானக் கடைகளை அரசே ஏற்று நடத்துவதற்கும், மணல் கொள்ளையைத் தடுக்கும் வகையில், அரசு மணல் குவாரிகளை அமைத்து, அரசுக்கு வருவாயைப் பெருக்கி, மக்கள் நலத் திட்டங்களை உருவாக்கி, ஏழை எளிய மக்களுக்குப் பல நலத் திட்ட உதவிகளைச் செய்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்த அரசு, சட்டமன்றத் தேர்தலின்போது தேர்தல் அறிக்கையில், தமிழகத்தில் உள்ள அனைத்து ஏழை எளிய பெண்களுக்கும் இலவச கலர் தொலைக்காட்சிப் பெட்டி தருகிறோம் என்று உண்மைக்கு மாறான கருத்தைச் சொல்லி ஆட்சிக்கு வந்து இந்த தி.மு.க. அரசு, இன்றைக்குப் பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் உள்ள தனது தி.மு.க. கட்சிக்காரர்களுக்கு மட்டுமே வழங்கி வருகின்றது.

கூட்டுறவுத் துறையில், 1996 முதல் 2000 வரை தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது அன்றைக்குக் கூட்டுறவுத் தேர்தலை நடத்தி, அதில் சட்ட விரோதமாகவும், அடாவடித்தனமாகவும் அன்றைக்கு தி.மு.க.காரர்களையே தலைவர்களாக நியமனம் செய்து, தி.மு.க.காரர்களுக்குக் கடன்களை வாரி வழங்கி, அந்தத் தி.மு.க.காரர்களைக் காப்பாற்றுவதற்காக இன்றைக்குப் பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்கிறோம் என்று ஒரு உண்மைக்கு மாறான திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

2007–2008-க்கான நிதிநிலை அறிக்கையில் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அகவிலைப் படியை 6 சதவிகிதம் உயர்த்தியுள்ள இந்த அரசு, இன்றைய முதலமைச்சர், தினந்தோறும் 40 ஆண்டு கால

[திரு. ம. குணசேகரன்] [2007 மார்ச் 26

நண்பர் என்று பறைசாற்றுகின்ற டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த சத்துணவு மையங்களில் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர்களைக் கண்டுகொள்ளவில்லை. அவர்களுக்கு எந்தச் சலுகையும் காட்டவில்லை. . .

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27–3–2007) செவ்வாய்க்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம், திருவாளர்கள் கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலத்திற்கு விற்பனை செய்யப்படும் மின்னணுப் பொருட்கள் மற்றும் காகிதங்களுக்கு எந்தவொரு வணிகரும் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 11–8–2006 ஆம் நாளிட்ட 86 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. தமிழ்நாட்டில் சென்னை, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2,500 வீடுகள் கட்டுவதற்காக சென்னை–92–ல் அமைந்துள்ள திருவாளர்கள் மாதா அமிர்தானந்தமயி மடத்திற்கு அறிவிக்கையின் இணைப்பு–II–ல் பட்டியலிடப்பட்டுள்ள கட்டுமானப் பொருட்களை விற்பனை செய்வதற்கு அறிவிக்கையின் இணைப்பு–I–ல் உள்ள படிவத்தில் மடத்திலிருந்து பெறப்பட்ட சான்றிதழைத் தாக்கல் செய்ய வேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டு, யாதொரு வணிகரும் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 15–9–2006 ஆம் நாளிட்ட 109 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



2007 மார்ச் 26]

3. சொந்தமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்களுக்கு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் தகவல் தொழில்நுட்பத் துறையினால் வாங்கப்படும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 6–10–2006 ஆம் நாளிட்ட 120 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. யாதொரு வணிகரும், மொத்த வியாபாரத் தொகை ஆண்டொன்றுக்கு ரூபாய் முந்நூறு கோடிக்கு மேற்படாத அளவிற்கு விற்பனை செய்கிற முற்றிலும் எண்ணெய் நீக்கப்பட்ட புண்ணாக்கு உள்பட புண்ணாக்கு, உடைத்த பருப்பு, மேல்தோல் மற்றும் தூள் உள்ளிட்ட பட்டாணி மற்றும் பட்டாணிப் பருப்பு ஆகியவற்றின்மீது செலுத்தத்தக்க வரிக்கு விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 6–10–2006 ஆம் நாளிட்ட 121 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. (i) சென்னை மாவட்டம் நீங்கலாக, அந்தந்த மாவட்டங்களைப் பொறுத்தவரையில், அதிகார வரம்பைப் பெற்றுள்ள மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர்களும், சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதிகார வரம்பைப் பெற்றுள்ள தொழில் மற்றும் வணிகத் துறையின் வட்டார இணை இயக்குநரும் சம்பந்தப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள மிகச் சிறிய மற்றும் சிறிய தொழில் நிறுவனங்கள் கோரிக்கையைத் தாக்கல் செய்யக்கூடிய அதிகாரிகள் என்று குறிப்பிட்டும்;

(ii) விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளைப் பொறுத்தமட்டில், அதிகார வரம்பைச் செலுத்துவதற்காக, அவ்விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மிகச் சிறிய மற்றும் சிறிய தொழில் நிறுவனங்களின் உதவிக் குழுக்களை அமைத்தும்;

(iii) விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மிகச் சிறிய மற்றும் சிறிய நிறுவனங்களின் உதவிக் குழுக்களுக்கு அவ்வட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ளவாறான உறுப்பினர்களை நியமித்தும்; மற்றும்

(iv) விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகள், அவ்விவர அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அலுவல்களை சம்பந்தப்பட்ட தங்களுடைய அதிகார வரம்பின்கீழ் வருகிற பகுதிகளில் செலுத்துவதற்காக அவர்களை நியமித்தது குறித்தும்,

சிறு தொழில் (எஸ்.ஐ.பி) துறையின் 8-12-2006 ஆம் நாளிட்ட 63 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு மிகச் சிறிய, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் (மத்திய சட்டம் 27/2006) 30 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

6. சென்னை, திருவாளர்கள் அடையாறு மாணவர் நகலகம் 1993-1994 ஆம் ஆண்டில் விற்பனை செய்த ஜெராக்ஸ் நகல் காகித விற்பனைமீது செலுத்தத்தக்க வரி, அபராதம், மேல்வரி, கூடுதல் மேல்வரி, கூடுதல் விற்பனை வரி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (டி 2) துறையின் 11-12-2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 191-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5), 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

7. சென்னை, திருவாளர்கள் ஸ்மார்ட் சானிட்டரி ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, திருவாளர்கள் வைகை சானிடேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் மதுரை பத்மா என்டர்பிரைசஸ் ஆகிய நிறுவனங்கள் விற்பனை செய்த ரெஸ்டைல் விட்ரிஃபைடு கிளே டைல்ஸ் மற்றும் ரெஸ்டைல் ஆசிட் ஆல்கலி ரெசிஸ்டன்ட் டைல்ஸ் ஆகியவற்றிற்குச் செலுத்த வேண்டிய ஐந்து சதவீதத்திற்கும், பதினாறு சதவீதத்திற்கும் இடையிலான வரி வேறுபாட்டுத் தொகை, விகிதாச்சார அபராதம், மேல்வரி மற்றும்





கூடுதல் மேல்வரி ஆகியவற்றை 13-7-1993 முதல் 31-3-1994 வரை மற்றும் 1-4-1994 முதல் 5-7-1994 வரையிலான கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (டி 2) துறையின் 11-12-2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 192-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனைச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

8. சென்னை, திருவாளர்கள் ஆதித்யா லெதர் எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட் நிறுவனம், REP லைசன்ஸ் விற்பனைமீது 1991-1992 ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் செலுத்த வேண்டிய தண்டத் தொகையினை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (டி 2) துறையின் 26-12-2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 199-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. சென்னை, திருவாளர்கள் ஜா டிரேடர்ஸ் நிறுவனம். தகரத் தகடுகளையும், தகரப் பாளங்களையும் விற்பனை செய்ததன்மீது செலுத்தத்தக்க வரியில் மூன்று சதவீதத்திற்கும், நான்கு சதவீதத்திற்கும் இடையிலான வேறுபாட்டுத் தொகை மற்றும் அபராதத் தொகையினை 27-7-1996 முதல் 24-1-2000 வரையிலான கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (டி 2) துறையின் 26-12-2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 200-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

10. மென்மரக்கட்டை விற்பனைமீது செலுத்தத்தக்க ஐந்து சதவீதத்திற்கும், எட்டு சதவிகித்திற்கும் இடையேயான வரி வேறுபாட்டுத் தொகையினை 1988-1989 முதல் 1989-1990 வரையிலான கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (2டி) துறையின் 27-12-2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 202-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[2007 மார்ச் 26

11. சென்னை, திருவாளர்கள் எஸ்.ஆர்.பி. என்டர்பிரைசஸ் நிறுவனம் விற்பனை செய்த மீண்டும் வலுவூட்டப்பட்ட சிமிட்டி கற்கலவைத் தொட்டிகளின் விற்பனையின்மீது செலுத்த வேண்டிய எட்டு சதவீதம் மற்றும் பன்னிரண்டு சதவீதம், பதினோரு சதவீதம் மற்றும் பதினாறு சதவீதம் ஆகியவற்றுக்கிடையிலான வரி வேறுபாட்டுத் தொகை, விகிதாச்சார மேல்வரி மற்றும் கூடுதல் மேல்வரி ஆகியவற்றை 1993–94 ஆம் ஆண்டு முதல் 1997–98 ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (2டி) துறையின் 28–12–2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 204–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

12. புதுக்கோட்டை, திருவாளர்கள் புதுக்கோட்டை மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம், குடிசைத் தொழில் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி, மேல்வரி மற்றும் அபராதத் தொகையினை 1995–1996 முதல் 1996–1997 வரையிலான கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (2டி) துறையின் 28–12–2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 205–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

13. சென்னை, தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனம் செலுத்தத்தக்க வரி, மேல்வரி, கூடுதல் மேல்வரி, கூடுதல் விற்பனை வரி மற்றும் அபராதம் ஆகியவற்றை 1986–87 வரையிலான கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (2டி) துறையின் 31–12–2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 206–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5), 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) மற்றும் 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



2007 மார்ச் 26]

14. யாதொரு ஏலதாரரும் முந்திரி மரங்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி, மேல்வரி மற்றும் அபராதத் தொகை ஆகியவற்றை 1982–1983 முதல் 1991–1992 வரையிலான கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (டி-2) துறையின் 31–12–2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 207–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

15. வார்ப்பிரும்பினாலான வார்ப்பட உற்பத்தியாளர்களால் விற்பனை செய்யப்பட்ட மாப்பிசின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி, மேல்வரி, கூடுதல் மேல்வரி மற்றும் அபராதத் தொகை ஆகியவற்றை 1–4–1993 முதல் 30–8–1995 வரையிலான கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (டி-2) துறையின் 31–12–2006 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 208–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

16. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பண்ணைகள் கழகத்தின் முப்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

17. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் முப்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

18. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

[2007 மார்ச் 26

19. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம்) முப்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

20. 2005–2006 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் இருபத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2007–2008 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 56 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள். (55 புத்தகங்கள்) (கோரிக்கை எண் 52 தவிர)

2. 2007–2008 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

3. 2007–2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.

4. 2007–2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு–பகுதி–I.

5. 2007–2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு–பகுதி–II.

6. 2007–2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.

7. 2007–2008 ஆண்டுத் திட்டம் (திட்டம்–வரவு–செலவுத் திட்ட இணைப்பு). (2007–2008 ஆம் ஆண்டு விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு)

8. 2007–2008 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல். (பகுதி–II திட்டங்கள்)

9. 2007–2008 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

10. 2007–2008 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட விளக்க நூல். (தமிழ், ஆங்கிலம்)



2007 மார்ச் 26]

11. 2007–2008 ஆம் ஆண்டுச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

12. 2007–2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்த நிதியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

13. "தமிழகத்தில் வரலாற்றுப் பெருமை மிக்க, பழைமை வாய்ந்த திருக்கோயில்களை அவற்றின் பழைமை மாறாமல் சீரமைக்கும் திட்டம்" என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

---

P
V2",3'807
p07.21.3
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227485
சென்னை-600 008
நூலகம்